இதழ் -63

ரூ. 50

கொழும்புத் தமிழ்...
25 JAN 2011
நூலகம்
கொழும்பு தமிழ்ச் சங்
நூலகம்

# இருக்கிறம்

ඉරුක්කිරම්

மாதம் இருமுறை

ஒரு பொல்லாப்புமில்லை

01 ஜனவரி 2011
பக்கங்கள் - 64
காத்திருப்பு 06 இருக்கை 03



நேரடி ரிப்போர்ட்

## அழிவிலிருந்து மீளும் மாங்குளம்!

புனரமைக்கப்படும் இராணுவ முகாம்களும்! உருவாக்கப்படும் புத்தவிகாரைகளும்!


## யாழ்ப்பாணக் குளங்களிலிருந்து கோயில்கள் வரை

## தமிழர் பண்பாடும் நாகரீகமும்

உண்மையின் பதிவு

## அறியாத்தனத்தால் ஏமாற்றமடைந்த மலையகப் பெண்ணின் அழுகுரல்.

வினைத்திறன் மிக்க சேவை
நிர்வாகம் மற்றும் பிரஜைகளின்
ஆலோசனை பெறல்
என்பவற்றினூடாக பொருளாதார
வளர்ச்சியினை
மேம்படுத்துவதற்காக பிரதேச
சபை, நகர சபை, மாநகர சபை
என்பவற்றுடன் இணைந்து
செயற்படும் ஒரு உயரிய
அமைப்பே
“இலங்கை ஆசிய நிலையம்”
உள்ளூராட்சி சபைகளின்
வெளிப்படையான தன்மையை
மேம்படுத்தி, சிறந்த பொருளாதார
வளர்ச்சியை பொதுமக்கள்
அடைவதற்கு அர்ப்பணிப்புடன்
பணியாற்றுவதே ஆசிய
நிலையத்தின் முக்கிய
நோக்கமாகும்.







நியாயமான, சுதந்திரமான நீடித்து நிலைத்திருக்கும் உலகம். இதற்குத்தான் அபிவிருத்திக் கூட்டுறவுக்கான மனிதநேய நிறுவனம் **HIVOS** பங்களிக்க விரும்புகிறது. சகல பிரஜைகளும் அதாவது ஆண்களும், பெண்களும் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களையும், வளங்களையும் சம அளவில் அடையக்கூடியதான ஒரு உலகிற்காக, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலுள்ள உள்ளூர் அமைப்புகளுடன் இணைந்து **HIVOS** பாடுபடுகிறது.

மனிதநேயப் பெறுமானங்களினால் வழிநடத்தப்படும் **HIVOS**, நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த அரச சார்பற்ற அமைப்பாகும். இவ்வமைப்பு ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவிலுள்ள வறிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உழைக்கிறது. இம் மக்களது சூழ்நிலைகளின் நீண்டகால அபிவிருத்திக்காகவும், குறிப்பாக பெண்களை வலுப்படுத்தவும் இது பாடுபடுகிறது.

# இருப்பு



நன்றிது தேர்ந்திடல் வேண்டும் – இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?

-பாரதி-

கொழும்பு தமிழ்ச் சங்கம் நூலகம்



**வணக்கம் உறவுகளே!**

புதிய வருடத்தில் புதிய சிந்தனைகளுடன் எங்களின் வாழ்வுக்கான பயணம் தொடங்கப்பட்டிருக்கின்றது. சோதனைகள், இழப்புக்கள், சொல்லொணா துயரங்கள் என இன்னும் எங்கள் வாழ்வில் ஏற்பட்ட வடுக்களின் வேதனைகள் மாறாமலே இருக்கின்றன. வருடங்கள் மட்டும் வஞ்சகமில்லாமல் நகர்ந்து கொண்டிருக்க, எங்கள் வரலாற்றுத் தடங்களும், பண்பாட்டு மையங்களும் எங்கள் சமூகத்திலிருந்து மெல்ல மெல்ல வலுவிழந்து கொண்டு செல்கின்றன.

எங்களுக்கான எந்தவொரு பலமும் இல்லாத நிலையில் பேனா என்கின்ற ஒரேயொரு பலம் மட்டுமே தற்பொழுது எஞ்சியிருக்கின்றது. இதுதான் எதிர்காலத்தில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தப்போகும் ஆயுதம். கடந்த வருட இறுதியில் விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்திய விடயங்கள் இன்னும் உலக அரசுகளைத் திணறடித்துக் கொண்டிருக்க, எங்கள் சனங்களின் விடிவுக்கான புதிய பாதையை விக்கிலீக்ஸ் அமைத்துத் தந்திருப்பது ஒரு ஆரம்பத்திற்கான அத்திவாரமே.

இந்த வருட ஆரம்பத்தில் கொழும்பில் நடைபெறப் போகும் 'சர்வதேச எழுத்தாளர் மாநாடு' படைப்பியலின் இன்னுமொரு அத்தியாயம் என்றே சொல்ல வேண்டும். புதிய திசையில் பயணிக்கப்போகும் இந்த எழுச்சி புலமெங்கும் புதிதாய் முளைவிட வேண்டும். அதிகமான எழுத்தாளர்களும், கலைஞர்களும் இலக்கியத்தையும், தமிழையும் மாறி மாறி அரைத்துப் புளிக்கவைத்துவிட்ட இந்நிலையில், எங்களுடைய சிந்தனைகள் மறுவடித்தை நோக்கி நகர வேண்டிய கட்டாயம் இன்று ஏற்பட்டிருக்கின்றது. எழுதுகோலைத் தூக்கும் ஒவ்வொரு எழுத்தாளனுடைய சிந்தனையும் சமூகப் பிரக்ஞையை உருவாக்கக்கூடிய புதிய படைப்பியலைத் தோற்றுவிக்க வேண்டும். சமூக சிந்தனைகளுடன் கூடிய படைப்புக்கள் படைக்கப்பட வேண்டும். அதனூடாக எமது தேசத்தின், எம் மக்களின், எம் வரலாற்றின் எதிர்காலத்திற்கான திட்டமிட்ட வரைபு வரையப்பட வேண்டும்.

## 'பேனா'க்கள் பேசுமா?



கட்டுரைகள், கவிதைகள், ஆய்வுகள் என்று எதிலும் எங்களுக்கான இருப்பு பேசப்படுதல் வேண்டும். யுத்தம் முடிந்து அயல்நாட்டு எழுத்துலக நண்பர்கள் எம்மை நோக்கி படையெடுத்திருக்கும் தருணத்தில், இதுவரை புளித்தமாவையே அரைத்துக் கொண்டிருந்த எங்கள் கரங்கள் எம்தேசத்தின் உறவுகளுக்காய் அவர்களுடன் கைகோர்த்து படைப்புலகில் புதிய திருப்பத்தைக் கொண்டுவர முன்வர வேண்டும். புலமெங்கும் இருப்புக்கான புதிய வரலாற்று இலக்கியங்களைப் படைப்பதே இனிவரும் காலங்களுக்கான வலுவான தளமாக அமையும்.

படைப்பாளிகளும், சிற்றிதழாளர்களும் தங்களுக்குத் தாங்களே முடிசூட்டி போற்றிக் கொண்டும், தூற்றிக் கொண்டும் இருப்பதை விடுத்து, அழிந்து போயிருக்கும் சமூகத்திற்கான மாற்றத்தை நோக்கிய பரந்த சிந்தனைக்காக கைகோர்த்துப் பயணிக்க முன்வர வேண்டும்.

இன்று ஏதோ ஒரு நம்பிக்கை எங்கள் மனதில் சுருண்டெழுந்திருக்கின்றது. வேதனைகளுடன் வழிந்தோடும் கண்ணீர் வெறுமனே நிலத்தில் சிந்தாது பேனாக்களின் மைகளாக உருவெடுக்க வேண்டும். ஊடக சுதந்திரம் இல்லை, எழுத்துச் சுதந்திரம் செத்துவிட்டது, நடமாடும் சுதந்திரமும் இல்லை என்றெண்ணி இருக்கின்ற சுதந்திரத்தையும் வீணடிக்காமல் புத்திசாதுரியமாக எங்களின் படைப்புக்களை சர்வதேசத்தை நோக்கி வீறு கொண்டெழ வைப்பதே இன்றைய காலத்தின் தேவையாகும்.

சர்வதேச எழுத்தாளர் மாநாடு இதற்கான ஒரு பாலமாக அமைய வேண்டும் என்ற நம்பிக்கையில் பேனாவுடன் காத்திருக்கும்

உங்கள்...

-ஆசிரியர்-

01-01-2011

# வாசகர் கருத்து

'இருக்கிறம்' 60 பார்த்தேன்.
மனசெல்லாம்
நனைந்தது பனித்துளிகளால்!


ஏழாம் அறிவு
தேடுபவர்களுக்கு
பத்தாவது சுவை
விரும்புபவர்களுக்கு
இருளுக்குள் நிற்பவர்களுக்கு
நிலாக் கொடுக்கிறது
'இருக்கிறம்'

ஒரு வானத்தையே
சஞ்சிகையாக்கி
என்னைப் பறவையாக்கிவிட்டீர்கள்!

'இருக்கிறம்' கடலுக்குள் மூழ்கி
திரும்பினேன்
விண்மீன்களோடு!

தமிழின் சுவையை
புகைப்படமாக்கி
அல்பமாகத் தந்ததற்கு
என் வாழ்த்துப் பூத்தூவல்கள்!
பாராட்டுக் கைதட்டல்கள்!!

**றாஹில்**



டிசம்பர் 05 இல் வெளிவந்த 'இருக்கிறம்' பார்த்தேன். அருமையிலும் அருமை. குறை என்று சொல்வதற்கு ஒன்றுமே இல்லை. அட்டைப்படமும் பின்பக்க படமுமே போதும் ஆயிரம் அர்த்தங்களை விளக்கிக் கூற. நம்நாட்டில் உள்ள ஒரு ஊடகம் இந்தளவு துணிந்து தரமாக அர்ப்பணிப்போடு இயங்குகின்றமை இன்றைய காலகட்டத்தில் ஒரு சாதனையே. வாழ்க வளமுடன்.

**விவேகானந்த ராஜா**
**நெல்லியடி, யாழ்ப்பாணம்**

சென்ற 'இருக்கிறம்' பார்த்தேன். உண்மையில் வாசகர்களுக்கு மதிப்பளித்து அவர்கள் கேட்பதை தருவதில் அதற்கு நிகர் யாருமில்லை. என்னைப் போன்ற பல வாசகர்களது எதிர்பார்ப்புதான் கவிதைகளும் கதைகளும். அதனை சென்ற இதழில் பரிபூரணமாக தந்தமைக்கு நன்றிகள். 'குறிப்பாக படி தாண்டிய பஞ்சவர்ணம்', 'கற்பு காணாமல் போய்விட்டதா?' போன்ற சிறுகதைகளும் 'ஹைக்கூ' மற்றும் ஏனைய கவிதைகளும் சூப்பர்.

**கவிதாயினி, புன்னைச்சோலை, மட்டக்களப்பு**

61 ஆவது 'இருக்கிறம்' பார்த்தேன். தரமாக இருக்கின்றது. ஆனால் ஒருவருடைய பெயரில் இரண்டு ஆக்கங்கள் வெளிவந்துள்ளது. ஏன், அதில் ஒரு ஆக்கத்திற்கு பதிலாக இன்னொருவருக்கு சந்தர்ப்பம் கொடுத்திருக்கலாமே? இன்று எத்தனையோ பேர் எழுத்தாற்றல் இருந்தும் தங்களுக்கோர் களம் கிடைக்காமல் இருக்கின்றனர். அப்படிப் பட்டவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதில் 'இருக்கிறம்' கணிசமான பங்களிப்பு செய்வது பாராட்டுக்குரியது. இதனை தொடர்ந்து செயற்படுத்த வேண்டும் என்பதே எனது அவா.

**கா. யோகேஸ்வரி**
**ஹமிடன்லேன், வெள்ளவத்தை**

'இருக்கிறம்' சஞ்சிகையின் தொடர்ச்சியான வருகைக்கு என் மனமுவந்த வாழ்த்துக்கள். இந்த நாட்டில் எத்தனை சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டிருந்தாலும் 'இருக்கிறம்' தனக்கென ஒரு இடத்தை மக்கள் மத்தியில் பதிய வைத்துள்ளது. ஊடகத் துறையின் சிறந்த வழிகாட்டலுடன் புது வீரவேசம் எடுத்துள்ள இருக்கிறமை மக்கள் அனைவரும் நுகர்ந்து பார்க்க வேண்டும் என்பதே எனது அவா.

**ஷானா றிழா, சாய்ந்தமருது**


ஒரு பொல்லாப்புமில்லை
இருக்கிறம்
மாதம் இருமுறை
இதழ் 62
காத்திருப்பு 06 - இருக்கை 02

[illegible]
#3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
தொலைபேசி: +94 11 3150636
தொலைநகல் +94 11 2565190
மின்னஞ்சல் irukiram@gmail.com

| | |
|---|---|
| நிர்வாக ஆசிரியர் | : சாந்தி சச்சிதானந்தம் |
| ஆசிரியர் | : அருளானந்தம் சஞ்ஜீத் |
| அலுவலக நிருபர் | : க. கலாவர்ஷ்னி |
| நிருபர் குழு | : தி. ஸ்ரீகாந்த், த. சிந்துஜா, பூ. ஜெசிந்தா |
| கார்ட்டூன் | : சஞ்ஜீத் |
| கணனி தட்டச்சு | : த. சிந்துஜா, பூ. ஜெசிந்தா |
| வடிவமைப்பு | : கு. முஜீன்நாத், ஏ.ஜே.எம். பிறவ்ஸ் |



கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளிவரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல.

நேரடி ரிப்போர்ட் - மாங்குளம்...

## புனரமைக்கப்படும் இராணுவ முகாம்களும்....

**04**

யுத்தத்தால் அழிவடைந்த பெரும் நகரங்களில் மாங்குளமும் ஒன்று. அங்கு என்ன புனரமைக்கப்படுகின்றது? என்ன உருவாக்கப் படுகின்றது என்ற விடயங்கள் தெரியுமா? அங்குள்ள மக்களின் நிலை எவ்வாறுள்ளது என்று தெரியுமா? உள்ளே பாருங்கள்.

சிறப்புக் கட்டுரை - அரியாயம்

**08**

## அவலங்களின் மீது நடத்தப்படும் அற்ப அரசியல்...

ஒக்ஸ்போர்ட் யூனியனில் ஜனாதிபதிக்கு உரையாற்ற கிடைக்காமையால் இதற்கு ஆதரவாகவும் எதிராகவும் ஆங்காங்கே பல பேரணிகளும் நடந்தன. ஆனால் வெள்ள நிவாரணம் வழங்குவதாகக் கூறப்பட்டு கிளிநொச்சிக்கு மக்களை அழைத்து, அவர்களது கைகளில் சுலோக அட்டைகளைத் திணித்து, அவர்களை ஜனாதிபதிக்கு ஆதரவாக பேரணியில் கலந்துகொள்ள வைக்கப்பட்ட கதை தெரியுமா? உள்ளே பாருங்கள்.

நாகரீகம் - யாழ்ப்பாணக் குளங்கள்

## யாழ்ப்பாணக் குளங்களிலிருந்து கோயில்கள் வரை...

**14**



தமிழர் வாழ்வோடு பின்னிப் பிணைந்த எமது பூர்வீக குளங்கள் இன்று அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன. ஒவ்வொரு குளத்தின் பெருமையும் அவற்றின் பெயர்கள் மருவிய விதத்தையும் அழகான மொழிநடையில் கூறியுள்ளார் மூத்த பத்திரிகையாளர் கோபு...

இளமை புதுமை - கலாட்டா

## நண்பர்களிடையே நம்பிக்கைத் துரோகம்...

**20**



நண்பர்களிடையே இடம்பெறும் சண்டைகள், சில கருத்து வேறுபாடுகள், சுவாரஷ்யமான சம்பவங்கள் பற்றி யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவர்கள் சேர்ந்து கலக்கிய கலாட்டா உள்ளே...

திரைப்பார்வை - ரத்த சரித்திரம்

## பழைய கதை! புதிய அவதாரம்!



அண்மையில் சூர்யா - விவேக் ஒபராய் நடித்து வெளிவந்து சக்கை போடு போட்டுக் கொண்டிருக்கும் 'ரத்த சரித்திரம்'. விக்ரமாதித்தனின் பார்வையில்...

ரத்த சரித்திரம்

**24**

சிறுகதை - தொடரும் அவலம்

## கருகிய மொட்டு...

இன்று செல்வந்த வீடுகளில் பெரும்பாலான சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். ஆனால் அவர்கள் அனுபவிக்கும் கொடுமைகளை யாரும் கவனிப்பதில்லை. பெற்றோர்கள்கூட காசை மட்டுமே பிரதானமாக கருத்திற்கொண்டு பிள்ளைகளை வேலைக்கு அனுப்புகின்றனர். அவ்வாறு வேலைக்கமர்த்தப்படும் பிள்ளைகளின் நிலையை உருக்கமாகக் கூறும் சிறுகதை...

**30**

உண்மையின் பதிவு - ஏமாறுபவர்களும் ஏமாற்றுபவர்களும்

## அறியாத்தனத்தால் ஏமாற்றமடைந்த...

**42**

மலையகத்தில் வாழும் பெரும்பாலானோர் தேயிலைத் தோட்டங்களிலேயே வேலை செய்கின்றனர். அவர்களது சேவைக்காலம் முடிந்ததும் நாடுவது ஊழியர் சேமலாப நிதியையே. அவர்களுக்கு வெளியனுபவம் சற்றுக் குறைவாக இருப்பதால் சிலர் அந்த நிதியை பெற்றுத்தருவதாக கூறி ஏமாற்றி பணம் பறிக்கின்றனர். அவ்வாறு ஏமாற்றமடைந்த ஒரு உண்மைச் சம்பவம் உள்ளே..

மருத்துவம் - பிரஸர் ஏற்படுவதற்கான காரணங்கள்

## ஒருவகை லோ பிரஸர் நிலை சார்ந்த குறை இரத்த...

இரத்த அழுத்தத்தின் வகைகள், அவை ஏற்படும் சந்தர்ப்பங்கள், கடைப்பிடிக்கவேண்டிய உணவு முறைகள் என்பவற்றைப் பற்றி Dr. முருகானந்தன் எழுதும் பயனுள்ள மருத்துவக் கட்டுரை.



**44**

# அழிவிலிருந்து மீளும் மாங்குளம்!





## புனரமைக்கப்படும் இராணுவ முகாம்களும்! உருவாக்கப்படும் புத்தவிகாரைகளும்!

மாங்குளம் நகரத்தில் இறங்கும் பொழுது மதவாச்சியில் இறங்குவதைப் போலிருந்தது. சிங்களத்தில் தமிழைக் கொல்லும் பெயர்ப்பலகைகள்தான், இப்போதைய மாங்குளம் இதுதான் என்று அடையாளம் காட்டுகின்றன. இந்திய இராணுவ வருகையினால் நிகழ்ந்த அழிவுகளின் அல்லது பாதிப்புக்களின் சுவடுகள் முதல், பல முறை யுத்தத்தை சந்தித்த சுவடுகளுடன் யுத்தம் கொன்ற நகரத்தில் இறங்கினேன். அழிந்த நகரத்தின் மேலே முகாமிட்டு படையினர் நகரத்தைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். “மாங்குளமா? அது ரொம்ப மாறிப் போச்சுது” என்று முதலில் நான் சந்தித்த முதியவர் ஒருவரின் ஒற்றை வார்த்தை இந்த நகரத்தின் நிகழ்காலத் துயரம் குறித்து தெளிவாக உணர்த்தியது. மகிந்த ராஜபக்ஸவின் பதவி ஏற்பினை முன்னிட்டு கட்டப்பட்ட வாழ்த்துப் பதாகைகள் அழிவின்மேல் பறந்து கொண்டிருந்தன. மதில்களிலும் வேலிகளிலும் சிங்கக் கொடிகள் நெருக்கமாகப் பறந்து கொண்டிருந்தன. இராணுவத்தினரும் சிங்கள சுற்றுலாப் பயணிகளும்தான் மாங்குளம் நகரத்தில் அதிகமாகத் திரிந்து கொண்டிருந்தார்கள்.

மல்லாவிக்குச் செல்லும் வழியில் சில கடைகள் புதிதாக திறந்திருக்கின்றன. அதிகமாக தேநீர்க் கடைகளும் சில சிறியளவிலான பல்பொருள் வாணிபங்களும் திறந்திருக்கின்றன. அழிவடைந்த கட்டிடமொன்றை முடி திருத்துனர் ஒருவர் முடி திருத்தகமாக பாவிக்கிறார். சில ஆட்கள் முடிதிருத்த வந்திருந்தனர். யுத்தத்தால் உடைந்த ஏதோ ஒன்றை இருக்கைகளாக்கி இருந்து கொண்டிருந்தார்கள்.

மாங்குளம் பிரதேசத்தில் பச்சைப் பசேலென்ற பசுமைக் காடுகள் சுற்றியிருக்கின்றன. பிரமாண்டமான கட்டிடங்கள் எதுவுமில்லாத பொழுதும் இது ஒரு நகரம் என்ற உணர்வைத் தருகிறது. யுத்தம்

மாங்குளத்தை யுத்த நகரமாக உருவாக்கியிருக்கிறது. இங்குள்ள சில கடைகளின் மேல் பியந்துபோன மண்மூட்டைகளும், சுவர்களில் எறிகணை பட்ட ஓட்டைகளும் கடந்த பல வருடங்களாக ஆறாதிருக்கின்றன. நான்காம் ஈழப் போர் வன்னியில் தொடங்குவதற்கு முன்பு மாங்குளத்திற்கு அடிக்கடி போய் வருவேன். விமானத் தாக்குதல் மற்றும் கிளைமோர் தாக்குதல் அபாயம் எப்பொழுதும் அந்தப் பகுதியை அச்சுறுத்திய படியிருந்தது. நான் அங்கு நிற்கும் பொழுது விமானத் தாக்குதல்கள் பல நடந்து மக்கள் கொல்லப் பட்டிருக்கிறார்கள். நான் வந்த வழிகளில் பல கிளைமோர் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக் கின்றன. கிளிநொச்சி உட்பட வன்னிப் பகுதிக்கு விமா னங்கள் தாக்குதலை நடத்த வரும் பொழுதெல்லாம் இந்தப் பகுதியை அச்சுறுத்திக் கொண்டே செல்லும்.

ஏ-9 பாதை மூடப்பட்ட காலத்திலும் மாங்குளம் தன் கலகலப்பை இழக்கவில்லை. பேருந்துகளில் செல்லும்பொழுது மாங்குளம் நகரத்தில் இறங்கி அங்குள்ள தேநீரகத்தில் தேநீர் அருந்துவேன். இப் பொழுது அந்த நேநீரகம் மீளத் திறந்திருந்தது. தேநீரை அருந்தியபடி அந்த நகரத்தைப் பார்க்கும்பொழுது "மாங்குளம் நிறைய மாறி விட்டது" என்ற அந்த முதிய வரின் வார்த்தை ஞாபகத்திற்கு வந்தது. மாங்குளம் நகரத்தில் உள்ள தேவாலயத்தின் அருகில் பெரும் புத்தர் சிலை ஒன்று கட்டப்படுகிறது. இந்த இடத்தில் மேலும் சில புத்தர்சிலைகள் கட்டி மாங்குளத்தை சிங்கள மயமாக்க முயற்சிப்பதாக தேநீரகத்தில் தேநீர் குடித்துக் கொண்டிருந்த ஒருவர் சொன்னார். மாங்குளம் நகரத்தில் நிகழ்ந்த ஆக்கிரமிப்பு என்ற மாற்றங்களுடன் நகரத்தை சுற்றியிருந்த சில சனங்களை சந்தித்துப் பேசத் தொடங்கினேன்.

மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற நிசாந்தன் என்ற சாதாரண தரம் படிக்கும் மாணவன் மிகவும் கஷ்டப்பட்டு சைக்கிளை மிதித்து மல்லாவி வீதியால் சென்று கொண்டிருந்தான். அவனின் ஒற்றைக் காலை யுத்தம் தின்று விட்டிருந்தது. மாங் குளம் செல்வராணி குடியிருப்பில் வசித்து வருகின்ற 15 வயதான தேவதர்சன் மாங்குளத்தில் உள்ள 'இருபத்து நான்கு வீட்டுத் திட்டம்' என்கிற குடியிருப்பில் வசிக்கி றார். யுத்தத்தாலும் சமூக ஏற்றத் தாழ்வுகளாலும் அதிகம் பாதிக்கப்பட்ட தேவதர்சன் மாங்குளம் குறித்து நிறைய கதைகளை என்னுடன் பகிர்ந்துகொண்டார். பிறப்பிலேயே ஒரு கை சற்று வலுவிழந்திருக்கிறது. அவருக்குத் தந்தையில்லை. தாயாருடன் வசிக்கிறார். என்னை அவரின் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனார். தெருவால் செல்லும் பொழுது காலம் காலமாக நடந்த யுத்தத்தினால் சிதைந்த அஞ்சல் அலுவலகமும் கூரையில்லாதிருக்கிற முன்பள்ளியையும் பார்த்தேன். தேவதர்சன் வசிக்கின்ற செல்வராணி குடியிருப்பு முழுமையாக கூரையிழந்தபடியிருந்தது. களைத்து, வாடிய முகத்துடனிருந்த அவனது தாயாரிடம் என்னை அறிமுகம் செய்து வைத்தான். "எனது அம்மா மட்டுமல்ல. இங்குள்ள எல்லோருமே வித வைகள்தான்" என்று சொல்லிய தேவதர்சன் "இதை 'விதவைகள் குடியிருப்பு' என்றுதான் அதிகம் சொல்லுவார்கள்" என்றான். அந்தக் குடியிருப்பில் உள்ள அநேகமான பெண்கள் யுத்தத்தினாலேயே விதவைகளாக்கப் பட்டிருக்கிறார்கள்.

புலம்பெயர்ந்து வாழும் தாய் ஒருவர் 2005 காலப்பகுதியில் போரினால் பாதிக்கப்பட்ட வித வைப் பெண்களுக்காக அந்தக் குடியிருப்பு கட்டிக் கொடுத்திருக்கிறார். 24 குடும்பங்கள் அங்கு வசித்து வருகின்றன. மாங்குளத்தை பூர்வீகமாகக் கொண்டவர் என்று குறிப்பிடும் தேவதர்சனின் தாயார் பாலன் யசோதா, தனக்கு மூன்று பெண்கள் இருந்தார்கள் என்றும் அவர்களில் ஒரு மகளின் கணவரும் குழந் தையும் துப்பாக்கிச் சன்னம் பட்டு உயிரிழந்து விட்டதா கவும் சொன்னார். மற்றைய சகோதரி இருட்டு மடுவைச் சேர்ந்தவர் என்றும் அவர் இன்னும் மீளக் குடியமர்த்தப்படாமல் தடுப்புமுகாமில் தடுக் கப்பட்டிருப்பதாகவும் தேவதர்சன் குறிப்பிட்டான். மற்றைய சகோ தரி போரில் களப் பலியாகி விட்டதாகச் சொன்னான்.









இதே குடியிருப்பில் சந்தித்த மற்றொருவரான சிவநேசன் சிவரூபன் யுத்தத்தினால் இன்னும் அதிகமாக பாதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு ஐந்து வயதாக இருக்கும் பொழுதே அவரது தாயார் போரில் களப் பலியாகியிருக்கிறார். தந்தை பிரிந்து சென்றதும் அம்மம்மாவுடன் வாழ்ந்து வருகிறார். துப்பாக்கிச் சன்னம் பட்டு சிவநேசன் சிவரூபன் காயமடைந்திருக்கிறார். பலமான வேலை எதுவும் செய்ய முடியாது என்று என்னிடம் சொல்லிய சிவரூபன் சிலவேளைகளில் காயமடைந்த தன் கை வீங்கிக் கொண்டிருக்கும் என்றார். சிவரூபன் தற்பொழுது மாமனார் ஒருவரின் உதவியுடன் சாதாரணதரம் படித்துக் கொண்டிருக்கிறார்.

துளுக்காய் வீதியில் வசிக்கின்ற சில மக்கள் தங்கள் காணிகளை இழக்கும் அபாயம் நெருங்குவதாகச் சொன்னார்கள். காலம் காலமாக தாங்கள் வாழ்ந்து வரும் காணிகளில் இருந்து தங்களை துரத்தி அந்தக் காணிகளை கையகப்படுத்தும் முயற்சிகளில் சில அரச அதிகாரிகள் ஈடுபடுவதாக மக்கள் சொல்கிறார்கள். மாங்குளமும் ஈழத்தின் வடக்கில் வன்னிப் பெருநிலத்தில் உள்ள முக்கியம் வாய்ந்த நகரத்தைக் கொண்ட பிரதேசம். இந்தப் பிரதேசத்தை சிங்கள மயப்படுத்த பல வகையில் முயற்சிக்கப்படும் நிலையில் மக்களிடம் உள்ள காணிகளைப் பறிக்க இப்படியான நடவடிக்கைகள் நடைபெறுகின்றன என மக்கள் பலர் என்னிடம் குறிப்பிட்டார்கள். நகரத்தில் கட்டப்படும் பெரும் புத்தர் சிலையும் சிங்கள பௌத்த மயமாக்கும் நடவடிக்கை என்று மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. குறித்த பௌத்த ஆலயம் அமைதியை குலைக்கும் அறிகுறியாக தலையெடுத்து வருகிறது என்பதை பல மக்களிடம் உணர முடிகிறது.

மக்களுக்கு சேவை செய்ய வருகிற அரச அதிகாரிகள் தங்கள் சேவையை முடிந்த வரையில் ஆற்ற வேண்டும் என்பதை மாங்குளத்திற்கு மட்டுமல்ல முழு ஈழத்தில் உள்ள அதிகாரிகளுக்கும் சொல்ல வேண்டும். தமிழ் மக்களின் நிலம், அதிகாரம் போன்றவற்றை கையகப் படுத்தும் நடவடிக்கைகளில் இந்த அரச அதிகாரிகளை அரசு கச்சிதமாக பயன்படுத்துகிறது. இந்த சந்தர்ப்பங்களில் சில அரச அதிகாரிகளும் கிராம பிரதிநிதிகளும் சுயநலமாகச் செயற்பட்டு மக்களுக்கு எதிராக இயங்குகிறார்கள். இப்படியான செயற்பாடுகள் எமது மக்களை இந்த நிலத்தை எதிர்காலத்தை பல வகையில் பலியாக்குகிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

“காணி குறித்தும் வீட்டுத் திட்டம் குறித்தும் நாங்கள் வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்சவிடம் கடிதம் கொடுத்தோம். அந்தக் கடிதத்தை வாசிக்காமலே கொண்டு சென்ற அவர் அதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. அதை எங்கு கிழித்துப் போட்டாரோ தெரியவில்லை” என்றார் தாய் ஒருவர். “மாங்குளத்தில் தற்பொழுது 600 குடும்பங்கள் வரை வசித்து வருகின்றன. எங்கள் ஊரின் இளைஞர்கள் எல்லாரும் கால்களையும் கைகளையும் இழந்து விட்டார்கள்” என்றார் ரூபானந் தவப்புதல்வி. தனது வீடும் ஜெயசிக்குறு காலத்தில் அழிக்கப்பட்டுவிட்டது என்றார் அவர்.

2009 இல் தாங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டதாக குறிப்பிட்ட பே. முருகையா மீண்டும் விவசாய நடவடிக்கையில் நம்பிக்கையுடன் இறங்கியிருக்கிறார். மாங்குளத்தில் இரண்டு குளங்கள் உள்ளன. சின்னக்குளத்திற்கு அருகே பே. முருகையா வசிக்கிறார். காணியில் முளைத்த நெற்பயிர்கள் பசுமையுடன் நிற்கின்றன. யாழ்ப்பாணம் இணுவிலில் இருந்து 1978 இல் மாங்குளத்திற்கு குடிவந்ததாகவும் பே. முருகையா குறிப்பிட்டார். இவரது மகன் ஒருவரும் இறுதி யுத்தத்தில் பலியாகியிருக்கிறார்.

முதியவர் ஒருவரைச் சந்தித்தேன். “தமிழ் மக்களால் இனி என்ன செய்ய முடியும்?” என்றபடி பேச்சைத் தொடங்கினார். “எங்களைப் பார்த்து பயந்த காலம் போய்விட்டது. நாங்கள் பயந்து வாழும் காலம் வந்துவிட்டது. எங்களைச் சுற்றி என்னவோ எல்லாம் நடந்து கொண்டிருக்கிற பொழுதும் எதையும் செய்ய முடியாமல் வாழ்கிறோம்” என்று சொல்லிவிட்டு கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டார்.

மாங்குளம் மகா வித்தியாலயத்தில் இராணுவத்தினர் பாரிய முகாம் ஒன்றை அமைத்திருக்கின்றார்கள். அதனால் அந்தப் பகுதியை அண்டி வாழ்ந்த மக்கள்

கடும் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். முக்கியமாக பாடசாலைக் கட்டிடத்தில் இராணுவத்தினர் முகாமிட்டு தங்கியிருப்பதால் மாங்குளம் மகா வித்தியாலயம் கட்டிடமின்றி இயங்குகிறது.

“பாடசாலையின் முன்பாக உள்ள ஏ-9 பாதையுடன் அதைக் கடந்து இராணுவத்தினரின் முகாம் பரந்து உள்ளதால் பாதையை மூடி சனங்களின் காணிகளினூடாக பாதை திறந்து விட்டிருக்கிறார்கள். எங்கள் காணிக்குள்ளால்தான் பாதை போகிறது. இதோ தருகிறோம்! அதோ தருகிறோம்!! என்று ஒரு வருடமாக இழுத்தடிக்கிறார்கள்” என்றார் பாலகிருஷ்ணன்



**மக்களுக்கு சேவை செய்ய வருகிற அரச அதிகாரிகள் தங்கள் சேவையை முடிந்த வரையில் ஆற்ற வேண்டும்**

திருச்சபைக்கு உடுத்த வெள்ளைச் சேலையைப் பாருங்கள்... சிவப்பாகிக் கிடக்கிறது” என்றார்.

“இந்தப் புழுதியில் வாழும் குழந்தைகளின் எதிர்காலத்தை அவர்கள் எண்ணிப் பார்க்க மறுக்கிறார்கள்” என்று சொல்லும் பாலகிருஷ்ணன் அம்பிகாவின் மகளின் இரண்டு குழந்தைகளும் கூடாரத்தின் முன்பாக நின்றார்கள். “இந்தக் குழந்தைகள் இரவிரவாக புழுதியைத்தான் குடிக்கிறார்கள். வாகனங்கள் செல்லச் செல்ல புழுதி படையெடுத்து சனங்கள் வசிக்கிற கூடாரங்களை நோக்கி வருகிறது. வீட்டில் வைத்த பொருட்களை சற்று நேரத்தில் போய் எடுக்கும் பொழுது புழுதி உதிர்கிறது” என்றார் அவர் “தம்பியும் இப்பொழுதுதான் தடுப்பு முகாமிலிருந்து வந்தார். காவல்துறையிடம் சொன்னால் 'நாங்கள் என்ன செய்வது?' என்று கேட்கிறார்கள். எல்லோருக்கும் சொல்லி சொல்லி அலுத்துப் போய் விட்டது” என்றார் அம்பிகாவின் மகள் யசோதரன் சுமதி.

யுத்தம் முடிந்து இதுவரையில் இலங்கை இராணுவம் தன் அரசின் சிந்தனையில் இராணுவ முகாம்களை மட்டுமே உருவாக்கியிருக்கின்றன அல்லது அபிவிருத்தி செய்திருக்கின்றன. மாங்குளத்தில் முழத்திற்கு முழம் காவலரண்களும், நகரத்தையும் முழுப் பிரதேசத்தையும் முகாமுமே இருக்கின்றன. பெருமளவில் சனங்களின் கூடாரங்களின் முன்பாக காவலரண்கள் அமைக்கப்பட்டிருப்பதனால் மக்களை முழுமையாக சந்திக்க முடியவில்லை. எப்பொழுதும் எல்லாவற்றையும் இராணு வத்தினர் கண்காணித்துக் கொண்டிருக்கின்றனர். நான் திரும்பும் பொழுது வீழ்ந்து கிடப்பதைப்போல நிலத் துடன் இருக்கிற கூடாரங்கள் பல கண்ணுக்குத் தெரிந் தன. வயது முதிர்ந்தவர்கள் சிலர் அவற்றின் முன்பாக கூடிக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். இப்படியான கூடாரங்களிலும் நமது சனங்கள் வாழ்கிறார்களே என்ற ஏக்கம் மனதை நிரப்பிக் கொண்டிருக்கிறது ●


## SMS JOKES

ஒரு குழந்தையை
Cute ஆக
Personality ஆக
Beautiful ஆக
Talented ஆக
Intelligent ஆக
வளர்க்கனுமா..?
Please contact
My parents!!!





## உதட்டில் வியர்க்குமா?



பொதுவாக மனித உடலில் வியர்க்காத இடம் உதடு என்பது எமக்குத் தெரியும். ஆனால் விஞ்ஞானிகள், உடலில் எங்கெல்லாம் சருமம் இருக்கின்றதோ அங்கெல்லாம் வியர்வை சுரப்பிகளும் இருக்கின்றன என்று உறுதியாகக் கூறுகின்றனர். வியர்வை சுரப்பிகள் அதிகம் உள்ள இடங்களில் வியர்ப்பது தெரிகிறது. குறைவாக உள்ள இடங்களில் தெரிவதில்லை.

உதட்டில் வியர்வை சுரப்பிகள் மிக மிகக் குறைவு. அதனால்தான் உதட்டில் வியர்ப்பது நமக்குத் தெரிவதில்லை. அதிலும் ஒரு சிலருக்கு அதிகமான வியர்வை சுரப்பிகள் உள்ளங்கைகளிலும், பாதங்களில் அமைந்துவிடுவதும் உண்டு. ஆகவே இனி உடலில் வியர்க்காத இடம் என்று எதுவுமில்லை.

கண்ணன்





# அவலங்களின் மீது நடத்தப்படும் அற்ப அரசியல்

தமிழ் மக்களின் வறுமை, துயரம், அவலங்களை முன்வைத்து அரசியல் நடத்தும் போக்கு வடக்கில் மீண்டும் தீவிரமடையத் தொடங்கியுள்ளது.

அண்மையில் ஒக்ஸ்போர்ட் யூனியனில் உரையாற்ற பிரித்தானியா சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவுக்கு அங்கு உரையாற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்டமை தெரிந்ததே. பாதுகாப்புக் காரணங்களுக்காக அவரது உரையை நிறுத்தியது பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் யூனியன். புலம்பெயர் தமிழர்கள், போர்க் குற்றச்சாட்டுகளுக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ கைது செய்யப்பட வேண்டும் என்று நடத்திய ஆர்ப்பாட்டங்கள், நடத்தவிருந்த போராட்டங்களின் விளைவாகவே அவரது உரையை நிறுத்தியதாக ஒக்ஸ்போர்ட் யூனியன் அறிவித்திருந்தது.

ஒக்ஸ்போர்ட்டில் உரையாற்றுவதற்கென்றே புறப்பட்டுச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ உரையாற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்டு திரும்பி வந்த சம்பவம் இலங்கை அரசுக்கு கிடைத்த மிகமோசமான தோல்வி என்பதில் சந்தேகம் இல்லை. இது முழுநாட்டுக்கும் கிடைத்த அவமானம் என்கிறது அரசாங்கம். எதிர்க்கட்சியான ஐ.தே.கவும் அப்படியே சொல்கிறது. எந்தவொரு ஜனநாயக நாடும் இதைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்கக் கூடாது என்று பிரதமர் டி.எம். ஜெயரட்ண அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

ஆனால் இலங்கை ஜனாதிபதி மீது பரிதாபப்பட்டு எந்தவொரு நாடுமே அவருக்காகக் குரல் கொடுக்கவில்லை. போர்க் குற்றச்சாட்டுகளும், போர்க்குற்றங்கள் தொடர்பான ஒளிப்பதிவுகளும் இப்போது அரசாங்கத்தைத் துரத்த ஆரம்பித்து விட்டன. பிரித்தானியாவில் இருந்து கசப்பான பாடம் ஒன்றைக் கற்றுக் கொண்டு திரும்பிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவுக்கு கட்டுநாயக்க விமானநிலையத்தில் பெருத்த வரவேற்பு அளிக்கப்பட்டது. அது போதாதென்று பிரித்தானியாவைக் கண்டித்து கொழும்பிலுள்ள அந்த நாட்டுத் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினார் விமல் வீரவன்ச. இலங்கை அரசாங்கம் மீதும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ மீதும் போர்க்குற்றம் சுமத்தி அவப்பெயரை உண்டாக்க முனையும் புலம்பெயர் தமிழர்களுக்கும் பிரித்தானியாவுக்கும் எதிராக அலவி மௌலானா தலைமையில் இன்னொரு ஆர்ப்பாட்டம், கோட்டை ரயில் நிலையம் முன்பாக நடத்தப்பட்டது. இவை தவிர தெற்கில் வேறெங்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவுக்கு ஆதரவாக போராட்டமோ பேரணியோ நடத்தப்படவில்லை.


ஆனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, விசுவமடு, ஒட்டுசுட்டான் பகுதிகளில் திடீர் எதிர்ப்புப் பேரணிகள் நடைபெற்றன. கொட்டும் மழைக்கு ஒதுங்க இடமின்றி இருந்த மக்கள் மகிந்த ராஜபக்ஸவுக்கு ஆதரவாகப் பேரணியில் சென்றனர்.

இருப்பிடம் இல்லாமல், உண்ண உணவில்லாமல் இருந்த மக்கள் எங்கோ நடந்த ஒரு சம்பவத்துக்காகப் பேரணி நடத்தியது ஆச்சரியம் தான். ஆனால் அது அவர்களாக நடத்திய பேரணியல்ல.

வெள்ள நிவாரணம் பெற கிளிநொச்சி நகருக்கு வருமாறு அறிவிக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட மக்களின் கைகளில் இராணுவத்தினர் சுலோக அட்டைகளைக் கொடுத்துப் பேரணியாகச் செல்ல வைத்தனர்.

முல்லைத்தீவில் வலைகள் தருகிறோம் என்று அழைத்துச் சென்ற மக்களிடமும் அதேபோன்று சுலோக அட்டைகள் திணிக்கப்பட்டன.

அந்த மக்களிடம் பிரபாகரன், பொட்டு அம்மான் ஆகியோரின் உருவபொம்மைகளைக் கொடுத்து எரிக்க வைத்து படம் பிடிக்கப்பட்டது. உயிருடன் இருப்பவர்களின் உருவபொம்



மைகள் தான் எரிக்கப்படுவது வழக்கம். ஆனால் இறந்து ஒன்றரை வருடங்களுக்குப் பின்னரும் பிரபாகரன், பொட்டு அம்மான் ஆகியோரின் உருவபொம்மைகள் எரிக்கப்பட்டன. இதனால் யாருக்கு என்ன இலாபமோ தெரியவில்லை. பிரித்தானியாவில் மகிந்த ராஜபக்ஸ உரையாற்ற சந்தர்ப்பம் வழங்கப்படாமல் அனுப்பி வைக்கப்பட்டதற்கும் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் இறந்து போனவர்களுக்கும் என்ன தொடர்பு இருந்திருக்குமோ தெரியாது.

இந்தப் பேரணியில் சென்றதற்குக் கூலியாக ஒரு கிலோ அரிசியையும், கால் கிலோ செத்தல் மிளகாயையும் கையில் கொடுத்துப் படையினர் அனுப்பி வைத்தனர். இது போன்ற பேரணிகள் ஒன்றும் வடக்கு மக்களுக்குப் புதிய விடயம் அல்ல.

ஏற்கனவே கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக யாழ்ப்பாணத்தில் இதே உத்தியைத் தான் ஈ.பி.டி.பி கையாண்டு அரசியல் நடத்தியது. தொண்டராசிரியர்களுக்கு நியமனம் பெற்றுத் தருகிறோம் வாருங்கள் என்று சிறிதர் திரையரங்கிற்கு அழைத்துச் சென்று புலிகளுக்கு எதிராகப் பேரணி நடத்துவது, தேர்தல் பிரச்சாரம் செய்ய வைப்பது எல்லாம் அவர்களின் கைவந்த கலை.

வேலைவாய்ப்பு நிவாரணம் என்று கூறி யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப்பட்டு அரசியல் பேரணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். இப்போதும் அதே போக்கு நீடிக்கிறது. ஈ.பி.டி.பியினரைப் போன்றே இப்போது அரசாங்கமும் படையினரைக் கொண்டு தமது தேவைகளை நிறைவேற்ற முனைகிறது. வன்னிப்போரின் போது இடம்பெற்ற போர்க் குற்றச்சாட்டுகளின் பேரில் தான் மகிந்த ராஜபக்ஸவைக் கைது செய்ய வேண்டும் என்று கோரிப் பிரித்தானியாவில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. அதை முறியடிக்கவே அரசாங்கம் வன்னியிலுள்ள மக்களை நிவாரணம் என்று கூறி வீதிக்கு அழைத்து வந்து பேரணிகளை நடத்த வைத்துள்ளது. இந்தப் பேரணிகளில் புலம்பெயர்ந்துள்ள தமது உறவுகளையே துரோகிகள் என்று கொச்சைப்படுத்துவது போன்ற சுலோக அட்டைகள் கூட வன்னிமக்களின் கைகளில் திணிக்கப்பட்டிருந்தன.

வன்னி மக்களின் வங்கிக் கணக்கில் 3.5 பில்லியன் ரூபா இருக்கிறது என்றும் அவர்களுக்கா பொருளாதார நெருக்கடி என்றும் கேட்டவர்தான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ. அவருக்காக வன்னியிலுள்ள மக்கள் தமது சொந்தங்களுக்கு எதிராகப் பேரணி நடத்தியிருப்பார்களா?

வன்னியில் நிலவும் வறுமை, வேலையின்மை, துயரங்கள் என்பவற்றை இப்போது தாராளமாகப் பயன்படுத்திக் கொண்டு எப்படி அரசியல் இலாபம் தேடலாம் என்பதில் தான் பல்வேறு தரப்புகளும் முனைப்புக் காட்டுகின்றன. இத்தகைய பேரணிகளை வன்னி மக்களைக் கொண்டு நடத்துவதன் மூலம் அரசாங்கத்தால் சாதிக்கக் கூடியது ஒன்றுமில்லை.




ஆனாலும் பிரித் தானியாவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவுக்கு ஏற்பட்ட அவமானத்தை துடைப்பதற்கு அரசாங் கத்துக்கு ஒரு வடிகால் தேவைப் படுகிறது. அதற்காகவே இத்தகைய பேரணிகளை நடத்தி ஆறுதலைத் தேடிக் கொண்டது. அரசாங்கம் மட்டுமல்ல தமிழ் மக்களின் கண்ணீரையும் அவலங்களையும் தமது அரசியல் இலாபத்துக்காக ஜே.வி.பியும் பயன்படுத்த ஆரம்பித்துள்ளது.

அண்மையில் காணாமற்போனவர்களின் நிலை குறித்து வெளிப்படுத்தவும் கைது செய்யப்பட்டுள்ளவர்களின் விபரங்களை வெளியிடவும் கோரி ஜே.வி.பி யாழ்ப்பாணத்தில் ஒரு போராட்டத்தை நடத்தியது. அது காணாமற் போனவர்களுக்காகவோ அவர்களின் உறவினர்களுக்காகவோ நடத்தப்பட்ட போராட்டம் அல்ல. ஜே.வி.பி இப்போது வங்குரோத்து அரசியல் நடத்தும் நிலையில் உள்ளது. அவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக எதையாவது செய்ய வேண்டும். ஆனால் சிங்கள மக்களைக் கொண்டு அவர்களால் எதையும் செய்ய முடியாது. தமிழ் மக்களும் கூட ஜே.வி.பியின் போராட்டத்துக்கு வரப் போவதில்லை. இதனால் தான் தடுப்புக்காவலில் உள்ளவர்களின், காணாமற் போனவர்களின் உறவினர்களை வீதிக்கு அழைத்து வர அந்தப் போராட்டத்தை நடத்தியது ஜே.வி.பி.

அதே ஜே.வி.பி ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்ட போதும், கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்ட போதும் குரல் கொடுக்கவில்லை. ஆனால் இப்போது அதுவே ஒரு பெரிய அரசியல் மூலதனமாக வந்து விட்டதால் தமிழ்மக்களை வைத்து அரசியல் நடத்தக் கிளம்பி விட்டது.

போரின் முடிவுக்குப் பிறகு வடக்கிலுள்ள தமிழ்மக்கள் ஒன்றுக்கும் வழியற்றவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். இதன் காரணமாகவே அவர்களை வைத்து அரசியல் நடத்தும் போக்கு தீவிரமடைந்துள்ளது. அரிசிக்காக, நிவாரணத்துக்காக, வேலைவாய்ப்புக்காக அரசியல் கட்சிகளின் முன்பாகவும், இராணுவ முகாம்களின் முன்பாகவும் கையேந்தி நிற்கின்ற ஒரு சமூகத்தையே இந்தப் போர் உருவாக்கி விட்டது. தமிழ்மக்களின் அவலங்களை வைத்து அரசியல் நடத்துகின்ற கீழ்த்தரமான காரியங்கள் இனிமேல் இன்னமும் அதிகமாகும். ஏனெனில் அடுத்த வருடத் தொடக்கத்தில் இரண்டு முக்கிய தேர்தல்களை வடக்கில் நடத்தப் போவதாக அரசாங்கம் சொல்கிறது. அந்தத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இதுபோன்ற அவலங்களை வைத்து அரசியல் நடத்தும் முயற்சிகள் இன்னும் அதிகமாகும்.

ஒன்றுக்கும் வழியற்றவர்களாக இருப்பதால் அவர்களின் இழுப்புக்கெல்லாம் ஆடுகின்ற பொம்மைகளாக தமிழ் மக்கள் மாறியிருப்பது ஒன்றும் ஆச்சரியத்துக்குரிய விடயமல்ல.




# அந்தரங்க




# அரசியலை அம்பலப்படுத்துவோம்!

19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளில் இந்த உலகில் அசுரத்தனமான வளர்ச்சிபெற்ற பல விடயங்கள் உண்டு. அவற்றில் அரசு என்னும் நிறுவகம் மிகவும் முக்கியமானது. முற்காலத்தில் வெறுமனே வரி வசூலிக்கும் அமைப்பாகவும் மக்களுக்கு வேற்று நாடுகளிலிருந்து பாதுகாப்பு கொடுக்கும் அமைப்பாகவுமே இருந்தது. இந்தக் கால கட்டத்தில்தான் மனித சமுதாயத்தின் சகல அம்சங்களையும் கட்டுப்படுத்தக்கூடிய பிரகிருதியாக வளர்ந்தது. இன்று எமது அரசுகள் எங்கள் வீட்டுப் படுக்கையறையையும் எட்டிப் பார்க்கும் அளவுக்கு அதிகாரம் மிக்கவையாகிவிட்டன. இந்த அசுர வளர்ச்சிக்கு உதவியது நவீன தொடர்பாடல் தொழில்நுட்பம் தான். எமது பிரதிநிதிகள் என்பது பெயரளவில் தான். ஆனால் அரசியல் பதவிகளில் உட்காருபவர்கள் பிறகு அதில் அவர்களை அமர்த்தியவர்களாலேயே வணங்கப்படும் அளவுக்கு கடவுளர்கள் ஆகின்றனர்.

இந்த நவீன மக்கள் பிரதிநிதிக் கடவுள்கள் செய்யும் லீலைகளோ சொல்லி மாளாது. அதிகாரம் என்பது ஒரு குறிப்பிட்ட கடமைகளைச் செய்வதற்கான சலுகை என்பதை மறந்து தமது அதிகாரத்தைத் தக்க வைத்தலிலும், கூட்டாக தமது ஆளும் வர்க்கத்தின் அதிகாரத்தினைத் தக்கவைத்தலிலும், அதற்கு அப்பாலே தமது நாட்டின் மேலாதிக்கத்தினை இன்னும் ஸ்திரப்படுத்துவதிலும் கவனம் கொள்ளுகின்றனர். அரசியல் என்பதற்கு சுருக்கமான வரைவிலக்கணம் தருவதென்றால் உலகின் சகல மட்டங்களிலும் அதிகாரத்திற்கும் செல்வாக்கிற்கும் மேலாதிக்கத்திற்குமான விளையாட்டு என்று சொல்லி விடலாம். இதில் பகடைக்காய்களாகுபவர்கள் பொதுமக்களே. அரசுகளின் அசாத்தியப் பலத்திற்கு ஈடு கொடுக்க முடியாது அவை சொன்ன சொல்லுக்கு ஆடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று மானிட இனம் சோர்வின் எல்லையில் நின்றபோது தான் விசில் ஊதும் கருப்பொருள் மக்கள் மத்தியில் தோன்றலாயிற்று. அதாவது ஒரு அரசு தவறான கொள்கைகளை நடைமுறைப்படுத்துகின்றதெனில், அதன் அந்தரங்க இரகசியங்களை தடாலடியாக வெளியே கொணர்ந்து அதன் மூலம் அபாய விசில் ஊதுவதே இந்த நடவடிக்கையாகும். எந்தத் தொழில்நுட்பம் அரசின் அதிகாரத்தை ஸ்திரப்படுத்த உதவியதோ அந்தத் தொழில்நுட்பமே மக்கள் கையிலும் ஓர் ஆயுதமாக மாறியது சுவாரசியமே. அரசுகள் விதித்த பாதுகாப்புக் கோட்டைகளை சாதாரண குடிமக்கள் தகர்க்க

முடியும் என இது நிரூபித்தது. விக்கிலீக்ஸ் இணையத்தளம் அவ்வாறான விசில் ஊதும் செய்தி பரிமாற்ற ஊடகமாகும். அது சைபர் வெளியில் நுழைந்து அரசுகளின் அந்தரங்க வலையமைப்புக்களைத் தகர்த்து அவற்றின் அலங்கோல அரசியலை அம்பலப்படுத்தத் துணிந்தது. இது சமீபத்தில் அமெரிக்க ராஜாங்க அலுவலர்களின் அந்தரங்கத் தொடர்பாடல்களை அவிழ்த்துவிட்டு வரலாறு படைத்திருக்கின்றது.







அமெரிக்க அரசாங்கமோ நுட்பமான தகவல்கள் வெளிவந்ததால் தனது அரசின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைந்து விட்டது என்று கதறத் தொடங்கியிருக்கின்றது. அமெ ரிக்க அரசு மட்டுமல்ல உலகின் எல்லா அரசுகளும் இந்தத் தேசிய பாதுகாப்பு என்கின்ற திரைக்குப்பின்னாலல்லவா ஒளிந்திருக்கப் பார்க்கின்றன? "ஈரானை அணுகுண்டு போட்டுத் தகர்ப்போமா?" என்றும், "ஐ.நா அதிகாரிகளை வேவு பாருங்கள்" என்றெல்லாம் அவர்கள் தமக்குள் உரையாடியிருக் கிறார்கள். இந்த அவல உண்மைகள் வெளிவந்தால் யாருடைய பாதுகாப்பு அச்சுறுத்தப்படும் என்பதை சிந்திக்க வாசகர்களிடமே விட்டுவிடுகின்றோம். விக்கிலீக்ஸ் இணையத் தளத்தின் செய்திக் கசிவுகள் வெளிவரத் தொடங்கியவுடன் பல ஆரோக்கியமான விவாதங்கள் உலக அரங்கில் ஆரம்பித்துவிட்டன. அரச தகவல்கள் மக்களிடம் தெரிவிக்கப்படுவது எந்தளவு சாதகமானது? தேசிய பாதுகாப்பு என்பது உண்மையில் யாருடைய பாதுகாப்பினைக் குறிக்கின்றது? முழுமையாக வெளிப்படைத் தன்மையுடன் இயங்கும் அரசு உலகில் சாத்தியமா இல்லையா? இப்படியாக, உலக நாடுகள் தங்கள் நடவடிக்கைகளை நியாயப்படுத்திக் கொண்டு செல்லச் செல்ல மக்கள் மத்தியிலும் ஊடகங்கள் மத்தியிலும் கேள்விகள் பெருக்கெடுத்தவண்ணம் இருக்கின்றன.

இக்கேள்விகள் எல்லாவற்றிற்கும் நடுநாயகமான கருப்பொருளாக ஒரு முக்கியமான உரிமை தொக்கிக் கொண்டிருக்கின்றது. அதுதான் தகவல் பெறுவதற்கான உரிமை. ஜனநாயகத்தைப் பற்றி வாய் கிழியப் பேசுபவர்கள் யாருமே தகவல் பெறுவதற்கான உரிமையைப் பற்றிப் பேசுவது கிடையாது. ஆனால் தகவல் பெறுவதற்கான உரிமையொன்றுதான் ஒரு நாட்டின் ஜனநாயகம் உயிர்வாழ உதவும் ஒட்சிசனாகும் என்றால் ஆச்சரியப்படுவீர்கள். ஜனநாயகம் என்றவுடன் கிரமமான தேர்தல்கள், வாக்குரிமை, சுயாதீனமான பாராளுமன்றம் இவையல்லவா எங்கள் கண் முன்னே வருகின்றன? ஆனால் இவையெல்லாவற்றையும்விட ஜனநாயகத்தை உயிர்வாழ வைக்கும் சக்தி வாய்ந்த தகவல் பெறுதற்கான உரிமையை நாம் கவனிக்காது விட்டுவிடுகின்றோம்.

தாம் அனுப்பிய பிரதிநிதிகள் தமக்கு வேண்டிய முறையில் ஆட்சிக் கடமைகளை மேற்கொண்டிருக்கின்றார்களாவென்று அரசுக்கு வெளியிலிருந்து கொண்டு நித்தமும் கண்காணிக்கின்ற கடமை மக்களிடம் தொடர்ந்து இருக்கின்றது. இந்தக் கண்காணிப்பை அவர்கள் சரிவரச்செய்ய வேண்டுமானால் ஆட்சியில் நடக்கும் விடயங்கள் அனைத்தையும் பற்றிய தகவல்கள் அவர்களை வந்து சேர வேண்டும் அல்லவா? தகவல் தெரியாவிட்டால் மக்கள் எந்தவிதமான தீர்மானங்களையும் எடுக்க முடியாது. அரச பணம் உரிய முறையில் திட்டங்களுக்குச் செலவழிக்கப்பட்டதா இல்லையா, தரம் வாய்ந்த அலுவலர்தானா அரச பதவிகளில் நியமிக்கப்படுகின்றார்கள், தமது அரசாங்கம் மக்களுக்குப் பயன்தரும் கொள்கைத் திட்டங்களையும் சட்டங்களையும் வகுக்கின்றதா இல்லையா, அதன் வெளியுறவுக் கொள்கைகள் தமக்கும் ஏனைய நாட்டு மக்களுக்கும் சாதகமாக இருக்கின்றதா இல்லையா என அவர்கள் ஆராய்ந்து நாட்டு நடப்புக்களைத் திருத்தியமைக்க வேண்டுமெனில் தமது ஆட்சியில் என்ன நடக்கின்றது என்பது அவர்களுக்குத் துலாம்பரமாகத் தெரிய வேண்டும்.

மக்களுக்கு நடப்பது தெரியாவிட்டால் ஊழல் தான் மலியும். எந்தத் தவறும் இரகசியமாகத்தானே செய்யப்படுகின்றன? எந்த ஒரு நாளிலும் இது வெளியே வரலாம் என்கின்ற பயம் இருந்தால் தவறு நடக்கும் வாய்ப்புக்கள் குறையும். அத்துடன் அரசின் வளங்கள் அதன் அலுவலர்களினாலும் அமைச்சர்களினாலும் முட்டாள்தனமாக வீண்விரயம் செய்யப்படுவதைத் தட்டிக் கேட்பதற்கு மக்கள் பெறும் தகவல்கள் உதவியாகின்றன. இந்த முறையில் ஒரு அரசாங்கம் ஆட்சியிலிருக்கும்போதே அது மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டியதாக மாறுகின்றது. அதன் தவறுகள் பாரதூரமான தாக்கத்தினை அந்நாட்டில் ஏற்படுத்த முன்னரேயே அவை திருத்தியமைக்கப்பட வாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்குத் தெரியாத இரகசியங்களை வைத்திருக்க முடியுமா? அப்படியானால் அது மக்களின் ஆட்சியாகாதே.

இதனால்தான் தகவல் பெற்றுக்கொள்வதை ஒரு உரிமையாக விபரித்து அந்த உரிமையை உறுதிப் படுத்த அனேகமான ஜனநாயக நாடுகளில் இது சட்டமாக்கப்பட்டிருக்கின்றது. தகவல் மக்களுக்கு வழங்கப்படுவதே விதியாக வேண்டும். பாதுகாப்புக் கருதி அவர்களுக்கு தகவல்கள் மறுக்கப்படுவது விதிவிலக்காக்கப்படவேண்டும் என்பதே தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டத்தின் அடிப்படை யாகும். இதன்படி ஒரு பொது அதிகாரியிடம் அல்லது அரசியல்வாதியிடம் விளக்கம் கேட்பதற்கு எவருக் கும் எந்த ஆதாரமும் தேவையில்லை. ஏதாவது சின்ன சந்தேகத்தின் அடிப்படையிலேயே கேட்டுக் கொள்ளலாம். அதற்கு அவர்கள் தகுந்த விளக்கம் அளிக்கத் தவறினால் அல்லது மறுத்தால் இக்குற்றத் திற்காக அவர்கள்மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படமுடியும். தாம் பெற்ற தகவல்களை வெகு சன ஊடகங்கள் மூலம் வெளிக்கொணரவும் சகல உரி மைகளும் வழங்கப்படுகின்றன. இச்சட்டம் கிட்டத் தட்ட உலகின் 85 நாடுகளில் அமுலில் இருக்கின்றது.

இன்று விக்கிலீக்ஸின். தாபகர் ஜுலியன் அஸ்ஸன்ஜேயை ஒரு பயங்கரவாதி என விபரித்து அமெரிக்க அரசாங்கம் பிரச்சாரத்தை முடுக்கி விட்டி ருக்கின்றது. அமெரிக்காவின் அடாவடித்தன வெளி யுறவு அரசியலைக் கண்டு அமெரிக்க மக்களும் உலக மக்களும் கொதிப்படைந்து ஜுலியனைக் காக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். ஆயிரக்கணக் கான கையொப்பங்களுடன் தகவல் பெறுவதற்கான உரிமையை வலியுறுத்தி, ஒரு நீண்ட பெட்டிசன் நியூயோர்க் டைம்ஸில் டிசம்பர் மாதத்தின் இரண் டாம் வாரம் பிரசுரிக்கப்படவுள்ளது. ஜுலியன் அஸ்ஸன்ஜே 21 ஆம் நூற்றாண்டு சிவில் சமூகத்தின் ஹீரோ என்றால் மிகையாகாது. அமெரிக்க மற்றும் ஐரோப்பிய தகவல் பெறும் உரிமைச் சட்டங்களின் படியும் இவருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்வது கடினமாகும்.

இப்படி சர்வதேச சிவில் சமூகம் அரசின் அதிகா ரங்களை மட்டுப்படுத்தி மக்களின் அதிகாரங்களை



ஸ்திரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்க, எங்கள் நாட்டின் நிலைமை என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? இலங்கையில் தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டம் இன்னமும் அமுலுக்குக் கொண்டுவரப் படவில்லையென்பதோடு இங்கு வேறு பல சட்டங்கள் அந்த உரிமை களை இல்லாமல் செய்து கொண்டிருக்கின்றன. எங்கள் சட்டங்களின்படி எமது அமைச்சரவையில் எடுக்கப்படும் தீர்மானங்கள்கூட குறித்த அமைச்சரின் அனுமதியின்றி வெளியிடப்படக்கூடாது. அரச உத்தி யோகத்தர் களோ அல்லது அரசாங்கமோ சங்கடப் படும்படியான எந்த விஷயத்தையும் எந்த அரச உத்தியோகத்தரும் வெளியே தெரிவிக்க இயலாது. நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கும் என அரசாங்கம் கருதும் விடயங்களையும், நாட்டின் பொருளாதார நிலைமைகளில் வெளியார்களுக்கு நம்பிக்கை அற்றுப் போகச் செய்கின்றது எனக் கருதப் படும் விடயங்களையும் வெளியில் எவரும் தெரிவிக்க இயலாது. இச்சட்டங்களைத் தவிர இருக்கவே இருக் கின்றன பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியன. இவற்றிற்குக் கீழேயோ 'மூச்' வாயே திறக்க முடியாது. இதில் செய்தி பரிமாறுவது எப்படி?

இதிலிருந்து எங்களுடைய ஜனநாயகம் என்ன டிகிரியில் இருக்கின்றது என்பதை நாம் ஊகித்தறிந்து கொள்ளலாம். எப்படியிருப்பினும், வல்லரசுகளுக்கு சவால் விடும் ஜுலியன் நம்மெல்லோருக்கும் ஒரு ரோல் மொடலாவார் என்பதை மறுப்பார் இல்லை. இன்டர்நெட் தொழில் நுட்பம் நமது கையில். ஜமாய்த்திடுவோம். நம்மால் முடியும் தம்பி!




## காலமும் கோலமும்!




கொழும்பு தமிழ்ச் சங்கம் நூலகம்

# சட்டம் பேசுகிறது

## கேள்வி - பதில்

- செவே. விவேகானந்தன்
சட்டத்தரணி


கேள்வி: எனது தொழில் வியாபாரம். பலசரக்குக் கடை ஒன்றை நடத்துகின்றேன். 13 வயதுடைய ஆண் பிள்ளை ஒருவர் எனது கடையில் வேலை செய்வதற்கு வந்துள்ளார். வேலைக்கு அமர்த்தினால் ஏதாவது பிரச்சினை உண்டாகுமா? சட்டப்படி எனக்கு பாதுகாப்பு உண்டா?

**த. கமலசேகரம்**
**கரவெட்டி கிழக்கு, யாழ்ப்பாணம்**

பதில்: சட்டப்படி உங்களுக்குப் பிரச்சினைதான். 14 வயது வரையும் கட்டாயமாகப் பிள்ளைகள் படிக்க வேண்டும் என சட்டம் கூறுகிறது. ஆணோ பெண்ணோ 14 வயது வரும் வரையும் அவர்களை குழந்தைகளாகவே சட்டம் கருதுகின்றது. அவர்களை பள்ளிக்கூடம் அனுப்பாவிட்டால் அவர்களது பெற்றோர்கள், பாதுகாவலர்கள் சட்டப்படி குற்றம் விளைவித்தவர்களாக கருதப்படுவார்கள். அவர்களுக்கெதிராக நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரலாம். ஆறு மாதம் வரை மறியலுக்கு அனுப்பப்படலாம். குற்றப் பணமும் கட்ட வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. இலங்கையில் ஆயிரக்கணக்கான சிறார்கள் பாடசாலைக்குப் போவதில்லை. எந்தத் தாய் தந்தைக்கோ பாதுகாவலருக்கோ வழக்குப் போட்டதாக இல்லை.

சிறார்கள் வேலைக்கு அமர்த்தப்படக் கூடாது என சட்டம் இருக்கிறது. அவ்வாறு அமர்த்தினால் தண்டனை உண்டு. ஆனால் சட்டங்கள் பல செயற்படுத்தப்படாமல் இருக்கின்றன. பல அதிகாரிகளுக்கும் பொலிஸாருக்கும் இவ்வாறான சட்டங்கள் இருப்பது தெரியாது. தெரிந்தவர்களும் நடவடிக்கைகளை எடுப்பதில்லை. கையூற்று அவர்களது கடமையைச் செய்ய தடை செய்கின்றது. 16 வயதை பூர்த்தி செய்தவர்களைத்தான் வேலைக்கு அமர்த்த முடியும். சட்ட செயற்பாட்டிலிருந்து தப்புவதில் பலர் கில்லாடிகள். நீங்களும் எவ்வாறோ தெரியாது.

வாசகர்களே! இது போன்ற சட்டப் பிரச்சினைகளில் சிக்கி அவதியுறுகின்றீர்களா? அவற்றிற்கு தீர்வுகாண முடியவில்லையா? கவலையை விடுங்கள். சட்டம் பேசுகிறது! எனும் இப்பகுதிக்கு உங்கள் சட்டப் பிரச்சினைகளை எழுதி அனுப்புங்கள். அனுபவமிக்க சட்டத்தரணிகள் பதிலளிப்பார்கள்.




# தமிழர் பண்பாடும் நாகரீகமும்



**'ஈழம்'** என்று ஆதியில் அழைக்கப்பட்ட இலங்கையானது 65,610 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் அமைந்துள்ள தீவாகும். தமிழர் அந்நாளில் முழுத் தீவுக்கும் உரிமையாளராக இருந்தனர். இன்று வடக்கு கிழக்கு பகுதிகளை மாத்திரம் தமது தாயகமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில், ஏன் வடபகுதியிலேயே ஆறுகள் இல்லையென்று சொல்லலாம். யாழ்குடாநாட்டில் ஆறு என்றால் தொண்டமானாறு என்ற பெயர் மட்டும் வஞ்சகமில்லாமலிருக்கட்டும் என்று பெயர் சூட்டியிருப்பார்கள். ஆனால் ஆறுகள் இல்லாத குறையைப் போக்குவதற்காக ஊருக்கு ஊர் குளங்கள் வெட்டிக் கட்டிவைத்தார்கள். யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னர்கள் இந்தக் குளங்களை அமைப்பதற்கு வழிகாட்டினார்கள்.

பண்டாரக்குளம், சங்கிலியன் குளம், ஆரியகுளம் என இன்னும் பல குளங்கள் யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்களின் பெயரை இன்னும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. சில குளங்களின் பெயர்கள் மாறியிருக்கின்றன. இதேபோல் 'ஆரியகுளம் சந்தி' என்பது இப்போது 'நாக விகாரைச் சந்தி' என்று மாறியிருப்பது போல இனி 'நாகவிகாரைக் குளம்' என்றும் மாற்றம் பெறலாம்.

யாழ்ப்பாண நகரின் மத்தியில் வண்ணான் குளம் என்று ஒரு அழகான குளம் இருந்தது. இன்னும் இந்தக் குளத்திலிருந்து தேங்காய் சிரட்டையால் தண்ணீர் எடுக்கக்கூடியளவு இடமும் நீரும் அதன் மத்தியில் இன்றும் விட்டுவைத்திருக்கிறார்கள்.


சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர், இதன் பின்பும்கூட வண்ணான் குளத்தின் கரையில் ஆறு ஏழு சலவைத் தொழிலாளர்கள் அதிகாலையில் துணிகள் வெளுத்து குளத்தின் கிழக்குப் பக்கமாக இருந்த புல்வெளிகளிலும் வயல்வெளிகளிலும் விரித்தும் கொடிகட்டியும் காயப்போடுவார்கள். 'வண்ணான் குளம்' நகரின் மத்தியில் இருப்பதால் அதை ஒரு அழகுத் தடாகமாக அமைக்கவேண்டுமென்றும், சிறுவர்கள் படகுச்சவாரிக்கும் வசதி

செய்ய வெண்டுமென்றும் துரையப்பா, மேயராக இருந்த காலத்தில் ஆலோசிக்கப்பட்டது. கோயில்களுக்குச் சமீபத்திலேயே பெரும்பாலான குளங்கள் அமைந்திருக்கின்றன. நகரில் 'கன்னாதிட்டி' என்பது முக்கியமான செல்வம் கொழிக்கும் இடமாக இன்றும் மிளிர்கின்றது.

யாழ்ப்பாண நகரம் திட்டமிட்டு அமைக்கப்படாதபோதும் மக்களின் குடியிருப்புக்கள் திட்டமிட்டவாறு தொழில்களின் அடிப்படையில் அமைந்துவிட்டன. கன்னாதிட்டியில் இந்தியாவிலிருந்து வந்த



கன்னாதிட்டி குளம்



ஆரிய குளம்



வண்ணான் குளம்

கடவுள் விக்கிரகங்கள், கோயில் மணிகள் மற்றும் கோயிலுக்குரிய சாதனங்களை உருவாக்கும் தொழிலாளர்கள் இப்பகுதியில் குடியேறினார்கள். இவர்கள் செய்யும் தொழில் 'கன்னாரத்தொழில்' என்று வழங்கப்படலாயிற்று.

இவர்களுடன் ஆலயங்களில் விக்கிரகங்களுக்கும், மக்களுக்கும், அலங்காரமாகவிளங்கும் ஆபரணங்கள் செய்யும் பொற்கொல்லர்களும் கன்னாதிட்டியில் குடியேறினார்கள். இதனால் இந்த இடம் மற்றைய பகுதிகளை விட மேடாக இருந்தாலும் 'கன்னார்' வசிப்பதாலும் இது கன்னாதிட்டி என அழைக்கப்பட்டது. இன்றும் இது கன்னாதிட்டிதான். நகைத் தொழிலுக்கும் நகைக்கடைகளுக்கும் பெயர் பெற்று விளங்கிய கன்னாதிட்டி இன்று சிவன் கோயிலுக்கு முன்பாக, முன்பு நகைக்கடைகளுக்குப் பெயர் பெற்று விளங்கிய இடத்திலிருந்து மெல்ல மெல்ல நகர்ந்து செம்மா தெருவையும் தாண்டி பஸ் நிலையம் வரை சென்றுவிட்டது.

கன்னாதிட்டியிலிருந்து காங்கேசன்துறை வீதியில் சிறிது தூரம் சென்றதும் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பொற்கொல்லர்கள் என்றும், தட்டார் என்றும் அழைக்கப்படுபவர்கள் வாழும் இடம் தட்டாதெருவாக அழைக்கப்படுகின்றது.

இப்பொழுது நகைகள் செய்வதைவிட சிங்கப்பூர் முதலிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து விற்பதிலேயே நகைக்கடைக்காரர்கள் ஈடுபடுகின்றனர். பொற்கொல்லர்கள் என்றழைக்கப்படும் 'தட்டார்', நகைக் கடைகளை நடத்திய காலம் இன்றில்லை. வேறு தொழிலும் வணிகமும் செய்தவர்கள் இன்று நகைக் கடைகளை வைத்திருக்கின்றார்கள்.

கன்னாதிட்டியில் காமாட்சி அம்மன் கோவில் ஒன்று இருக்கிறது. இது காளி கோவில் என்று வழங்கப்படுகிறது. இக் கோயிலுக்கு முன்பாக ஒரு தாமரைக்குளம். இதில் முன்பகுதியில் கோயிலுக்குத் தீர்த்தக் கேணி அமைக்க முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அது நிறைவேறாமல் இருக்கிறது. கோயிலுக்கு வரும் அடியார்கள் கைகால் கழுவுவதற்கு அமைத்த கிணறு, துஷ்பிரயோகம் காரணமாகவே மூடப்பட்டது.

கன்னாதிட்டி - கன்னாரும் பொற்கொல்லரும் வாழும் இடமென்றால், திட்டியில் அதாவது மேட்டிலிருந்து சற்றே கீழிறங்கிச் செல்ல 'சேணியதெரு' என்ற பகுதி அமைந்திருக்கிறது. இது நெசவாளர்கள் வாழ்ந்த பகுதி. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவை ஆட்சி புரிந்த குணபூஷண சிங்கை ஆரியன் என்ற சக்கரவர்த்தி, யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றி ஆட்சிக்குட்படுத்தினான். தென்னிந்தியாவில் காரைக்காலை அடுத்த திருமலைராயன் பட்டணம் போன்ற ஊர்களில் வாழ்ந்த காருகவினைஞர் என்ற நெசவாளர் குடும்பங்கள் சிலவற்றை அவர்களுக்குத் தொழில் வாய்ப்புக் கொடுப்பதற்காகவும் யாழ்ப்பாணத்தில் புடவை உற்பத்தியை ஏற்படுத்துவதற்காகவும் கொண்டு வந்து குடியேற்றினார்கள். இவர்கள் தெலுங்கு மொழியை தாய் மொழியாக அதாவது வீட்டு மொழியாக, பேச்சு மொழியாகக் கொண்டிருந்தனர்.


கன்னாதிட்டிப் பகுதியில் காலையிலேயே பட்டறையில் தட்டார் பவுண் மீது நகை செய்வதற்காக தட்டும் சத்தம் கேட்கும். அதேசமயம் கன்னாதிட்டிக்குளத்தைத் தாண்டி கிழக்குப் பக்கமாக இருக்கும் சேணியதெருவிலிருந்த வீடுகளில், சேலைகள் மற்றும் வேட்டிகள், விரிப்புக்கள் போன்ற ஆடைகளை உற்பத்தி செய்வதற்காக நெசவுத்தறிகள் அடிக்கும், 'சட சட' என்ற சத்தமும் அநேகமாக ஒவ்வொரு வீடுகளிலும் கேட்கும். இப்போது தெலுங்கும் இல்லை, புடவை நெய்யும் தறிகளும் இல்லை, நெசவாளர்களும் இல்லை. அந்தப் பரம்பரையே இன்று பதினொரு பேராகிவிட்டது.

இந்தியாவிலிருந்து வந்த தெலுங்கு பேசும் 'காருகவினைஞர்கள்' என்ற நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், சீதேவி - பூதேவி சமேத நாராயண மூர்த்தியின் சிறிய விக்கிரகமொன்றையும் கொண்டுவந்திருந்தார். இவர்கள் ஆரிய குளத்தைச் சமீபித்த இடங்களிலேயே குடியமர்த்தப்பட்டனர்.

கன்னாதிட்டி மேட்டுப்பகுதியிலிருந்தும், வடக்குப் பகுதியில்,

மேட்டுப் பகுதியிலிருந்தும் ஓடி வரும் மழைநீர் கன்னாதிட்டியின் கிழக்கே, பள்ளமான இடத்தில் தேங்கி நின்று தெற்குப் பகுதியில் பள்ளம் பார்த்து ஓடத்தொடங்கியது. இப்படி ஓடிய தண்ணீர் இதேபோல் இன்னுமொரு பள்ளமான வெளியில் தங்கி நின்றது. கன்னாதிட்டியின் கிழக்கே மழை வெள்ளம் தேங்கிய பள்ளம் கன்னாதிட்டி தாமரைக் குளமாகவும் பின்னர் அந்த வெள்ளம் பாய்ந்தோடி தேங்கிய இடம் வண்ணான் குளமாகவும் பெயர் பெற்றன.

வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் மழை வெள்ளம் வாய்க்கால் அமைத்தது போல் ஓடி இடையிடையே பள்ளங்களில் தேங்கி குளங்களாகி அவற்றிலிருந்து பாய்ந்து பண்ணைக் கடலுக்குப் போய்ச் சேர்ந்தன. இப்பொழுது அத்துமீறி கரையோரங்களில் குடியேறிவருவதால் குளங்கள் சுருங்கிவிட்டன.




கன்னாதிட்டிக் குளத்தின் தெற்கே பொற்கொல்லர்கள் தங்கள் குலதெய்வமாகிய காமாட்சி அம்மனுக்கு (காளி) ஒரு கோயில் எடுத்தனர். இதேபோல் காங்கேசன்துறை வீதியில் பொற்கொல்லர்கள் என்ற தட்டார், தெருப் பகுதியில் காமாட்சி அம்மனுக்கு ஒரு கோயில் அமைத்தனர். இது நாச்சியார் கோயில் என்று பெயர் பெற்று நாச்சிமார் கோயில் என்று மருவி வந்துள்ளது.

"காருகவினையர்கள்" என்ற நெசவாளிகள், கன்னாதிட்டிக் குளத்துக்கும் ஆரியகுளத்துக்கும் இடையில் குடியேறினர். இப்படிக் குடியேறியவர்களில் ஒருவர் தம்முடன் கொண்டு வந்திருந்த சீதேவி, பூதேவி சமேத ஸ்ரீமத் நாராயணனின் விக்கிரகத்தை கன்னாதிட்டிக் குளத்தின் கிழக்குக் கடற்கரைக்குச் சமீபத்தில் நின்ற பலாமரத்தின் கீழ் வைத்துப் பூசை செய்து வந்தார்.

இவ்வாறு வந்து குடியேறிய தெலுங்கு பேசும் காருகவினையர்களான நெசவாளிகள் குடும்பங்கள், பத்தநூலிச் செட்டிப்பிள்ளைகள் என்ற பரம்பரையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சேணியச் செட்டியார்கள் என்று அழைக்கப்பட்டனர். இதே வேளை கன்னாதிட்டிக் கிராமத்துக்கு மேற்கே உள்ள மேட்டுப் பகுதியில் காரைக்குடி என்ற தென்னிந்தியாவில் வாழும் நகரத்தார் என்றழைக்கப்படும் நாட்டுக் கோட்டைச் செட்டிகளின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் சிவபெருமானுக்கு






இங்கே கோயில் எடுத்தார்.

இப்பகுதியில் நகரத்தார் என்று அழைக்கப்படும் கோட்டைச் செட்டிமார் குடியேறி வட்டிக் கடைகளையும் திறந்தனர். நகரத்தார் என்ற நாட்டுக் கோட்டைச் செட்டிமார் உலகில் எங்கே போனாலும் கந்தா, கலியுகவரதா, முருகா என்ற பல நாமங்களையுடைய வேல் தாங்கி நிற்கும் கதிரேசனுக்கு கோயில் எழுப்பி விழா எடுக்கத் தவற மாட்டார்கள்.

வண்ணார் பண்ணைச் சிவன் கோயில் என்றும், செட்டியார் சிவன் கோயில் என்றும் அழைக்கப்படும் சிவன் கோயிலின் முன்பாக கன்னாதிட்டி வீதி தொடங்குகிறது. இந்தச் சிவன் கோயிலுக்குத் தெற்குப் பக்கமாகச் செல்லும் காங்கேசன் துறை வீதியில் சிவன் கோயிலிலிருந்து சில யார் தூரத்தில் நகரத்தார் அமைத்த கதிரேசன் கோயில் இருக்கிறது. நகரத்தார் தொடர்ந்தும் வட்டிக் கடை நடத்த முடியாததால் தாய்நாடு திரும்பினார்கள். சில ஆண்டுகளின் பின்னர் நகரத்திலுள்ள பிரமுகர்கள் கூடி குழுவொன்று அமைத்து கோயில் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றனர். இதன் பின்னர் பல வருடங்களாகப் பூட்டியபடியே இருந்த கோயிலின் இரும்புப் பெட்டியில் பழங்கால பெறுமதிவாய்ந்த ஆபரணங்கள் இருந்தன. பின்னர் இவை பாதுகாப்பாக யாழ்ப்பாணத்திலுள்ள வங்கிக் கிளையொன்றில் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் ஆயுதக் குழுவொன்று வங்கியைக் கொள்ளையடித்ததில் கதிரேசன் கோயில் நகைகளும் போய்விட்டன.

கதிரேசன் கோயில்களில் வேல் தான் மூலவராக இருக்கும். இங்கும் இப்படித்தானிருந்தது. புதிய நிர்வாகத்தின்கீழ் திருச்செந்தூர் முருகன் போலவே இந்தியாவில் உருவாக்கப்பட்டுக் கொண்டுவரப்பட்டது முருகன் விக்கிரகம். இப்பொழுது கதிரேசன் கோயில் முருகன் மூலவராகவும், அவர் கரத்தில் முன்பு மூலவராக இருந்த வேலாயுதமும் தரிசனம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த முருகன் சிலையை எஸ்.ரி.ஆர் என்றழைக்கப்படும் எஸ்.தியாகராஜாவே இந்தியாவிலிருந்து



உருவாக்கிக் கொண்டு வருவதற்குப் பொறுப்பாக இருந்து செயற்பட்டார்.

குளங்களில் தொடங்கி கோயிலுக்குப் போய்விட்டேன். கோயிலும் குளங்களும் ஒன்றாகப் பின்னிப் பிணைந்தவைதானே தமிழர் பண்பாடும் நாகரிகமும்!





கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

சிறுகதை

சிவனு மனோகரன்

நிசப்தம் அடர்ந்த இரவு மனசை ஒரு விதமாய் பீதியில் விழ்த்தியிருந்தது. தொண்டைக் குழிக்குள் மேலும் கீழுமாய் ஏதோ உருண்டோடுவதைத் தவிர அம்மாயி உடம்பில் சீவன் இருப்பதற்கான அறிகுறிகள் குறைவாகவே இருந்தன.

மனசு நரகத்தில் தோய்ந்திருந்தது.

மனசில் கவிழ்ந்திருந்த இருளை விடவும் புகைப்படிந்துக் கிடந்த ஸ்தோப்பின் சுவர்கள் அதிகமாய் என்னை குழப்பத்தில் ஆழ்த்தியது.

சில நாட்களாய் ஊதுவர்த்தியை மேவி நாசியை அறுக்கும் அந்தக் குமட்டல் உணர்வு தொண்டைக்குள் நின்று வதைக்கத்தான் செய்தது. மரணத்தின் பயணத்தில் ஒவ்வொரு நிமிடமும் எவ்வளவு கொடுமையானது என்பதை உணர்ந்துக் கொண்ட தருணம் அது.

சில நாட்களாய் அம்மாயின் உடல் அசைவுகள் முழுமையாய் அடங்கியிருந்தன. மேல் மூச்சும் கீழ் மூச்சும் அவ்வப்போது அவளை அம்மாயாக அடையாளப்படுத்திக் கொண்டிருந்தது. ஆனால் அம்மாயின் கண்களில் மட்டும் அதே ஒளிக்கீற்று சற்றும் மங்காமல் நின்று நிலைத்திருந்தது.

வலிகள் நிரம்பிய மனசுடன் கோடியில் ஒதுங்கியபோது அங்கு குழுமி இருந்த கும்மிருட்டு மனசின் வலிகளை இன்னும் கணப்படுத்திச் சென்றது.

ஓடியோடி உழைத்து ஓடாய் தேய்ந்த உடல் நீட்டி நிமிர்ந்து கிடப்பதைத்தான் என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

வாயோயாமல் கதை சொல்லி என்னை கட்டியெழுப்பிய ஆளுமை. சத்தி எடுத்தும், வயிற்றாலோடியும் நிலை தளர்ந்து கிடப்பதுதான் கொடுமை. யாருமற்ற தனிமையில் வாலிபத்தின் கனவுகளோடு கைகோர்த்துக் கொண்டு, அல்லாடிய தருணங்களில் தைரியமாக தோளைத்தட்டி நம்பிக்கை ஊற்றி, வாழ்க்கையை வசப்படுத்திய வாய் நாறி, நாசியை அறுப்பதை எண்ணிப்பார்க்கவே கஷ்டமாக இருந்தது.

மார்கழி பிறந்து விட்டால் அம்மாயி காட்டும் ஆர்வத்தை இப்போது நினைத்தாலும் உள்ளுக்குள் பரவசம் படரும். மாட்டு சாணத்தை கரைத்து வாசல் தொடங்கி சந்து, பாதை வரைக்குமாய் தெளித்து கோலமிடும் அழகு இப்போதும் படமாய் விரிகிறது. அது மட்டுமா... ஒட்டு யைத்து பருவப் பெண்களில், அம்மாயி கையில் நாட்டு முட்டையும் நல்லெண்ணையும் வாங்கிக் குடிக்காமல் யாரும் ஆளாக முடியாது. அப்படி கரிசனையோடு எல்லோரையும் நேசித்த உள்ளத்தில் இருந்து பிரிய மனமில்லாமல் அல்லாடும் சீவனை எண்ணித்தான் வருந்தியது மனசு.

அம்மாயின் பெருமைகளை பேசிப் பேசிப் எல்லோர் வாயும் அசந்துப் போன நிமிடங்களில் ஸ்தோப்பை நிசப்தம் ஆக்கிரமித்திருந்தது. அம்மாயி விடும் மேல் மூச்சு மட்டும் தெளிவாய் கேட்டுக் கொண்டிருந்தது.

விடாமல் மல்லுக்கு நிற்கும் ஈக்களின் உடும்பு பிடியோடு போராடி போராடி கைகள் அசந்துப் போயிருந்தன. அறைகுறை சீவனோடு ஆங்காங்கே சில அசைவுகள் காட்டும் அம்மாயின் உடல்மீது. ஈக்களுக்கு என்னதான் அவ்வளவு பிரியமோ தெரியவில்லை. எது எப்படியானாலும் ஈக்கள் மட்டும் குறைவதாய் இல்லை. சுற்றிச் சுற்றி வட்டமடிக்கும் ஈக்களின் தொல்லைகள் தொடர்ந்த வண்ணமே இருந்தன.

அப்போதுதான் போர்வையை மேவி வெளிப்பட்ட அம்மாயின் கால்கள் கண்களில் பட்டது. அக்கணம் மனசு வலியின் உச்சம்



தொட்டது. விகாரப்பட்டு, வெடிப்புக்களோடு கிடக்கும் இந்தப் பாதகங்களின் பின்புலத்தை தேடிப்பார்ப்பதற்கு யாருமே தயாரில்லை என்ற வேதனையும் விம்மலும் கண்ணீராய் வெளிப்பட்டது.

ஆனத்தோட்ட மலைமேடுகளில் சரளமாய் ஓடித்திரிந்த கால்களுக்கு ஓய்வென்பது மறுக்கப்பட்டதாகவே இருந்தது. மூன்று மாதங்களுக்கு முன்பு கூட கொட்டிய ஆடி மழையில் பத்தேக்கரில் பதினாறு கிலோவுக்காக அல்லாடிய கால்கள்தான் இவை. திடும்மென முடங்கி நோயில் விழுந்ததுதான் வியப்பாய் இருக்கிறது.

உறவுகளுக்காய் ஓடியோடி உழைத்த பாதங்களில் யார் கண் பட்டதோ. ஒரேடியாக இப்படி முடக்கம் கண்டு விட்டதே என்ற விம்மலுடன் மெதுவாய் உரமேறிய பாதங்களை தடவிப் பார்க்கிறேன். கருங்கல்லில் கை உராய்ந்த உணர்வு என் வேதனைகளுக்கு வழுவூட்டிப் போனது.

முழு நிலவு வானத்தில் உலவிக் கொண்டிருந்தது. நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. யாருமற்ற தனித் தீவாய் ஸ்தோப்பு என்னையும் அம்மாயையும் மட்டும் உள்வாங்கி இருந்தது. அப்போது அம்மாயின் வாய்ப்புலம்பல் சற்று வலிமை பெற்றிருந்தது.

“மு-னு-சா-மி.... மு-னு-சா-மி....” என்று பிதற்றிய வார்த்தைகள், எங்கோ ஒரு மூலையில் ஒட்டிக் கொண்டிருந்த அம்மாயி குறித்த ஈரங்களில் வெப்பக்காற்று வாரி இறைத்தது. ஆவேசமாய் எழுந்து வெளியில் வருகிறேன். சாயம் கலைந்த சுருக்கங்களோடு கொடிக்கயிற்றில் அசைந்தாடிக் கொண்டிருக்கும் சேலை அப்போதுதான் கண்ணில் பட்டது. பிடிவாதமாய் இத்தனை நாட்களும் அணிந்து அழுக்கின் பிறப்பிடமாய் இருந்து மானத்தை மறைத்துக் கொண்டிருந்த கோடிக்கு வேறொரு கோடி ஈடாகாது என்பதுதான் அம்மாயின் எண்ணப்பாடு. ஏனெனில் தவமாய் தவமிருந்து பெற்றெடுத்த முனுசாமி (தீ) வாளிக்கு வாங்கித் தந்த ஒரேயொரு சேலை அதுவாகும். அந்த ஒரு காரணத்தைத் தவிர வேறொரு காரணம் இல்லாத போதும் “ஏன் தாயி... நான் செத்தா இந்த



காரணம் இல்லாத போதும் “ஏன் தாயி... நான் செத்தா இந்த
சீலயிலத்தான் சுத்திப் போடணும்” என்ற எதிர்பார்ப்பை முன்வைத்தபோது உண்மையாகவே அதிர்ந்துதான் போனேன்.

பனி நன்றாக இறங்கியிருந்தது.

அம்மாயின் மேல்மூச்சும் கீழ்மூச்சும் சளியிடம் சிக்கி போராடிக் கொண்டிருந்தது.

நிசப்தம் உறைந்திருந்த அக்கணம் அம்மாயிடம் இருந்து வெளிப்பட்ட தொனி அம்மாவுக்கு பொறிதட்டினாற் போல ஏதோவொன்றை உணர்த்தியிருக்க வேண்டும். கண்களை மெதுவாய் துக்கம் வருடத்தொடங்கிய தருணத்தில் “அம்மாளு எழும்புடி... கெழவிக்கு சேட்டுமக் கட்டி இழுக்குது... இன்னும் கொஞ்ச நேரத்துல முடிஞ்சிறும். ஆளுக்கு கொஞ்சம் சாராயம் வையிங்க...” என்றதும் நான் முந்தி நீ முந்தி என்று கிளாசும் கரண்டியுமாய் பனியில் இறங்கிய எல்லார் முகத்திலும் மிரட்சியும் கண்ணீரும் படர்ந்திருந்தது.

ஈரும் பேனுமாய் புழுத்திருந்த தலையை மார்பில் கிடத்தி மெதுவாய் இரண்டு கரண்டி சாராயத்தைப் பருக்கி முடிக்கிறேன். அம்மாயின் உடல் சூடு கணிசமாய் குறைந்திருந்தது. அங்கேயும் அதே எதிர்பார்ப்புடன் என்னை எதிர் கொள்ளும் கண்களில் மட்டும் ஏக்கத்தின் வீச்சு படர்ந்திருந்தது.

தோட்டத்தில் எங்காவது இழவு விழுந்து விட்டால் இரவிரவாக கண்விழித்து கிடப்பதோடு மறுநாள் உப்புபுளி காரத்தோடு 'துக்கசோறு' ஆக்குவது வரை நின்று பிடிக்கும் அம்மாயின் காலம் முடியப்போகிறது என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

மெது மெதுவாய் கண்கள் இருண்டன. மூச்சு சுருதி பிசகியபடி அபசுரம் இசைக்க...

“கெழவி... கெழவி... இந்தா பாரு ஒ மவென் முனுசாமி வந்துட்டான். கண்ணத் தொறந்துப் பாரு கெழவி... பாரு” என்று பக்கத்து வீட்டு சிவப்பயலை இழுத்து அம்மா காட்டிய சாமர்த்தியம் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது.

இறுக்கமாய் அவன் கைகளைப் பற்றியபடியே அவன் வார்த்த

> “இறுக்கமாய் அவன் கைகளைப் பற்றியபடியே அவன் வார்த்த சாராயம் உயிரை நனைக்கவும் விடை பெற்றுக் கொண்டது

சாராயம் உயிரை நனைக்கவும் விடை பெற்றுக் கொண்டது அம்மாயின் ஆன்மா.

ஆங்காங்கே இருள் விலகி விடியல் தன் இருப்பை காட்டியிருந்தது.

வெறுமனே பக்கத்து வீட்டில் இருந்து பழகிய எனக்கே இவ்வளவு துடிக்கும்போது உதிரத்தை ஊட்டி வளர்த்த முனுசாமிக்கு எவ்வளவு துடிக்க வேண்டும் என்ற கேள்வி மட்டும் கம்பீரமாய் உள் நின்று குமைந்துக் கொண்டிருந்தது.

# "நண்பர்களிடையே நம்பிக்கைத் துரோகம் கூடாது" NO!

இ ரத்த உறவுகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை விட உன்னதமான ஒரு முக்கியத்துவத்தை நாங்கள் நண்பர்களுக்குக் கொடுப்போம். எம் வாழ்வில் நாள்தோறும் பலருடன் பழகுவோம். பலரையும் நண்பர்களாக்கிக் கொள்வோம். ஆனாலும் அதில் உற்ற நண்பர்கள் எனக் கூறும் அளவிற்கு எத்தனை பேர் இருக்கிறார்கள்? அவர்களை எங்களிலிருந்து பிரித்துப் பார்க்காது சகல விடயங்களையும் கூறும் அளவுக்கு நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களாக பார்க்கின்றோமா? 'நட்பு' எனும் வார்த்தையை களங்கப்படுத்தாமல் அவர்களும் நடந்து கொள்வார்களா? இவ்வாறான பல கேள்விகளும் மனதை அரித்தெடுக்க அதனையே ஒரு தலைப்பாக்கி நண்பர்கள் வட்டத்தில் கலந்துரையாட விடுவோம் என்ற எண்ணத்தில் களமிறங்கினேன்.

சிக்கினார்கள் ஆறு பேர். யாழ்ப்பாணம் இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் மூன்றாம் வருட சங்கீதப் பிரிவு மாணவர்களான ரதன், சித்ரா, மதுராங்கி, சர்மிளா, அகிலன், விதீஷ் ஆகியோர்களே இவர்கள். நான் கேள்வி கேட்டால் அவர்கள் என்னையே மடக்கி விடுவார்கள் போலிருந்தது அவர்களது உரையாடல்கள்.

"இப்பிடிக் காட்டுக் கத்தல் கத்துறீங்களே... நீங்களா இனிமையா பாடுறனீங்க?" என நக்கலாக கேட்டேன். என் நளினமில்லாத நக்கலையும் புரிந்து கொண்ட அவர்கள் "இப்ப பாடுறம் பாக்கிறீங்களா?" என்றார்கள். "ஐயோ! வேண்டாம். கழுதையெண்டா எனக்கு ரொம்ப பயம். நாங்க பிளான் பண்ணின மாதிரியே எதையாவது கதைப்பமன்" என்றேன்.

"அந்தப் பயம் இருக்கட்டும்" என்று தங்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டு விடயத்துக்கு இறங்கினார்கள். " எவன் கூட நம்பி பழகலாம்.. எவனை நம்பக் கூடாது எண்டு கண்டு பிடிக்கிறதே பெரும்பாடா கிடக்கு" என்றார் அகிலன். "எங்க ண்டு



இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்கள்

# இளமை புதுமை கலாட்டா



அகடமில கூட நாளுக்கு நாள் நண்பர்கள் பிரியிறதும் புதுசா நண்பர்கள் சேருறதுமாத் தான் கிடக்கு. நேற்று என் கூட நிண்டு அவனோட சண்டை பிடிச்சவன் இண்டைக்கு அவனோட நிண்டு என்னோட சண்டைக்கு வாறான்" என்றார் மதுராங்கி. "பல பெரிய துரோகங்களுக்கு மத்தியில் சின்னச் சின்ன சண்டைகள் இருக்கே... அப்பப்பா அதொரு தனிச்சுகம்" என்றார் சித்ரா.

"என் வாழ்க்கையிலேயே மறக்கேலாத ஒரு விடயத்தை என் ஆருயிர் நண்பன் செய்திட்டுப் போட்டான். பணம் போகும் வரும்.. அதுக்காக நல்ல மனிதர்களை இழக்க முடியுமா? என நினைத்து கடந்த கால கசப்பான சம்பவங்களை மறந்து இருக்கிறன்" என்றார் ரதன். மாணவர்களில் கொஞ்சம் வயதானவரும் அவர்தான். நான் உட்பட அனைவரும் அவர் கதையை கேட்க ஆயத்தமானோம். "நண்பன் ஒருவன் (பெயரைக் கூடச் சொன்னார்) வயதில் சின்னவன். என் ஏ.ரி.எம் கார்ட் நம்பர் உட்பட சகல விடயங்களையும் அறிந்தவன். நான் எனது பேர்ஸை சாதாரணமாகவே வைப்பேன். அவன் அதிலிருந்த ஏ.ரி.எம்மை எடுத்து என் வங்கிக் கணக்குகளிலிருந்து சிறிது சிறிதாக நான்கு லட்சம் வரை பெற்றிருக்கின்றான். ஒருமுறை வங்கிக் கணக்கை சரி செய்த போது இந்த மோசடி தெரிய வந்தது. அந்த நேரம் அவன் இலங்கையிலேயே இல்லை. அவன் வீட்டாருடன் கதைத்தேன். அவர்கள் கையை விரித்து விட்டார்கள்" என தன் சோகக் கதையை கூறி முடித்தார் ரதன்.

"இந்த பெர்ஸனல் கிளாஸ¬களுக்கு போறவங்க இருக்கிறாங்களே... அவங்கட கூத்தை என்னவெண்டு சொல்லுறது" என ஆரம்பித்தார் சித்ரா. "ஏதோ அவங்கட சொத்தை எழுதிக் குடுக்கச் சொன்ன மாதிரி பயந்தடிச்சு சொல்லாமல் கொள்ளாமல் கிளாஸ¬களுக்கு ஓடுவாங்கள். இப்பிடியான ஆக்கள் இப்ப இங்கையும் இருக்கிறாங்க" என கூட இருந்த நண்பிகளையே தர்ம சங்கடத்துள் மாட்டி விட்டார் அவர். "நாங்கள் எங்கடி உனக்குச் சொல்லாமல் போனம்? நீ தானேடி வர கஷ்டம் எண்டு சொன்னனி..." எனமதுரா கேட்டார்.

"நல்ல விளையாட்டா இருக்கு. நீங்க எனக்குச் சொல்லாமல் மிருதங்க கிளாஸ் போனீங்க. ஆனா உங்களை விட வேளைக்கு நான் படிச்சு முடிச்சிட்டன்" என்றார் சித்ரா. "நீ 300 ரூபா குடுத்துப் படிச்சனி. நாங்க 150 ரூபாவோட படிச்சம்" என்றார் சர்மிளா. எல்லோரும் கல கலவென சிரித்தார்கள். தன் ஆருயிர் நண்பனொருவனை அவனது முட்டாள்தனமான செய்கையால் இழந்ததை பற்றி லிதிஷ் கூறினார். "ஒருமுறை என் நண்பனுடன் ஓரிடத்திற்கு செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் அவனை அழைத்தேன். அவனும் காலையிலிருந்து வருவதாகவே பதில் சொன்னான். நானும் மாலை வரை காத்திருந்தேன். மாலை திடீரென அவன் வரமுடியாது. அவசர வேலை இருப்பதாக கூறினான். நானும் விட்டுவிட்டேன். சொல்லி சிறிது நானும் விட்டுவிட்டேன். சொல்லி சிறிது நேரத்திலேயே அவன் வழக்கமாக வீடு செல்லும் பஸ்ஸில் இருப்பதைக் கண்டேன். எதற்காக இப்படி ஒரு பொய்யை சொல்ல வேண்டும்? அவனிடமே நேரடியாகக் கேட்டேன். கோபம் எனக்குத் தான் வரவேண்டும். ஆனால் அவன் அதிமாக கோபப்பட்டு என்னைப் பிரிந்து விட்டான். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் தானே!"


இன்னொரு சுவாரசியமான பல இடங்களில் நடக்கின்ற கதை ஒன்றைக் கூறினார் மதுராங்கி. "எனக்கு தவறான முறையில் பல எஸ்.எம்.எஸ் கள் வருவதுண்டு. தெரியாத நம்பர்களில் இருந்து வரும் போது நான் அதைக் கவனிப்பதில்லை. ஆனாலும் சில காலங்களின் பின் அந்த அசிங்கமான செயலைச் செய்தது என் நெருங்கிய நண்பன் என தெரியவந்தது. அன்றிலிருந்து நான் அவனுடன் கதைப்பதை நிறுத்திவிட்டேன்" என்றார்.

"இதே போல தான் ஒரு விடயம் எனக்கும் நடந்தது. நான் ப்ளாக்கில் எழுதி வருகின்றேன். என்னைக் கேவலப்படுத்தும் விதத்தில் பின்னூட்டங்கள் வருவதுடன் கணிசமான மைனஸ் வாக்குகளும் என் பதிவுக்கு கிடைத்து வந்தது. ஒரு நாள் துரதிஷ்டவசமாக தொழில்நுட்பம் அவரைக் காட்டிக் கொடுத்து விட்டது. இப்பொழுது தலைகுனிவு அவருக்குத்தான்" என்றார் அகிலன்.

நட்பின் முக்கியத்துவம், குறித்த காலப்பகுதியில் தான் அதிகமாகத் தேவைப்படும். வளர்ந்தோர் குடும்பமாக மாறியவுடன் பழைய நட்புக்களை நினைத்துப் பார்க்கக் கூட நேரமிருக்காது. உன்னதமான அந்த நட்பை அற்பத் தனமான காரணங்களுக்காக கேவலப்படுத்தும் நிலைமை அன்றிலிருந்து இன்றுவரை இருக்கின்றது. இது என்றுமே இருக்க வேண்டுமா? என்பது எங்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்கின்றது.

'நண்பர்களைப் பெருக்குவோம். நட்பைப் போற்றுவோம்' என சந்திப்புக்கு நன்றி கூறி விடைபெற்றேன்.

– சந்திப்பும் படங்களும் : அங்கியன்



# ஜென் வாழ்க்கையின் சூட்சுமம்

டோக்குசான் என்ற ஜென் துறவி மூலிகைகளை பறிப்பதற்காக மலைச்சாரல் ஒன்றில் சென்று கொண்டு இருந்தார். ஓரிடத்தில் ஒரு குன்றின் மீது சிறிய குடிசை இருப்பதைக் கண்டார். சுற்றிலும் நிறைய தூரத்திற்கு எந்த வீடும் இல்லை. அது போன்ற ஏகாந்தத்தில் குடிசை இருக்க வேண்டுமென்றால் அதில் வசிப்பது ஒரு துறவியாகத் தான் இருக்க வேண்டும் என்றெண்ணிய டோக்குசான் அந்தக் குடிசையின் கதவைத் தட்டினார். கதவைத் திறந்ததோ ஒரு மூதாட்டி.

அந்த ஜென் துறவியைப் பார்த்தவுடன் மூதாட்டி பக்தியுடன் தலை தாழ்த்தி வணக்கம் தெரிவித்து வரவேற்றாள். அவருக்கு முகமலரச்சியோடு வரவேற்ற அவளைக் கண்டு வியப்பு. அம்மா நீங்கள் இந்த மலையில் இந்த ஏகாந்தத்தில் என்ன செய்கிறீர்கள் என்று கேட்டார்.

ஐயா நான் இங்கு தனியாகத் தான் வசிக்கிறேன். இங்கு யாரும் வருவதில்லை. இங்கு காய்கறிகள் வளர்த்து அருகே உள்ள கிராமங்களுக்குக் கொண்டு சென்று விற்கிறேன் என்றாள் அந்த மூதாட்டி. விளையும் காய்கறிகளைப் பற்றி மகிழ்ச்சியுடன் அவருக்கு விவரித்தாள். மலைச்சாரலில் விளையும் அந்தக் காய்கறிகள் சத்தானவை என்றும் அந்தக் கிராம மக்களுக்கு அந்த சத்தான காய்கறிகளை விற்பதில் தனக்கு ஒரு நிறைவிருக்கிறது என்றும் தெரிவித்தாள். அவருக்கும் அந்தக் காய்கறிகளைக் கொண்டு, தான் சமைத்திருந்த எளிய உணவை அளித்து உபசரித்தாள். தன் வீட்டுக்கு வந்த அபூர்வமான அந்த விருந்தாளியைக் கண்டு அவளுக்கு பெருத்த மகிழ்ச்சி.


அந்த மகிழ்ச்சியையும் அன்பையும் கவனித்த டோக்குசான் உணவருந்தியபடியே கேட்டார். வேலை இல்லாத போது நீங்கள் எப்படிப் பொழுதைப் போக்குகிறீர்கள்?
நான் சுவர்க் கோழிகளின் ஓசையையும் மழை காற்றின் இசையையும் இரவில் நிலவழகையும் ரசித்து மகிழ்வேன். பொழுது தானாகப் போகிறது என்றாள் அந்த மூதாட்டி.

அந்த மூதாட்டியின் பதில் டோக்குசானை மனதினுள் பாராட்ட வைத்தது. அவர் மௌனமாகத் தலையாட்டினார்.

ஐயா நான் படிப்பறிவில்லாதவள். ஆன்மிக ஞானம் அறியாதவள். எனக்கு புத்தரின் அறிவுரைகளைப் போதிப்பீர்களா? என்று மூதாட்டி மிகுந்த அடக்கத்துடன் கேட்டாள்.

தனக்கு சமமானவர்களுக்கு ஒரு மனிதன் போதிப்பதில்லை. மேலும் ஜென்னில் வாழ்கின்ற மனிதனுக்கு வேறெந்த போதனையும் தேவையில்லை என்ற டோக்குசான் அந்தப் பெண்மணியைத் தலை தாழ்த்தி வணங்கி விட்டு விடைபெற்றார்.

இன்றெல்லாம் வேலை என்பதே ஒரு கடுஞ்சொல் என்பது போல் ஆகிவிட்டது. சலிப்புடனும் அலுப்புடனும் அணுகும் சமாச்சாரமாகி விட்டது. அதுவும் அந்த மூதாட்டியைப் போல் வயோதிபத்தை எட்டும் போது வேலை பெருஞ்சுமையாகவே தோன்றிவிடுகிறது. ஆனால் அந்த மூதாட்டி தன் வேலையை மகிழ்ச்சியாகச்



செய்வதுடன் மீதியுள்ள பொழுதையும் நிறைவாகக் கழிக்க முடிந்ததை அந்த ஜென் துறவி கவனித்தார். பொழுதைப் போக்க உலகம் படாத பாடுபட்டுக் கொண்டிருக்கையில் நூறாயிரம் கேளிக்கைகளைத் தேடி ஈடுபட்டும் திருப்தியடையாமல் திணறிக் கொண்டிருக்கையில் சுவர்க்கோழிகளின் ஓசையயும் காற்றும், மழையும் உருவாக்கும் இசையையும் நிலவழகையும் ரசித்தபடி வாழும் அந்த மூதாட்டியின் ரசனையைப் பார்த்து ஜென் துறவி வியந்தார். இதுவல்லவா ஜென்னின் வாழ்க்கை முறை என்று நினைத்ததால் தான் டோக்குசான் ஜென்னில் வாழ்கின்ற மனிதனுக்கு வேறெந்த போதனையும் தேவையில்லை என்றார்.

ஜென்னில் இருக்கின்ற இடமோ செய்கின்ற தொழிலோ முக்கியமில்லை. படித்து முடித்த புத்தகங்களின் எண்ணிக்கையோ, சேர்த்து வைத்திருக்கிற செல்வத்தின் அளவோ ஒரு அடையாளமில்லை. வாழ்கின்ற முறையில் தான் எல்லா சூட்சுமமும் இருக்கின்றது. ஜென் நிகழ்காலத்தில் முழுமையாக இருக்கச் சொல்கிறது. இருப்பவற்றை முழுமையாக ரசிக்கச் சொல்கிறது. கிடைத்தவற்றிற்கு நன்றியுடன் இருக்கச் சொல்கிறது. ஜென்னில் ஒப்பிடுகள் இல்லை. ஒப்பீடுகள் இல்லாத போது துக்கங்களும் இல்லை.

நிகழ்காலத்தில் முழுமையாக வாழும் போது செய்கின்ற செயல்களில் தானாக மெருகு கூடி விடுகிறது. மனதில் தானாக நிறைவு ஏற்பட்டு வருகிறது. சின்னச் சின்ன விஷயங்களையும் ரசித்து வாழ முடிகிறது. ஜென்னில் தேநீர் அருந்துவதே ஒரு தியானத்தைப் போல செய்யப்படுகிறது. அந்த நேரத்தில் தேனீரை மிகவும் ரசித்து ருசித்து நன்றியுடன் மகிழ்ச்சியுடன் நிதானமாக அருந்த வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

இன்றைய வாழ்க்கை முறையின் அவசர ஓட்டத்தில் சின்னச் சின்ன விஷயங்களை ரசிக்க முடியாத சிக்கல்கள் நிறையவே இருக்கின்றன. தேவைகள் அதிகப்பட, அதிகப்பட அதற்காகத் தர வேண்டிய விலையும் அதிகப்படுகிறது. அதுவும் விரைவாக அந்தத் தேவைகள் பூர்த்தியடைய வேண்டும் என்ற வெறியும் இருந்து விட்டால் பின் வேறெதற்கும் வாழ்க்கையில் நேரமோ மனமோ இருப்பதில்லை. அதில் உண்மையில் பலியாவது இது போன்ற சின்னச் சின்ன ரசனைகளும் சந்தோஷங்களும் தான்.

இலக்குகள் மிக முக்கியம் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால் அந்த இலக்கை நோக்கிச் செல்லும் பயணத்தில் ஒவ்வொரு கணமும் வாழப்பட வேண்டுமேயொழிய ஓட்டப்படக் கூடாது. எல்லாம் இயந்திரகதியில் இருந்துவிடக்கூடாது. இலக்குகளைப் போலவே அவற்றை நோக்கிச் செல்லும் பயணத்தின் தரமும் முக்கியமே. முழுமனதோடும் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் செய்ய வேண்டிய செயல்களைச் செய்தோமானால் விரைவாகவும் தரமாகவும் சிறப்பாகவும் எதையும் செய்து முடிக்கவும் முடியும். இதையே ஜென் வலியுறுத்துகிறது.

மேலும் ஜென் எளிய வாழ்க்கையையும் நிறைவான மனநிலையையும் மிக முக்கியமாகக் கருதுகிறது. ஜென்னிற்கு கூர்மையான அறிவு முக்கியமில்லை. பக்குவப்பட்ட மனம் முக்கியம். அந்த மூதாட்டிக்கு ஜென் என்றால் என்ன என்று தெரியாமலேயே ஜென் வாழ்க்கை வாழ்ந்திருக் கிறாள். அதனால் அதை விளக்க வேண்டிய போதனைகளுக்கு அவசியமிருக்கவில்லை. வாழ்க்கைக்காகவே போதனைகளே அல்லாமல் போதனைகளைக் கற்பதற்காக வாழ்க்கை அல்ல.

சுவர்க்கோழிகளின் ஓசையையும் காற்றையும் மழையையும் நிலவையும் யாரும் என்றும் அந்த மூதாட்டியிடமிருந்து பறித்து விட முடியாது. நம்மிடமிருந்து யாரும் எப்போதும் அபகரிக்க முடியாதவற்றின் மூலம் நம்மால் மகிழ்ச்சியடைய முடிந்தால் வாழ்க்கையில் மகிழ்ச்சியும் நிறைவும் என்றும் (குறைவதில்லை அல்லவா? இதுவே ஜென் சொல்லும் மகிழ்வான வாழ்க்கையின்) மிக முக்கியமான சூட்சுமம்.



-என். கணேசன் -

# ஏலக்காய்




இன்று இளைஞர்கள் வாயில் ஒரு சுயிங்கத்தைப் போட்டு மெல்வது என்பது ஒரு பேஷனாகவே மாறிவிட்டது. இதனால் எந்தப் பலனுமே இல்லை. இதற்குப் பதிலாக ஒரு ஏலக்காயை வாயில் போட்டு மென்று சாப்பிடலாம். பசியே ஏற்படுவதில்லை, சாப்பிட பிடிக்கவில்லை என்று கூறுபவர்கள், தினமும் ஒரு ஏலக்காயை வாயில் போட்டு மென்றால் பசி எடுக்கும். ஜீரண உறுப்புகள் சீராக இயங்கும்.

★★★

நெஞ்சில் சளி கட்டிக் கொண்டு மூச்சு விட சிரமப்படுபவர்களும், சளியால் இருமல் வந்து, அடிக்கடி இருமி வயிற்றுவலி வந்தவர்களுக்கும்கூட ஏலக்காய் நல்ல மருந்தாக அமையும். ஏலக்காயை மென்று சாப்பிட்டாலே, இரும்பல், தொடர் இருமல் குறையும்.

★★★

வாய் துர்நாற்றம் ஏற்படுவதற்கும் ஜீரண உறுப்புகளில் ஏற்படும் பிரச்சினைதான் காரணம். எனவே வாய்த் துர்நாற்றத்தைப் போக்க ஏலக்காயை மென்று சாப்பிட்டு வரலாம். சாப்பிடும் உணவு வகைகளில் சிறிது ஏலக்காயை சேர்த்துக் கொள்வது நல்லது. அதிகமாக சேர்த்துக் கொள்ளக் கூடாது.




## பழைய கதை! புதிய அவதாரம்!

**விக்ரமாதித்தன்**

**கொலை**, கொள்ளை, கற்பழிப்பு, ஆட்கடத்தல் என நம்நாட்டில் துன்பங்கள் தொடர்ந்து கொண்டிருக்க பழிக்குப் பழி, வன்முறைக்கு வன்முறை என்ற யதார்த்தத்துடன் வெளிவந்திருக்கின்ற இந்திய சினிமாவின் புதிய தயாரிப்பே 'ரத்த சரித்திரம்'.

ரவுடிஷத்தைப் பற்றி படம் எடுப்பதில் வல்லவரான இயக்குநர் ராம்கோபால் வர்மா இயக்கியிருக்கும் உண்மைச் சம்பவத்தை தழுவலாகக்கொண்ட கதையே இந்த 'ரத்த சரித்திரம்'. ஆந்திராவில் உள்ள இரண்டு ரவுடிகளுக்கிடையே நடைபெற்ற உண்மையான மோதலையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் ஹிந்தி, தமிழ், தெலுங்கு என மூன்று மொழிகளிலும் திரைப் படமாக வெளிப்படுத்தியிருக்கிறார் இயக்குனர்.

நிழல் உலக தாதாக்களின் வாழ்க்கையை இந்தளவு திரையில் நெருக்கமாகச் சொன்ன இயக்குனர்கள் இல்லையென்று சொல்லலாம். சர்க்கார், சர்க்கார் ராஜ், ரான் என்று அடுக்கடுக்காக ஆச்சரியங்களைத் தந்த ராம்கோபால் வர்மாவின் புதிய படைப்புதான் 'ரத்த சரித்திரம்'. கடந்த 20 வருடங்களாக அதிகம் வெளிச்சம் படாத மனிதர்களின் வாழ்க்கையின் பதிவுகளை இந்தப் படம் வெளிப்படுத்தியிருக்கின்றது.



ஆந்திர மாநிலம் ராயலசீமா பகுதியில் வாழ்ந்த பரிதாலா ரவி, மதெலுது சூரி என்ற இரண்டு பேரின் பழிவாங்கும் படலமும், ரத்தம் உறையும் திருப்பங்கள் நிறைந்த கதையாக இருந்தாலும் இதன் பின்னணியில் சாதி, அரசியல், அதிகாரம், விதி, குடும்பம், குற்றம் போன்ற எல்லா காரணிகளும் இருக்கிறன. கத்தி எடுத்தவனுக்கு கத்தியால்தான் சாவு என்பதே இக்கதையின் கருப்பொருள்.

ஆந்திர மாநிலம் அனந்தபுர (அனந்தபுரம்) தொகுதியின் முக்கிய அரசியல் புள்ளி நரசிம்ம ரெட்டி, அவனுடைய எடுபிடியாக இருந்து கொண்டு சூழ்ச்சி செய்யும் இன்னொரு அரசியல்வாதியான நாகமணி ரெட்டியின் தூண்டுதலால் தாழ்த்தப்பட்ட சாதி மக்களிடமும், கட்சியிலும் நல்ல பெயருடன் இருக்கும் வீரபத்ரய்யாவை அழிக்க நரசிம்ம ரெட்டியை தூண்டுகிறார் நாகமணி. ஒரு கட்டத்தில் இருவருக்குமான பிரச்சினையில் வீரபத்ரய்யாவின் ஆட்களில் முக்கியமானவனான ஆசிஸ் வித்யார்த்தியை வைத்தே வீரபத்ரய்யாவை அவர் மனைவியின் கண் முன்னே கொல்கிறான். அதற்குப் பழி தீர்க்க வீரபத்ரய்யாவின் மூத்த மகன் வெறி கொண்டு எழுந்து பழி வாங்க முயல, அவனையும் லோக்கல் இன்ஸ்பெக்டரை வைத்து நரசிம்ம ரெட்டியும் நாகமணி ரெட்டியும் கொன்று விடுகின்றனர்.

வீரபத்ரய்யாவின் இளைய மகன் பிரதாப் ரவி (விவேக் ஓபராய்) தன் தந்தைக்கும் அண்ணனுக்கும் ஏற்பட்ட இந்தக் கொடூரத்தை நினைத்து பொங்கி எழுகிறான். அவர்களின் சாவுக்கு பழி வாங்க ஆரம்பிக்கிறான். அவனுடைய எல்லா செயல்களுக்கும் அவனுடைய தாயும், காதலியும், அப்பா, அண்ணனின் ஆட்களின் ஆதரவும் கிடைக்க நரசிம்ம ரெட்டியை கொல்கிறான். எதிரிகளைக் கொன்று அனந்தபுரத்தில் தேர்தலில் நின்று மந்திரி ஆகின்றான். ஒரு டீம் அமைத்து தனக்கு எதிரான அத்தனை பேரையும் கொல்லச் சொல்கின்றான். இதில் பல அப்பாவிகளும் அடக்கம்.

அவனை எதிர்க்க யாருக்கும் துணிவில்லை. எதிர்த்தவர்களை அரசியல் போர்வையில் அழித்துக்கொண்டு இருந்தான். நியாயமான காரணத்துக்காக தூக்கிய அரிவாள் பின்பு அரசியல் பலத்தினாலும் அளவுகடந்த பேராசையாலும் எல்லோரையும் காவுவாங்கிக் கொண்டு இருக்க அவன் மீது ஒரு கொலை முயற்சி நடக்கின்றது. கொலை செய்ய முயன்றவன் பெயர் சூர்யா. அவன் ஏன் பிரதாப் ரவியை கொலை செய்யத் துடிக்கின்றான்? அந்தத் துடிப்பில் வெற்றிபெற்றானா? என்பதே மீதிக் கதை.

# திரைப் பார்வை

| | |
|---|---|
| தயாரிப்பு | - கிளைட் நைன் மூவீஸ் |
| இயக்கம் | - ராம்கோபால் வர்மா |
| ஒளிப்பதிவு | - அமோல் ரத்தோட் |
| ஸ்டண்ட் | - ஜாவேத் மிஸ்ரா |
| வசனம் | - த.செ. ஞானவேல், பரத் குமார் |
| இசை | - தரண், சந்தீப் |
| நடிகர்கள் | - சூர்யா, விவேக் ஓபராய் பிரியாமணி, சத்ருக்கன் சின்ஹா, சுதீப் |



பிரதாப் பாத்திரத்தில் விவேக் ஓபராயும், சூர்யா பாத்திரத்தில் சூர்யாவும் கச்சிதமாக பொருந்தியிருக்கிறார்கள் என்பதைவிடவும் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதே உண்மை. விவேக் ஓபராய், முகத்தில் எப்போதும் ஒரு வன்மம் ஊடுருவும் பார்வையுடன் கவர்கிறார். முதல் முப்பது நிமிடங்களில் சராசரியான ஆளாய் இருந்து பழி உணர்ச்சியில் வன்முறை வெறியாட்டம் ஆடி அரசியல்வாதி ஆகும் விவேக் ஓபராய் நம் மனதில் பிரம்மாண்டமாய் நிற்கிறார்.

சூர்யா, தாடியுடனும் முரட்டு உடம்புடனும் படம் முழுவதும் பழி வாங்கும் உணர்ச்சியும் வேதனையும் வெறியும் கண்களில் கசிய நடித்திருக்கிறார். ஹொலிவூட் கதாநாயகர்களுக்கு நிகராக உடலமைப்பும், உலகத்தரத்தில் நடிப்பும் ஒருசேர வாய்க்கப்பட்டி ருக்கிறது அவருக்கு. படத்தில் சீறி, அழுது, வெறியில் உறுமி நடிப்பில் வெளுக்கிறார்.


சூர்யாவின் மனைவியாக பிரியாமணி, சூர்யா சிறையில் இருக்கும்போது அரசியலில் இறங்கி பிரதாப்புக்கு தலைவலி கொடுக்கிறார். பொலிஸாக சுதீப்பும், சுப்பர்ஸ்டார் முதலமைச்ச ராக சத்ருகன் சின்ஹாவும் ஜாடிக்கேற்ற மூடி. பொருத்தமான தேர்வு.

சுதீப், கிடைத்திருக்கும் சிறிய வாய்ப்பிலும் தன்னுடைய திறமையைக் காட்டியிருக்கிறார். குடும்பக் குத்துவிளக்கைப் போல ராதிகா ஆப்டே அவ்வப்போது வந்துபோகிறார். அமைதியான ஆனால் ஆழமான பாத்திரம். நீண்ட நேரத்திற்கு நினைவில் நிற்கிறது அவரது இயல்பான நடிப்பு. கிட்டி, கோட்டாசீனிவாசராவ், ஆஷிஷ் வித்யார்த்தி என ஒரு மிரட்டல் பட்டாளமே நடிப்பில் புகுந்து மிரட்டுகின்றது.

காந்தி சிலைக்கு முன்பு நடக்கும் கொலை, சிவன் படத்திற்கு முன்பு நடக்கும் கத்திகுத்து என வன்முறைக்காட்சியில் கூட யோசிக்க வைத்திருக்கிறார்கள். மிகப் பழமையான பழிவாங்கல் கதையாக இருந்தாலும் ராம்கோபால் வர்மாவின் கைவண்ணத் தில் சலிப்பு வரவில்லை. ரத்தச் சகதிக்குள்ளும் அதற்கான அவர வர்களுக்கான நியாய தர்மங்கள், உணர்வுப் போராட்டங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சண்டைக் காட்சிகளில் சூர்யாவோடு நாமும் உடம்பை முறுக்கிக்கொள்கிறோம். ஒளிப்பதிவாளர் கொலைக் களத்துக்கே நம்மையும் கொண்டு சென்றிருக்கிறார்.

இதில் பலருக்கும் பல விமர்சனங்களும் கேள்விகளும் இருக்கின்ற நிலையில் இதை ஒரு சினிமாவாக ராம் கோபால் வர்மா எப்படி கையாண்டிருக்கிறார் என்பதே நாம் பார்க்க வேண்டிய முக்கியமான விஷயம். சினிமா விதிகளை எல்லாம் ஓரம் தள்ளி விட்டு, தன் வழக்கமான பாணியில்





வித்தியாசமாகவே கையாண்டிருக்கிறார் இயக்குனர். படத்தின் முதல் காட்சி தொடங்கி கடைசிக் காட்சி வரை ரத்தம் திரைகளில் தெறிக்கிறது.

இந்தப் படத்தில் அக்ஷன் காட்சிகள் அத்தனையையும் 96 பிரேமில் செய்திருக்கின்றார்கள். அந்த வித்தியாசமான முயற்சியும், தயாரிப்பும் இந்த படத்துக்குப் பெரிய பலம். கமரா கோணங்கள் பல எக்ஸ்ட்ரீம் குளோசப்பாக பல காட்சிகளையும் சோக்கர் குளோசப்பாக சில உணர்ச்சிக் காட்சிகளுக்கு வைத்து இருக்கின்றார்கள். ராம் கோபால் வர்மாவின் 360 டிகிரி கமரா கோணம் திரையில் புகுந்து விளையாடுகிறது. கலர்புல்லாக படங்களைப் பார்த்துவிட்டு இந்த டோனில் படம் பார்க்க வித்தி யாசமாகவும் அதே சமயம் கொஞ்சம் பழைய படம் பார்ப்பது போலவும் ஒரு உணர்வை ஏற்படுத்துகிறது. ஆனாலும் காட்சிக்குக் காட்சி ஸ்லோமோஷனில் நகரும் போது கூடவே இரைச்சலான ஒரு சத்தம் எங்களை வேறு உலகத்துக்குக் கொண்டு செல்கின்றது. படத்தை கதையாக சொல்லும் பின்னனி குரலுக்குச் சொந்தக்காரர் இயக்குனர் கௌதம் வாசுதேவ மேனன். கௌதமின் குரலில் ஆழமான கோபம், அளவான உணர்ச்சி, அழகான தமிழ் ஆகியன இன்னும் இப்படத்திற்கு பலம் சேர்க்கும் விதமாக இருக்கிறது.

காட்சிக்கு காட்சி ரத்தத்தை சூடாக்குகின்ற தரம் - சந்தீபின் பின்னணி இசை. சில இடங்களில் அதிக இரைச்சல். அமோல் ரத்தோட் - ஒளிப்பதிவு மூலம் உண்மையான சம்பவங்களை கமராவுக்குள் கொண்டுவர மிகவும் சிரமப்பட்டிருக்கிறார். கதாபாத்திரங்களுக்கு வசனத்தால் இன்னும் ரத்தம் சேர்த்திருக்கிறார்கள் ஞானவேல் - பரத்குமார்.

இரண்டு அரசியல் சாம்ராஜ்யத்திற்கு இடையே நடந்த ரத்த வெறி கலந்த பழிவாங்கும் போராட்டத்தை சொல்லும் தைரியம் ராம் கோபால் வர்மாவிற்கு மட்டுமே இருந்திருக்கிறது. இது உண்மை சம்பவமாக இருந்தாலும் ஒரு காட்சி கமராவுக்குள் கொண்டுவரப் பட்டாலே அது சினிமாவாகவே மாறிவிடுகிறது. ஆனால் காட்சிகளை நம்பகத் தன்மையோடும் உண்மையான யதார்த்தத்தோடும் பதிவு செய்ய முயற்சி செய்து அதில் முழுமை அடைந்திருக்கிறார் இயக்குனர்.

படத்தின் முடிவு இன்னொரு தொடர்ச்சியாகவே இருக்கும் என கருதப்படுகிறது. பிரதாப் ரவி கதாபாத்திரத்தை ஏற்ற விவேக் ஓபராய் இறந்துவிட்டார். சூர்யா சிறையில் இருந்து வெளியே வந்து விட்டார். விவேக் ஓபராயின் மனைவி கையில் இருக்கும் குழந்தைதான் படத்தின் கடைசிக் காட்சி. பின்னால் தொலைக் காட்சியில் சூர்யா அரசியல்வாதியாக பதவியேற்பதைக் காட்டும் கமரா மெல்லத்திரும்பி விவேக் ஓபராயின் மனைவி கையில் இருக்கும் குழந்தையைக் காட்டுகிறது. இதன்போது பின்ன ணியில் புத்தம் சரணம் கச்சாமி... பாடல் ஒலிக்க மெல்ல அக் குழந்தையின் மேல் சிவப்பு நிறம் படர்கின்றது. அற்புதமான கடைசிக் காட்சி ஆயிரம் அர்த்தங்களைச் சொல்லி நிற்கின்றது.

தைரியமாய் பார்க்கலாம். ஆனால் சிறுபிள்ளைகளுடன் பார்க்காதீர்கள். பிறகு வீடே ரத்த சரித்திரமாகிவிடும். வன்முறை சற்று அதிகம்தான். ஆனால் ரத்தவெறியில் திளைக்கும் ரவுடிகளின் சரித்திரம் என்பதால் இந்தளவு வன்முறை தவறில்லை.

**ஆக மொத்தத்தில் ரத்த சரித்திரம் - ரத்தக் கறை**



மொழிவாணன்

# தா.. தா.. உயிரைத்தா..

ஆனாலும்,
அவன் சத்தம் வெளியில் வரவில்லை.
தொண்டைக்குள்ளேயே அடைபட்டுக்கொண்டது.
அவனை அருகில் இழுத்தெடுத்த அவள்
தனது இரண்டு விரல்களை,
ராஜாவின் இரண்டு விழிகளை நோக்கி
வேகமாக நீட்டினாள்.
அடுத்து,
நகங்கள் நீண்டுவளர்ந்திருந்த அந்த விரல்கள்
'கிறீஸ்' என்ற ஓசையை எழுப்பிக் கொண்டு
அவன் விழிகளுக்குள் புகுந்தது.
என்ன பரிதாபம்!
வார்த்தைகளில் வடித்துச் சொல்ல முடியாத
ஒரு வேதனையில் அவன் நெளிந்தான்.
அவள் பிடியில் இருந்து விடுபடுவதற்கு அவன்
போராடினான்.
ஆனாலும்,
அவனால் அது முடியவில்லை.
முரட்டுப்பிடி அது.
அவன் வேதனையால் முனகிக் கொண்டிருந்த அதே
நேரம்,
விழிகளுக்குள் விட்ட விரலை வெளியே
இழுத்தெடுத்த அவள்
மகிழ்ச்சியுடன் அதைப் பார்த்தாள்.
அந்த விரல்களில் இருந்து இரத்தம்
வழிந்துகொண்டிருந்தது.
மகா பயங்கரம்!
விழி உள்ளவர்களினால் பார்க்க முடியாத
ஒரு பயங்கரக்காட்சி அது.
அதே நேரம்,
அருவருப்பான காட்சியும் கூட.
ராஜாவின் விழிகளின் துண்டுகளும்,
நரம்புகளும் அவள் விரல் நகத்தில் சிக்கிக்
கிடப்பதைப்
பார்க்கவே அசிங்கமாக இருந்தது.
அதை விட,
ராஜாவின் முகம் விகாரமாகக் காட்சியளித்தது.
மூடப்பட்ட விழிகளில் இருந்து
இரத்தம் வடிந்துக் கொண்டிருந்தது.
விழிகளை இழந்து தடுமாறிக் கொண்டிருந்த
ராஜாவின் கழுத்துக்கு அருகே குனிந்த அவள்,
தனது வாயை அங்கே வைத்தாள்.
அதே நேரம்,
வாயின் இரண்டு பக்கங்களிலும் இருந்து,
இரண்டு பக்கங்கள் நீண்டு,
ராஜாவின் கழுத்துப் பகுதியை ஓட்டையாக்கிக்
கொண்டு சென்றது.
ஒரு குழந்தை தாயிடம் பால் குடிப்பதைப் போல,
பேயாகிவிட்ட அந்தப் பெண்,
ராஜாவின் கழுத்திலிருந்து இரத்தம் குடித்துக்
கொண்டிருந்தாள்.
அவள் இரத்தம் உறிஞ்சிக் குடிக்கக் குடிக்க,
ராஜா,
தன் சுயநினைவை இழந்து கொண்டிருந்தான்.
ராஜாவுக்கு நினைவு திரும்பிவிட்டது என்ற தகவல்
கிடைத்ததும்,
என்ன நடந்தது என்பதை அவனிடமிருந்து

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# காற்றாய் வருவேன் 14

கேட்டு அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலில்,
ராஜா இருந்த அறையை நோக்கி ஓடினார் டாக்டர்.
அவனிடமிருந்து ஏதாவது தகவல் கிடைத்தால்,
இந்த வழக்கிற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கலாம்
என்று அவர் நம்பினார்.
விரைந்து ஓடி வந்த அவர்,
ராஜா இருந்த அறை வாசலில் வந்து நின்றார்.
இப்போது,
அவருக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கிக்
கொண்டிருந்தது.
வாசலில் வந்து நின்ற டாக்டர்,
அறையை ஒருமுறை நோட்டமிட்டார்.
அந்த அறைக்குள் பாழடைந்த ஒரு நிலைதான்
இருந்தது.
உள்ளே வந்த டாக்டர்,
நேராக ராஜா இருந்த கட்டிலின் அருகில் சென்றார்.
"ஆ!
என்ன இது?"
அப்படி ஒரு காட்சியைப் பார்ப்பார்
என்று,
டாக்டர் எதிர்பார்த்திருக்கவே
மாட்டார்.
அந்தக் காட்சியைப் பார்த்ததும்,
மின்சாரத்தால் தாக்குண்டவரைப்
போல்,
டாக்டர் பின்னால் பாய்ந்தார்.
அப்படியான ஒரு காட்சியை,
டாக்டர் வாழ்நாளில் இதற்கு முன்னர்
பார்த்ததே இல்லை.
ஆமாம்!
ராஜாவின் கண்கள் இருந்த இடத்தில் குழி விழுந்து,
அதற்குள் வெள்ளை நிறமான புழுக்கள்
நிறைந்திருந்தன.

● ● ● ●

நள்ளிரவு,
அந்த பகுதி முழுவதும்,
அமைதியில் ஆழ்ந்திருந்தது.
தனது அறையில்,
ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த குமார்,
யாரோ கதவில் தட்டும் ஓசைகேட்டு விழித்துக்
கொண்டான்.
படாரென்று எழுந்து அமர்ந்துகொண்ட குமார்,
மீண்டும் செவிகளை கூர்மையாக்கிக் கொண்டு,
தனது வீட்டில்தான் தட்டு விழுகிறதா எனக்
கவனித்தான்.
"டொக்.... டொக்...."
ஆமாம்!
அவன் வீட்டுக் கதவில்தான் யாரோ தட்டுகிறார்கள்.
இந்த நேரத்தில் யார் கதவில் தட்டுவது?



சிந்தித்தபடியே எழுந்து நின்ற குமார்,
மெல்ல நடந்து வாசல் கதவை நோக்கி நடந்தான்.
அதே நேரம்,
"டொக்... டொக்.... டொக்..."
கதவில் மீண்டும் தட்டு விழுந்தது.
யாரது? கொஞ்சம் பதைத்த குரலில் கேட்டான்
குமார்.
"நான்... தான்... ராஜா.... கதவைத் திற குமார்!"
குமாருக்கு பழக்கமான குரல் ஒன்று
வெளியில் இருந்து கேட்டது.
"ரா..ரா..ராஜா... நீயா..?"
சிறிது நேரம் சிந்தித்தபடியே நின்ற குமார் கேட்டான்.
"ஆமாடா... நான் ஆஸ்பத்திரியில் இருந்து
பயந்து வந்துவிட்டேன்"
வேதனை நிறைந்த குரல் கேட்டது.
"ஐயோ இந்த நேரத்தில் ஆஸ்பத்திரியில் இருந்து
ஏன்டா வந்தாய்?"
என்று கேட்டபடியே
கதவைத் திறந்து விட்டான்.
அங்கே,
தனது உடல் முழுவதையும்
துணியினால்
மறைத்து வைத்துக்
கொண்டிருந்த ராஜா,
எதுவும் பேசாமல் உள்ளே
வந்து,
நேராக குமாரின் அறையை
நோக்கி நடந்தான்.
வாசல் கதவை பூட்டி விட்டு,
குமாரும் பின்னால் நடந்தான்.
அவன் அறைக்குள் வந்த போது,
குமாரின் கட்டிலில் சுருண்டு படுத்திருந்தான் ராஜா.
ஆனால்,
அப்போதுகூட அவன் உடல் முழுவதையும்
போர்த்திக்கொண்டு தான் இருந்தான்.
"இவ்வளவு வருத்தத்தையும் வைத்துக் கொண்டு
ஆஸ்பத்திரியில் இருந்து பயந்து வந்தாயா?
அங்கே இப்போது உன்னைத் தேடி அலையப்
போகிறார்கள்.
நீ இங்கேதான் இருக்கிறாய் என்று போன் பண்ணி
சொல்லட்டுமா?"
என்று கேட்டபடியே
அந்தக் கட்டிலில் அவனும் அமர்ந்துக் கொண்டான்.
ஆனால் ராஜா எதுவும் பேசவில்லை.
அது மட்டுமல்ல,
அவன் உடலில் எவ்வித அசைவும் தெரியவில்லை.
இதனால்,
அவனுக்குக் கொஞ்சம் சந்தேகம் வந்துவிட்டது.

# உலகப் பேரழகியின் மர்ம மரணம்

வரலாற்று பேரழகிகள் பட்டியலில் இன்றும் முதலிடத்தில் இருப்பவர் கிளியோபட்ரா. கி.மு. 69&30 காலத்தில் வாழ்ந்தவள். பாலில் குளிப்பாள். கண்களில் பல வண்ண மைகளால் அலங்காரம் செய்துகொள்வாள். உடல் மினுமினுப்புக்காக முத்துக்களை வினிகரில் கரைத்து அருந்துவாள். என பல கதைகள் அவளைப் பற்றி உலவுகின்றன. அவள் பேரழகி மட்டுமல்ல. ஜுலியஸ் சீசர், மார்க் அன்டனி போன்ற மாவீரர்களின் காதல் மனைவியாகவும் இருந்தாள். கிரேக்கம், ரோம், எகிப்து என பல நாடுகளின் வரலாறே அவளால் மாறியது. போராட்டங்களும் மர்மங்களும் நிரம்பிய அவளது வரலாற்றை இன்றும் பல மேற்கத்திய பல்கலைக்கழகங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கின்றன.


எகிப்து பேரரசியாக இருந்தாலும் அவள் கிரேக்க பேரரசர் அலெக்ஷாண்டரின் தளபதி தொலமியின் வம்சாவளியில் வந்தவள். தொலமிகள் தங்களை கிரேக்கர்கள் எனக் கூறுவதில் பெருமை கொண்டிருந்தனர். ஆனால் 12 ஆம் தொலமியின் மகளாக பிறந்த கிளியோபட்ரா தன்னை எகிப்து தேவதை இசிஸின் மறுபிறவி எனக் கூறிக்கொண்டாள். தனது முன்னோர்களை போல் அல்லாமல் மிகுந்த சிரத்தை எடுத்து எகிப்து மொழியைக் கற்றுக்கொண்டாள். இதனால் எகிப்து மக்கள் அவளை ஒரு தேவதையாகவே கொண்டாடினர். வசீகரம், இளமை, புத்திக்கூர்மை, தேசப்பற்று, நினைத்ததை சாதிக்கும் உறுதி இவைதான் கிளியோபட்ராவின் வெற்றியின் ரகசியம். 11 மொழிகள் சரளமாக பேசுவாள். பேச்சாற்றலும் நிறைந்தவள். அவளது பேச்சுக்கு யாரும் மறு பேச்சு பேசியதில்லை.

14 வயதாகும்போதே தந்தையுடன் சேர்ந்து ஆட்சியை பகிர்ந்துகொண்டாள். தந்தை இறந்த பின் 18 ஆவது வயதில் அரசியானாள். எகிப்து அரச வழக்கப்படி அரசி மட்டும் தனியாக ஆட்சி நடத்தமுடியாது. இதனால் அந்நாட்டு வழக்கப்படி தனது தம்பி 13 ஆம் தொலமியை திருமணம் செய்துகொண்டாள். எகிப்தில் பெரும் படை கிடையாது. நைல் நதி தீரம் என்பதால் செல்வத்துக்கு பஞ்சமில்லை. இதனால் அண்டை நாடுகள் எகிப்து மேல் ஒரு கண்ணாகவே இருந்தன.

எகிப்தையும் தனது ஆட்சியையும் பாதுகாக்க கிளியோபட்ரா எடுத்த முடிவு யாரும் எதிர்பாராதது. அப்போது வலிமையுடன் இருந்த ரோமப் பேரரசர் ஜுலியஸ் சீசரை காதலிக்க முடிவு செய்தாள். முதல் சந்திப்பிலேயே ஜுலியஸ் சீசரை தன் காதல் வலையில் வீழ்த்தினாள். அப்போது கிளியோபட்ராவுக்கு 21 வயது. சீசருக்கு 54. விரைவில் சீசரின் மகனுக்கு கிளியோபட்ரா தாயானாள்.



இந்நிலையில் மர்மமான முறையில் 13 ஆம் தொலமி கொல்லப்பட்டார். கிளியோபட்ராதான் கொன்றதாக கூறப்படுகிறது. அதன் பின்னர் காதலி கிளியோபட்ராவை ரோமுக்கு அழைத்து வந்தார் சீசர். இது ரோமானியர்களுக்குப் பிடிக்கவில்லை. இது சீசரின் உயிருக்கே ஆபத்தானது. அதிகார போராட்டத்தில் சீசர் கொல்லப்பட்டார். ஆட்சியைப் பிடிப்பதில் சீசரின் வாரிசுகளுக்கும் தளபதிகளுக்கும் மோதல். இனியும் அங்கிருப்பது ஆபத்து என்பதை உணர்ந்தாள் கிளியோபட்ரா. உடனடியாக எகிப்துக்கு தப்பினாள். சற்றும் தாமதிக்காமல் தொடர்ந்தது அவளது அடுத்த



அவளது அடுத்த காதல் அத்தியாயம். தனது சாகசத்தால் ரோம பேரரசின் அதிகாரத்தை கைப்பற்றிய தளபதி மார்க் அன்டனியை திருமணம் செய்தாள். அவர்களுக்கு 3 குழந்தைகள் பிறந்தன. இந்த காலத்தில் தனது 2 சகோதரிகள் மற்றும் சகோதரனை கிளியோபட்ரா கொன்று எகிப்து அரசுக்கு தன்னைத் தவிர வேறு வாரிசுகள் இல்லாமல் செய்து கொண்டாள். இந்நிலையில் கிளியோபட்ராவுக்கு சீசரின் வாரிசான ஒகஸ்டஸ் சீசரால் ஆபத்து வந்தது.

கடும் கோபத்தில் இருந்த ஒகஸ்டஸ் சீசர் எகிப்து மீது போர் தொடுத்தார். இதில் பரிதாபமாக தோற்ற அன்டனி தற்கொலை செய்து கொண்டார். கிளியோபட்ராவும் அவளது குழந்தைகளும் சிறைபிடிக்கப்பட்டனர். சிறை வாழ்க்கையை விரும்பாத கிளியோபட்ரா எகிப்து பாலைவனத்தில் திரியும் கொடிய விஷம் கொண்ட நல்லபாம்பை கடிக்க வைத்து தற்கொலை செய்துகொண்டதாக கூறப்படுகிறது. 39 வயதில் அவளது சகாப்தம் முடிவுக்கு வந்தது.வாழ்நாள் முழுவதும் தன் அழகிய தோற்றம் மீது அக்கறை செலுத்தி வந்த கிளியோபட்ரா பாம்பு கடித்து இறந்திருக்கமாட்டாள் என ஜெர்மன் வரலாற்று ஆராய்ச்சியாளர் கிறிஸ்டோபர் செபர் சந்தேகத்தை கிளப்பியுள்ளார். பாம்பு கடித்தால் அடுத்த நொடி மரணம் நிகழ்வதில்லை. சற்று நேர மரண போராட்டம் உண்டு. இதனால் உடல் அலங்கோலமாகி முகம் விகாரமாகிவிடும். கிளியோபட்ரா அதை விரும்பவில்லை. அவள் வாழ்ந்த காலத்தில் எகிப்தில் மிகவும் பயங்கரமான விஷம் ஒன்று வழக்கத்தில் இருந்தது. ஒபியம் மற்றும் விஷத்தாவரங்களின் கூட்டால் செய்யப்படும் கஷாயம் அது. கிளியோபாட்ரா அதைத்தான் அருந்தினாள் என்கிறார் ஆய்வாளரான செபர். எகிப்து பழங்கால ஏடுகளில் இருந்து இதற்கான ஆதாரங்களையும் காட்டுகிறார் செபர். உலகப் பேரழகி கிளியோபட்ராவின் வாழ்வு மட்டுமல்ல, மரணமும் புதிரும் மர்மமாகவே இன்று வரை இருக்கிறது.

## செத்துப்போன என் தெரு!

புழுதிபடிந்த ஒழுங்கை
மணல் வீதி
கிரவல் வீதியாகி
கல்றோட்டானது என் தெரு!

நான் நடந்து பழகியது
விழுந்து விழுந்து எழுந்ததெல்லாம்
அதில்தான்!

சிறுவனாக இருந்தபோது
பந்து விளையாடியது
நண்பனோடு சண்டை பிடித்து
கட்டிப்பிடித்து உருண்டு புரண்டது

சைக்கிள் ஓட்டக் கற்றபோது
விழுந்து, கைகால் உரசப்பட்டு
ரத்தங்கசிந்தது

ஒன்பது முப்பதுக்காட்சி
பார்த்துவிட்டு
நாயகியின் இடுப்பழகு பற்றி
பேசி மகிழ்ந்து சென்றதும்
தாமரைகளாகத்தான் மலர்ந்திருக்கின்றன
என் ஞாபகக் குளத்தில்!

செத்துப்போனது என் தெரு
முட்செடி பள்ளம் படுகுழிகளால்
அது அநாதைப் பிணமாகியும்!
என்தெருவே! நீ மட்டுமா செத்துப் போனாய்
அகதிகளாய்ச் சிதறிய நாங்களுந்தான்!

-ராஹில்-

# முருகபூபதியின் மூன்றாவது கரம்

-அஷ்ரஃப் சிஹாப்தீன்-
ashroffshihabdeen@gmail.com



சரியாக எண்ணிப் பார்க்கவில்லை. பதினொருபேர் என்று நினைக்கிறேன். ஆளுக்கு ஒரு பிளாஸ்டிக் கதிரையை எடுத்துக் கொண்டு அவர்கள் காரியாலயத்துக்குள் அமைதியாக வந்தார்கள். பின்னால் அவர்களது பொறுப்பாசிரியை புன்னகை பூத்த முகத்துடன் வந்தார். அமர்ந்து கொள்ளச் சொன்னதும் அவர்கள் அந்நாள் மாணாக்கரின் பவ்வியத்தோடு அமர்ந்தார்கள். அவர்களில் நால்வர் ஆண்கள். ஏனையோர் பெண்கள்.

நண்பர் ஒவ்வொருவராகச் சுகநலம் விசாரித்தார். பெயர்களைக் கேட்டறிந்தார். ஏராளமானோருடன் தான் சம்பந்தப்பட்டிருப்பதால் பெயர்களை ஞாபகம் வைத்துக் கொள்ள முடியவில்லை என்று மன்னிப்புக் கோரும் தொனியில் தெரிவித்தார். யார் யார் சாதாரண தரப் பரீட்சை எடுக்கிறீர்கள்? அடுத்த வருடம் தோற்றவுள்ளவர்கள் யார்? ஏனையோர் கற்கும் வகுப்புக்கள் யாவை? நன்றாகப் படிக்கிறீர்களா? உங்களுக்கு வேறு ஏதாவது பிரச்சினைகள் உள்ளனவா? இவை ஒரு தந்தையின் பரிவோடும் ஒரு தாயின் பாசத்தோடும் கலந்து வெளிவந்த வினாக்கள். அவர்கள் மிகவும் மரியாதையுடன் ஒற்றை வார்த்தையில் புன்முறுவல்களினூடே பதிலளித்தார்கள். இருவர் அடுத்த ஆண்டில் க.பொ.த. சாதாரண பரீட்சையும் மற்றுமிருவர் அதற்கடுத்த ஆண்டில் உயர்தரப் பரீட்சையும் எழுதுகிறார்கள்.

தந்தையற்ற இந்த மாணவ மாணவிகளின் கல்விக்கு அவுஸ்திரேலியாவில் வாழும் நல்லிதயங்களிடமிருந்து பண உதவி வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வரும் நபரோடுதான் நானும் பூ. ஸ்ரீதர்சிங்கும் அந்த மாணாக்கரின் முன்னால் அமர்ந்திருந்தோம். அந்த நபர் வேறு யாருமல்லர். எழுத்தாளராக மட்டுமே நாம் அறிந்திருக்கும் லெ. முருகபூபதி. 1988 ஆம் ஆண்டிலிருந்து முருகபூபதி இந்தப் பணியை முன்னெடுத்து வருகிறார். இந்தச் சேவையை முன்னிறுத்திப் பத்திரிகைகளில் செய்திகள் வருவதில்லை. தொலைக்காட்சிகளில் படம் வருவதில்லை. தனது சமூக சேவைக்காக எந்தவொரு இயக்கத்திடமிருந்தும் அவர் பொன்னாடை போர்த்திக் கொண்டதில்லை. ஏன் சக எழுத்தாளர்கள் கூட இதுபற்றி அறிய மாட்டார்கள்.

இந்தச் செயற்திட்டத்தை முருகபூபதி மிக அழகாக நிறுவனமயமாக்கியிருந்தார். அவுஸ்திரேலியாவில் வசிக்கும் உதவிபுரியும் மனங்கொண்டோரிடமிருந்து மாதம் 20 டொலர்களை உதவித் தொகையாகப் பெற்றுக் கொள்கிறார். அதை தந்தையற்ற ஒரு மாணவனுக்கோ, மாணவிக்கோ கல்வி நிதியாக அனுப்பி விடுகிறார். தான் வழங்கும் பணத்தில் படித்துக் கொண்டிருப்பவர் யார் என்ற விபரம் உதவி வழங்குனருக்கும், தனது கல்விக்கு உதவும் நபர் யார் என்ற விடயம் கற்பவருக்கும் தெரிவிக்கப்படுகிறது. அவர்களுக்கிடையே ஓர் உறவை உருவாக்கிக் கொடுத்து விடுகிறார் முருகபூபதி. எனவே இங்கு சந்தேகத்துக்கு இடமே கிடையாது.

முதற்கட்டத்தில் ஆயிரம் மாணவ, மாணவிகள் இந்த உதவியைப் பெற்றுள்ளனர். பல்கலைக் கழகக் கல்வியை முடித்துக் கொண்டதும் அவர்கள் இந்தத் திட்டத்திலிருந்து விலகிக் கொள்ள வேண்டும். வடக்கு, கிழக்கு மற்றும் இடம்பெயர்ந்து வெளி மாவட்டங்களில் கற்கும் தந்தையற்ற மாணாக்கர் இந்த உதவிகளை இன்றும் பெற்று வருகின்றனர். பல்கலைக் கழகங்களிலும் இவ்வுதவி பெறுவோர் கற்று வருகிறார்கள். இவ்வாறு உதவி பெறும் ஒரு மாணாக்கர் குழாத்துக்கு முன்னால்தான் ஒரு பாடசாலையின் அறையொன்றுக்குள் நாங்கள் அமர்ந்திருந்தோம்.

இதுகூடத் தற்செயல் நிகழ்வுதான். சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டுக்காகப் பிரதேசம் பிரதேசமாகச் சென்று படைப்பாளிகளைச் சந்திக்கும் பயணத்தில் நாங்கள் இருந்தோம். வழியில் பாடசாலையொன்றின் பெயர் குறிப்பிட்டு அங்கு தனக்கு ஒரு சிறிய வேலையிருக்கிறது என்று மட்டுமே என்னிடமும் ஸ்ரீதரிடமும் சொல்லியிருந்தார் முருகபூபதி. இந்த மாணாக்கரை நேருக்கு நேராகச் சந்திக்கும் வரை இந்த முயற்சியின் பின்னால் உள்ள பாரமும் தாத்பரியமும் எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. அவர்களது முகங்களைப் பார்த்த பிறகு நானும் ஸ்ரீதரும் இறுகிப் போயிருந்தோம்.

கால் நூற்றாண்டுகால உள்நாட்டு யுத்தம் பலரது வாழ்வைச் சின்னாபின்னமாக்கியிருக்கிறது. குடும்பங்களைச் சீரழித்து ஒவ்வொரு திசையில் ஒவ்வொருவர் வாழும் துர்ப்பாக்கியத்தை உருவாக்கி வைத்திருக்கிறது. ஏதிலிகளாக அலைந்து திரியும் இம்மக்களின் நலனுக்காக தனது ஒரு ரூபாய்க் காசையேனும் செலவளிக்க முன்வராத பல அட்டைக் கத்தி வீரர்கள் யுத்தத்தின் அரசியல் பற்றி இணையங்களில் பட்டிமன்றம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். பத்திரிகை, சஞ்சிகைகளில் போராட்டம் நடத்துகிறார்கள். அவ்வப்போது நடக்கும் கூட்டங்களில் கொடியேந்திக் கும்மியடிக்கிறார்கள். கொடும்பாவியெரித்துக் கோபங்காட்டுகிறார்கள். உயிருக்கு அஞ்சியோடி வேறு நாடுகளில் குடியுரிமையும் பெற்றுக் கொண்ட இவர்கள் யுத்தத்தால் அழிந்துபோன மக்களை வைத்து அவர்களின் வாழ்வியலை வைத்து இலக்கியம் செய்து பொழுது போக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அவுஸ்திரேலியாவில் வாழும் முருகபூபதியின் சிந்தனை வித்தியாசமானது. அவர் பட்டிமன்றம் நடத்தவோ, போராட்டம் நடத்தவோ தெருவில் இறங்கவில்லை. யுத்தத்தில் நசுங்குண்ட மக்களுக்குத், தான் எதைச் செய்ய முடியும் என்று மட்டுமே அவர் சிந்தித்தார். பாடசாலையைப் பார்க்க முடியாமல், கற்றுவந்த

கல்வியைத் தொடர வசதியற்று ஏக்கத்தோடு வாழும் இளைய தலைமுறையினரின் கல்விக்காக உதவுவது எல்லாவற்றிலும் சிறந்தது என்று முடிவுக்கு வந்தார். தந்தை இழந்தோருக்கு உதவி செய்து அவர்களுக்கு எதிர்காலம் பற்றிய நம்பிக்கை ஊட்டுவதில் இன்று குறிப்பிடத்தக்க எல்லையை அடைந்திருக்கிறார் முருகபூபதி.

உலகத்தில் பலர் தமக்காக மட்டுமே வாழ்ந்து விட்டுப் போகிறார்கள். ஆயிரத்தில் ஒருத்தர்தான் மற்றவர் பற்றிச் சிந்திக்கிறார். லட்சத்தில் ஒருத்தர் தமக்காக வாழும் அதேவேளை மற்றவர்களுக்காகவும் வாழ்கிறார் முருகபூபதியைப்போல. மற்றவர்களுக்காகச் சிந்திக்க ஒரு மனமும், உதவுவதற்காகக் கிடைக்கும் வாழ்க்கையும் பெறும் ஒருவன் பாக்கியசாலியாகிறான். இந்தப் பாக்கியத்தைப் பெற்ற ஒருவனுக்கே கண்ணீர் துடைக்கும் கரங்களின் உன்னதம் புரியும். மற்றவர்களுக்காக வாழ்தலில் உள்ள திருப்தி தெரியும்.


குளிர்பானம் வந்தது. வரும் வழியில் சீனி இல்லாமலும் சீனி குறைத்துப் போட்டுத் தரக் கோரியும் தேநீர் அருந்தி வந்திருந்தோம். அந்தக் கணம் வரை எந்த இடத்திலாவது தேநீர் அருந்த வேண்டி வந்தால் முதலில் ஆளுக்காள் முகத்தைப் பார்த்துக் கொள்வோம். குளிர்பானத்தை கையில் எடுத்தபோது நாங்கள் முகங்களைப் பார்த்துக் கொள்ளும் நிலையில் இருக்கவில்லை. எதுவும் பேசாமல் எடுத்து அருந்தினோம். வந்தாரை வரவேற்கும் கலாசாரத்துக்கு அப்பால் அந்தக் குளிர்பானத்தின் பின்னணியில் இருந்த அன்பும், அந்தச் சூழலும் சீனி வியாதியையும் இருதய வியாதியையும் தாண்டிச் செல்லக் கூடியவை என்பதை எமது உடலும் மூளையும் தானாக ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்று நான் நம்பினேன்.

அங்கிருந்தவர்களில் ஒருத்தி ஆறாம் ஆண்டு படிக்கும் அழகிய சிறுமி. புன்னகை அவள் முகத்தில் நிரந்தரமாக இருந்தது. அவளைப் பார்த்து "கொழும்புக்குச் சென்றாயா..?" என்று புன்முறுவலுடன் கேட்டார் முருகபூபதி. அச்சிறுமி நாணத்துடன் "ஆம்" என்று தலையை ஆட்டினாள். "இவவுடைய ஸ்பொன்ஸர் இவவை கொழும்புக்கு வரச் சொல்லிப் பார்த்து விட்டுப் போயிருக்கிறா!" என்று எனக்கும் ஸ்ரீதருக்கும் விளக்கம் தந்தார் அவர்.
"உங்களுக்குத் தெரியுமா... ஒரு பன்னிரண்டு வயதுச் சிறுமி தனது செலவுகளுக்காகப் பெற்றோர் வழங்கும் பணத்தைச் சேர்த்து ஒரு இளம் பெண்ணின் பல்கலைக்கழகப் படிப்புக்கு உதவிக் கொண்டிருக்கிறாள். கூடிய விரைவில் அவள் தன் பெற்றோருடன் வந்து அந்தப் பெண்ணைச் சந்திக்கவிருக்கிறாள்" என்று எம்மிடம் சொல்லியபடி முருகபூபதி வாகனத்தில் ஏறினார். வாகனத்தின் மூவர் அமரும் ஆசனத்தில் முறையே நான், ஸ்ரீதர், முருகபூபதி என்ற வரிசையில் அமர்ந்தோம். வாகனம் நகர ஆரம்பித்தது. என்னுடையதும் ஸ்ரீதருடையதும் உடல்கள் வாகனத்தில் இருக்க, ஆன்மாக்களும் சிந்தனைகளும் இன்னும் அதே காரியாலயத்தில் இருந்தன என்பதை அடுத்து நடந்த சம்பவம் உணர்த்தியது.

"பெற்றோர் இல்லாத அந்தச் சின்னப் பிள்ளைய நினைக்கேக்க கவலையா இருக்கு..." என்று சொல்லத் தொடங்கிய ஸ்ரீதர் சட்டென உடைந்து அழுதார். கண்ணீர் அவரது கண்ணாடியைத் தாண்டித் தெறிக்க எனக்குத் தொண்டைக்குள் ஏதோ வந்து அடைத்தது. "இட்ஸ் ஓகே ஸ்ரீ.. இட்ஸ் ஓகே... ஈஸி... ஈஸி...." என்று சொன்னபடி ஸ்ரீதரின் தோளில் கைவைத்துச் சாந்தப்படுத்தினார் முருகபூபதி. ஒரு புத்தக நிறுவனத் தலைவராக மட்டுமே நான் அறிந்திருந்த நண்பர் ஸ்ரீதரின் இதயத்துள் பொங்கிப் பிரவகித்த மனிதாபிமானம் என்னை ஒரு கணம் திக்குமுக்காட வைத்தது. திகைப்பிலிருந்து விடுபட்டு "ஸ்ரீ.. யூ ஆர் க்ரேட்... உனது நண்பனாக இருப்பதில் நான் பெருமைப்படுகிறேன்" என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டேன்.

சாதனை மனிதர்களுக்கு நன்றிக் கடனாக உலகம் எத்தனையோ விதமான கௌரவங்களை வழங்கி வருகின்றது. அவை சரியான அளவுகோல்களால் அளக்கப்படாத போது அவை பற்றிய சர்ச்சைகள் உருவாகி உலகம் முழுக்க நாற்றம் எடுக்கிறது. மனிதர்களால் வழங்கப்படும் விருதுகளில் தேசங்களின், பிராந்தியங்களின் அரசியல் இலாபங்களும் தேவைகளும் இரண்டறக் கலந்திருக்கின்றன. ஒரு மனிதன் தனது தன்னலமற்ற சேவையின் பலனைப் பணமாகவோ பதவியாகவோ பெறுவதைவிட ஒரு கண்ணீர்த்துளியாகப் பெறுவது எத்தகைய ஒரு பெருங் கொடுப்பினை... அது முருகபூபதிக்குக் கிடைத்துவிட்டது. கண்ணுக்கு முன்னால் உணர்வுபூர்வமாகக் கிடைக்கும் ஆத்மார்த்தமான, இயல்பான அங்கீகாரமானது முழு உலகும் பார்த்திருக்க ஒளிவெள்ளத்தில் மிதந்து பெறப்படும் எல்லாவித விருதுகளின் அங்கீகாரத்தையும் விட உயர்ந்தது உன்னதமானது.

**குறிப்பு:** இந்தப் பத்தி உண்மையில் முருகபூபதி பற்றியதல்ல. முருகபூபதி சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டை ஏற்பாடு செய்தபோது அவரை அரசின் கைக்கூலியாகவும் தமிழ் மக்கள் துன்பத்தை மறக்கடிக்க முயன்ற துரோகியாகவும் வர்ணித்தவர்கள் பற்றியது ●



# எங்கள விக்கிறம்!

# வந்து வேண்டுங்கோ

- பு. றெக்னோ

**இடம்: நாறிவரும் யாழ்ப்பாணம்**
**காலம்: வடக்கின் வசந்த காலம்**
**நோக்கம்: இனவாதம் வளர்க்கவல்ல தனித்துவம் காக்க**

முறிந்த பனைகள் சோகக் கதை சொல்ல, தறப்பாள் குடிசைகள் இழப்பின் உச்சம் காட்ட, கிளறப்பட்ட கல்லறைகள் சகோதர பாசத்தைக் கேலி செய்ய, வீதியோர உறவிழந்த சிறார் முகங்கள் அவல கீதம் பாட, அரசமர நிழல்களில் தரிசனமும் கிடைக்கும். விகாரைகள் ஆங்காங்கே யாழ்வழி காட்டும். வடக்கின் வசந்தத்துடன் அதிசொகுசு வசுவில் விரைந்து வாரீர்! யாழ்ப்பாணம் வரவேற்கிறது.

**இன்றைய எம் ஊர் அடையாளம்**

தர்மச்சக்கரம் அதர்மமாய் பதிக்கப்பட்டிருக்கும். சகோதர மொழி வாடை ஓங்கியடிக்கும். வியாபார உத்தியாய் எம்மவர் வாயிலும் சகோதர மொழி மணக்கும். விளம்பரப் பலகைகள் வியாபித்து வரவேற்கும். நம் நல்லூர்க் கந்தன், வசுக்கள், லொறிகள், ஆட்டோக்களில் அலங்கோலமாயல்ல அலங்காரமாய் வலம்வருவார். சிங்க வசுக்கள், வேகத்தில் புளுதி சேர்க்கும். எங்கள் வீதிப் பெயர்ப்பலகை செந்தமிழைக் கேலி செய்யும். எம் ஊர்ப் பெயர்களெல்லாம் பெயர் மாற்றம் பெற்றிருக்கும்.வெற்றிக் கோபுரங்கள் கண்ணுக்கு (இதமளிக்கும். பயணிகட்கு இலகுவாய் சில இடப் பெயர்கள் கூட சிங்க மொழியில் பொறிக்கப்பட்டிருக்கும். இதுவே அடையாளம். மிகுதியை எதிர் பார்த்துக் காத்திருங்கள்.)



**உங்களுக்காக....**

கணவனை இழந்த விதவைகளையும், கோரப் போரினால் சித்தம் கலங்கிய உறவுகளையும் எத்தன்மையும் மாறாதவர்களாய் காட்சிக்கு வைத்துள்ளோம். எம் அவயம் இழந்தும், உறவுகள் இழந்தும், ஊரிழந்தும் வந்த சொந்தங்களை வெளியேற்றி நடு வீதியில் விட்டுவிட்டு எம் வீடுகளை உமக்காய் விருந்தினர் இல்லமாக்கியுள்ளோம். யாழ்ப்பாணச்சுவை (taste of Jaffna) என்று வேற்று நாட்டுச் சுவைகளை ரகமாய் தருகின்றோம். சித்தார்த்தர் சிலைகளும் நல்லூரில் விற்கின்றோம். பல லட்சம் என்று சொன்னால் எம் மண்ணையும் விற்போம். பொறுத்திருங்கள் பெண்ணையும் விற்போம். நாம் செல்ல முடியாத எம் சொந்த இடங்களுக்கு பாதுகாப்புடன் யாத்திரிகர் செல்ல




விடுப்பும் பார்க்கின்றோம். நீர் வந்து குடியேற, நீர் விதைத்த கண்ணிகளை எடுத்தும் உதவுகின்றோம். தண்டவாளம் கிட்டத்தான் நிற்கிறது. நீட்டிக் கொண்டே வாருங்கள். நாம் கொடுப்பதற்காய் காத்துள்ளோம்.

**எங்கள் அடையாளம்....**

நாங்கள் நாகரீகமானவர்கள். காதுகளில் வெள்ளிக் கடுக்கன். நிறம் பூசிய தலைமுடி. தேய்ந்து போன காற்சட்டை. கவர்ச்சிக்காக நாலைந்து ஆங்கிலச் சொல்லுடன் ஒரு தமிழ்ச்சொல்லை நயமாகப் பேசுவோம். என் தங்கைக்கும் உடல் தெரிய உடை உடுத்த அனுமதி கொடுத்துள்ளேன். அயல் பெண்கள் எனக்காகக் காட்டும்போது என் தங்கை என்ன விதிவிலக்கா? மாறாத குறியீடாய் சாதியமும்

சீதனமும் வைத்துள்ளோம். கடவுளை விலை பேசி சாதிக்கொரு கோயிலும் வீதிக்கொரு சுருவமும் உண்டியல் வைத்து அதில் ஒரு உத்தம பிழைப்பு. வெளிநாட்டு மாப்பிளைக்கு ஏகபோக வரவேற்பு. கலாச்சாரம் வளர்க்கிறோம் விளம்பரப் பதாதைகளில் மட்டும் (எயார்டெல், மொபிடெல், சக்தி தொலைக்காட்சி யார்யார் பெயர்களைக் குறிப்பிட மறந்தோமோ அவர்களுக்கும் எமது நன்றிகளும் பாராட்டுக்களும்)

**நாங்கள் விற்றுவிட்டவை...**

நாங்கள் காதுகளையும் கண்களையும் விற்று விட்டோம். காவலரண் அருகினில் கதவில்லாக் கழிப்பிடத்தில், மறைவில்லா கிணற்றடியில் மானம் கூசி நிற்கும் எம் குலப்பெண்களின் அவஸ்தை புரிவதில்லை. அவலங்களை கண் முன் அனுபவித்து மனநோயாளர்களாய் வாழும், எம் எதிர்காலம் இழந்த பிஞ்சுகளின் கண்ணீர் புரிவதில்லை. அவயம் இழந்து பிழைக்க வழி தெரியாமல் நிகழ்கால வாழ்வினை இழந்து நிற்கும் இளையவர்களின் ஏக்கம் புரிவதில்லை. எம் முழு நோக்கமும் எம்மைத் தக்க வைத்துக்கொள்ள எம் உறவுகளை விற்பது தான். பிடுங்குவதற்கு ஏதாவது இருக்கும் என எதிர்பார்க்கும் கயவர்கள். இதில் பிஞ்சுகளை துஷ்பிரயோகம் செய்யக் காத்திருக்கும் மதபோதகர்களை எவ்வகையினுள் அடக்குவது? தெருப்புணர் நாயிலும் கேவலமானவர்கள்.

**எங்கள் கல்விச் சாதனைகள்...**

கல்வியை பேரம் பேசி நன்றாக விற்கின்றோம். தனியார் வகுப்பு, பிரத்தியேக வகுப்பு, துரித மீட்டல் வகுப்பு என வகுப்புக்கள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம். பிள்ளைகளை வளமாக்க மணித்தியாலத்திற்கு நன்றாக பணத்தினைக் கறக்கின்றோம். அண்மைய பரீட்சை முடிவுகள் விளைவுகளை பறைசாற்றும். அகரம் தெரியாப் பிஞ்சுகளை இலவச வசு வந்து ஏற்றிச்செல்லும். இங்கிலீசு மீடியமாம். புகை போடும் நிலமையறியாப் பெற்றோரும் பலியாகும் பிள்ளைகளும். படித்த முட்டாள்களாய் பல்கலைக்கழகங்களிலும் சாதியம் வளர்ப்போம்.

**உண்மையில் நாம்...**

உண்மையில் நாம் கேவலம் கெட்டவர்கள். எம் சுயநலத்திற்காய் உறவுகளைத் தவிக்க விட்டவர்கள். அவர்களின் ஈரக்கண்ணீரில் வியாபாரம் செய்பவர்கள். சகோதரங்களின் கல்லறைகளை கிளறிட பார்த்து ரசிக்கும் சபிக்கப்பட்டவர்கள். தொடர்ந்தும் சாதியின் பெயர் சொல்லி வாழும் புல்லியர்கள். கட்டாயம் எங்கள் குணங்களுக்காய் நாம் என்றும் ஏமாற்றப் படுவோம்.

## உடற்பயிற்சியின் முக்கியத்துவம்




தினமும் 5 முதல் 10 நிமிடங்கள் கை, கால் தசைகளை மெதுவாக நீட்டி மடக்கி பயிற்சி செய்வது நல்லது. மூச்சை ஆழமாக இழுத்தும் மூச்சுப்பயிற்சி செய்யலாம். ஒவ்வொரு நிலையிலும் பத்து நொடிகள் அப்படியே வைத்திருக்கவும். உடலில் கொழுப்பு வடிவில் சேமித்து வைக்கப்பட்ட கலோரிகள் எரிந்து தேவையற்ற உடல் கொழுப்பை கரைக்க உடற்பயிற்சி உதவுகிறது. உடலின் வளர்ச்சி மாற்றங்களை அதிகரிக்கிறது. ஜீரண நேரத்தை அதிகப்படுத்தி பசியை மட்டுப்படுத்தவும் இரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுக்குள் வைத்திருக்கவும் உடற்பயிற்சி உதவுகிறது. எப்படியானாலும் உடற்பயிற்சி செய்ய உங்களுக்கேற்ற ஒரு திட்டத்தை தயாரித்துக் கொள்ளுங்கள். ஒரே நாளில் மாற்றத்தை எதிர்பார்க்காதீர்கள். தொடர்ந்து கடைபிடியுங்கள். மாற்றங்கள் காண்பீர்கள்.

## இளமையின் ரகசியம்



எல்லோருக்கும் இளமையாக இருக்க வேண்டும் என்ற ஆசை இருக்கும். ஆனால் அதற்கு வழி தெரியாமல் இருப்பார்கள். இளமையாக இருக்க ஆசனங்கள் உதவும். அதாவது ஆசனங்களில் சிரசாசனம் ராஜா என்றும், சர்வாங்காசனம் ராணி என்றும் அழைக்கப்படுகிறது. இதில், சர்வாங்காசனம், விபரீத கர்ணி, மச்சாசனம், சிரசாசனம் ஆகியவற்றை முறையாக செய்து வந்தால் எந்த ஆரோக்கியக் குறைபாடும் இன்றி இளமையாக வாழலாம். ஆனால், இவற்றை முறையாக செய்வது மட்டுமின்றி, இதற்கு இணையான அதாவது நின்றபடி செய்யும் ஆசனங்களையும் செய்ய வேண்டியது அவசியமாகிறது. மேலும் இந்த ஆசனங்கள் ஒவ்வொன்றிற்கும் நடுவே சாவாசனம், சுவாசனம், நித்திரை ஆசனம் ஆகியவற்றையும் செய்ய வேண்டும்.

## பப்பாளி இலை கசாயம்




கடுமையான காய்ச்சலைக் குணப்படுத்த உதவும் பப்பாளி இலை கசாயம் இதய நோயாளிகளுக்கும் நல்லது. முக்கியமாக அடிக்கடி இதயத் துடிப்பு அதிகரிப்பதால் அவதிப்படும் நோயாளிகளுக்கு பப்பாளி இலை கசாயம் சிறந்த பலனளிக்கும். பப்பாளி இலை கசாயம் நோயாளியை அமைதிப்படுத்தி, இதயத் துடிப்பைக் குறைத்து நிவாரணம் அளிக்கிறது. இதய நோயாளிகளுக்கு நன்றாக முற்றி பழுத்த பப்பாளிப் பழம் மிகச் சிறந்த உணவாகும். பப்பாளிப் பழம் இரத்தத்தில் கொலஸ்ட்ரோலின் அளவைக் குறைத்து, ரத்தக் குழாய்களை நெகிழக் கூடியவையாக ஆக்குவதால், இதய நோயாளிகள் பப்பாளிப் பழத்தைத் தவறாமல் கண்டிப்பாக அவர்களுடைய உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

# அரசியலமைப்பும் அடிப்படை



செவே.விவேகானந்தன்
சட்டத்தரணி




ஹிட்லர், யூத மக்களின் உரிமைகளைக் குழி தோண்டிப் புதைத்தவன். அவர்களின் பிறந்த மேனிகளைக் கண்டு ரசித்தவன். கோடூரமான முறைகளில் சித்திரவதை செய்தவன். நச்சுப்புகைகளை ஊட்டி பல்லாயிரம் மக்களைக் கொன்றவன். உலகத்தைக் கட்டியாள நினைத்து இரண்டாம் உலக யுத்தத்தை கொண்டு நடத்தியவன். ஜப்பானும், இத்தாலியும் அவனுக்கு முன்நின்று உதவி செய்தன. இரண்டாம் உலக மகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுதே மனித உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும் என்று குரல்கள் ஒலிக்கத் தொடங்கின.

ஐ.நா உருவாக்கப்பட்டது. மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் என பல சட்டதிட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

பல் நாட்டு அரசியலமைப்புக்களில் மனித அடிப்படை உரிமைகள் என ஒரு அத்தியாயமே சேர்க்கப்பட்டது. சிறுபான்மையினருக்கென அடிப்படை உரிமைகள் சேர்க்கப்பட்டன. ஆனால் இலங்கையின் சோல்பரி அரசியலமைப்பில் அவ்வாறான அத்தியாயம் ஒன்று சேர்க்கப்படவில்லை.

மனித உரிமைகள் பேணப்பட வேண்டும் என்று வாய் கிழியப் பேசியவர் கலாநிதி கொல்வின் ஆர். டீ. சில்வா. அவர்தான் 1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் பிதாமகன். சில அடிப்படை உரிமைகளை தான் உருவாக்கிய 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் புகுத்தினார். ஆனால் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் பொழுது உயர் நீதிமன்றிற்கு செல்வதற்கு வழிவகுக்கவில்லை. மாவட்ட நீதிமன்றில் நீதி கேட்கலாம் என்று கூறிவிட்டார். அதாவது ஏறக்குறைய 30 வருடங்களுக்குப் பின்தான் நீதியைப் பெறுவதற்கு வழிவகுத்தார்.

இந்திய அரசியலமைப்பு 1947 ஆம் ஆண்டளவில் உருவாக்கப்பட்டது. விபரமான அடிப்படை உரிமைகள் அத்தியாயமாகச் சேர்க்கப்பட்டன. உச்ச நீதிமன்றம், அதாவது உயர் நீதிமன்றத்திற்கு நேரடியாக நீதி கேட்டு வழக்குத் தொடரலாம். பாராளுமன்றம் சட்டத்தை இயற்றுகின்றது.

அச்சட்டம் அடிப்படை உரிமையைப் பாதித்தால் அவ்வாறு பாதிக்கப்படும் போது நீதிமன்றத்தில் மனு போடலாம்.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா தான் தர்ம வழி நடப்பவனென்று தன்னையே புகழ்ந்துகொண்டார். அந்த தர்மவான் 1978 ஆம் ஆண்டு ஓர் அரசியலமைப்பை உருவாக்கினார். அந்த அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் சிலவற்றை சேர்த்துக் கொண்டார். இன்றும் அதே அரசியலமைப்புதான். ஜே.ஆரின் அரசியலமைப்பு உருவாகிய காலம் தொட்டு தோன்றிய அவலம், மனித உரிமைகளுக்கெதிரான செயற்பாடுகள், மனித இரத்தம் பீறிட்டு ஓடுவது இன்னும் நிற்கவில்லை.

ஜே. ஆரின் அடிப்படை உரிமைகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதனை நீங்கள் அறிய வேண்டும். அவரின் ஆட்சிக்காலம் முழுவதும் இரத்த ஆறாக ஓடியது. அவரது ஆட்சிக்காலத்தில் மனித உரிமைகள் நசுக்கப்பட்டன.

குறிப்பாக தமிழர்களின் உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டன. தமிழர்களுக்கு உயிர் வாழும் உரிமையே இல்லாமலிருந்தது. இன்றும் அதே பாதை தொடருமோ என்ற பயம் உண்டு. அதனால் பேச்சுரிமையை இழந்து நிற்கின்றோம். மனதுக்குள் சரியெனப்படும் கருத்தை வெளிப்படுத்தாது விட்டுவிடுகின்றோம். இச்சூழ்நிலையில்





# உரிமைகளும்

*அடிப்படை உரிமைகள் ஏட்டுச்சுரைக்காய் போலில்லையா?*

*ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் அரசியலமைப்பில் விபரிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்குக் கட்டுப்பாடுகள் உண்டா? கவசங்கள் போடப்பட்டு அவற்றின் வலிமைகள் குறைக்கப்பட்டுள்ளனவா?*

அரசியலமைப்பின் மூன்றாவது அத்தியாயமே அடிப்படை உரிமைகள் பற்றி விபரிக்கின்றது. அவற்றின் வலிமையைக் கட்டுப்படுத்த மற்றைய அத்தியாயங்கள் உண்டு.

ஒருவன் ஒரு நோயால் பாதிக்கப்படுகின்ற போது தான் வைத்தியரும் நோயைக் குணப்படுத்தக் கூடிய மருந்தைக் கூற முடியும். நல்ல சுகத்துடன் இருப்பவரைப் பார்த்து இரண்டு வருடத்தின் பின் அவருக்கு என்னென்ன வருத்தம் வரக்கூடும் என்று கூற முடியாது. உண்டாகிய நோயை என்ன நோய், அதற்கான மருந்து என்ன என்பதையே கண்டு பிடிக்க முடியாமல் பலர் மரணிக்கின்றார்கள். இன்னவகை வருத்தத்திற்கு இன்னவகை மருந்து என ஏற்கனவே அறிந்து மருந்தைக் கூறமுடியும். நோய் வருகின்ற பொழுது ஏற்கனவே கூறிய மருந்தைக் கொடுக்கலாம். அது நோயை மாற்றாது. அரசியலமைப்பில் விபரிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளும் நோய்க்குரிய மருந்தை உத்தேச மதிப்பில் கூறுவது போல அமைக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசியலமைப்பில் பாராளுமன்றத்தால் இயற்றிய சட்டம் ஒருவரைப் பாதிக்கின்ற பொழுதுதான் பாதிப்பிற்கு ஏற்ற அடிப்படை உரிமைகள் கையாளப்படுகின்றன. அச்சட்டத்தில் இருக்கின்ற அடிப்படை



உரிமைக்குப் பாதகமாக இருக்கின்ற பகுதியை உச்ச நீதிமன்றம் நீக்கிவிடுகின்றது. பாதிக்கப்பட்டவரையும் வருங்காலத்தில் அவ்வாறு பாதிக்கப்படுகின்றவர்களையும் பாதுகாக்கின்றது. உலகளாவிய அடிப்படை உரிமை தத்துவங்கள் அவ்வாறே செயல்படுத்தப்படுகின்றன. ஆனால் இலங்கையில் அவ்வாறு இல்லை.

இலங்கையில் பாராளுமன்றம் இயற்றிய சட்டத்தில் அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டிருந்தாலும் அதனையிட்டு நீதிமன்றம் ஒன்றும் செய்ய முடியாது. சட்ட மூலம் வருகின்ற பொழுது அந்த சட்ட மூலத்தில் தெரிகின்ற அரசியலமைப்பிற்கு குந்தகமாகத் தோன்றும் குறைபாடுகளை உயர் நீதிமன்றம் அகற்ற முடியும். அவ்வாறு அகற்றப்பட்ட சட்டமூலம் பாராளுமன்றத்திற்கு

**ஒவ்வொரு மனிதனும் இருக்கின்ற சட்டத்திற்கு குந்தகமில்லாது கருத்தைத் தெரிவிக்கலாம். இது ஒவ்வொருவரினதும் கருத்துரிமையாகும். கருத்தை வெளியிடும் உரிமை ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமையாகும். கருத்து வெளியிடும் உரிமை எல்லா அடிப்படை உரிமைகளுக்கும் முதன்மையானது.**

சமர்ப்பிக்கப்படும். அச்சட்ட மூலத்திற்கு பாராளுமன்றம் திருத்தங்கள் கொண்டுவரலாம். அத்திருத்தங்கள் உயர்நீதிமன்றங்களுக்குச் சமர்ப்பிக்கப்படுவதில்லை. அத்திருத்தங்கள் அடிப்படை உரிமைகளை பாதிக்கக்கூடியதாக இருக்கலாம். அவ்வாறான திருத்தத்துடன் சட்டம் வெளிவரும். அதன் பின் நீதிமன்றத்தால் ஒன்றும் செய்ய முடியாது.

உதாரணம் பயங்கரவாத தடைச் சட்டமும் அவ்வாறே இயற்றப்பட்டது. அடிப்படை உரிமைகள் பல நசுக்கப்பட்டுள்ளன. பலர் பாதிக்கப்பட்டனர். நீதிமன்றத்தால் நிவாரணம் கொடுக்க முடியவில்லை. பல அரசியல் அறிஞர்கள் சட்டத்திற்கு ஓங்கிக் குரல் கொடுத்தனர். செவிடன் காதில் ஊதிய சங்கு நாதம் போல் இருக்கின்றது.

அடிப்படை உரிமை நசுக்கப்படுவதில் இரண்டாவது வகையுண்டு. இந்த அரசியலமைப்பிற்கு முன்னர் இயற்றப்பட்ட சட்டங்கள் யாவும்



இப்பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களாகவே கணிக்கப்படுகின்றன. அதனால் அடிப் படை உரிமைகளுக்குக் குந்தகமான சட்டங்களாக இருந்தாலும் நீதிமன்றத்தால் நிவாரணம் கொடுக்க முடியாது.

அடிப்படை உரிமை நசுக்கப்படுவதில் மூன்றாவது வகையுமுண்டு. ஒரு சட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையாலும் மக்கள் தீர்ப்பாலும் இயற்றப்படும் என்று பாராளுமன்றம் அறிவித்தால் அச்சட்டம் அரசியலமைப்பின் பிரிவு எதனையும் மீறுகின்றனவா என பரிசீலிக்க முடியாது. அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படுகின்றனவா என்று பார்க்க முடியாது. சட்டம் எல்லாவகைக் குறைபாட்டுடனும் இயற்றப்படலாம். அப்பொழுது அடிப்படை உரிமைகள் செல்லாக் காசாகிவிடும். மேற்கூறியவை சட்டவாக்கம் செய்கின்ற பொழுது அடிப்படை உரிமைகளுக்கு ஏற்படும் தாக்கமாகும். வேறு ஒரு விதத்திலும் அடிப்படை உரிமைகளின் செயல்வடிவத்தில் தாக்கம் ஏற்படுகின்றது. அது நடைமுறையில் ஏற்படும் தாக்கமாகும். நடைமுறை மூலம் அடிப்படை உரிமையை நசுக்க முடியும்.

**இலங்கையில் பாராளுமன்றம் இயற்றிய சட்டத்தில் அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டிருந்தாலும் அதனையிட்டு நீதிமன்றம் ஒன்றும் செய்ய முடியாது.**

ஒவ்வொரு மனிதனும் இருக்கின்ற சட்டத்திற்கு குந்தகமில்லாது கருத்தைத் தெரிவிக்கலாம். இது ஒவ்வொருவரினதும் கருத்துரிமையாகும். கருத்தை வெளியிடும் உரிமை ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமையாகும். கருத்து வெளியிடும் உரிமை எல்லா அடிப்படை உரிமைகளுக்கும் முதன்மையானது. அதனை சுதந்திரமாக தெரிவிக்க முடியும். ஒருவர் தெரிவிக்கும் கருத்துக்கு மாற்றுக் கருத்து உண்டு. அந்த மாற்றுக் கருத்தைத் தெரிவிக்கும் உரிமை அவருக்குண்டு. மாற்றான் கருத்தும் நறுமணம் வீசும். பலவித கருத்துக்கள் ஒன்று சேரும் போது தான் நல்லதோர் சமுதாயம் உருவாகின்றது. வலியாரின் கருத்திற்கெதிராக மெலியார் எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்க முடியாத சூழ்நிலை உருவாகலாம். இது



**சட்டம் எல்லாவகைக் குறைபாட்டுடனும் இயற்றப்படலாம். அப்பொழுது அடிப்படை உரிமைகள் செல்லாக் காசாகிவிடும்.**

நடைமுறையில் ஏற்படுகின்ற நசுக்கல். இன்று அதிகாரம் படைத்தவருக்கெதிராக கருத்து எதனையும் தெரிவிக்க முடியாமல் இருக்கின்ற சூழ்நிலை. அவ்வாறு தெரிவித்தால், தெரிவித்தவர் தண்டிக்கப்படுகின்றார்.

தண்டனை பலவித தோற்றத்திலும் வருகின்றது. இன்று இது கண்கூடு. ஆகமொத்தம் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று அரசியலமைப்பு கூறினாலும் அரசியலமைப்பில் இடுக்கி வைத்துள்ள சட்டங்கள், நடைமுறைகள் அடிப்படை உரிமைகளின் தன்மையை இல்லாமல் செய்துவிடுகின்றன.●

ஆனந்தத் தாண்டவன்

# படிக்கிறவன் பேயனாக இருந்தால்....



**வெ**ங்கடேசுவரப் பெருமாளையும் அவருடைய அவதாரத்தையும் இயம்பும் அக்கடிதம் கண்ட இரண்டு வாரத்துள் அதனை நூறு பிரதி செய்து நூறு பேருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும், அப்படி அனுப்பின் தீராத நோய்களெல்லாம் தீரும் என்றும், அதிஷ்டம் வந்து வீட்டுக்கதவைத் தட்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கும். அப்படி அனுப்பாதவர்கள் மூன்று மாதத்துள் ரத்தம் கக்கிச் சாவார்கள் என்றும், ஏற்கெனவே செத்தவர்கள் என்று உதாரணங்களும் அதில் கொடுக்கப்பட்டிருக்கும்.

அதை ஒருவர் நம்புகிறாரோ இல்லையோ அதில் உள்ள துர்வார்த்தைகளுக்கு அஞ்சியே பிரதிகள் எடுத்து அனுப்பி விடுபவர்கள் ஏராளம். பின்னர் மின்னஞ்சல்



வந்தபோது இதேபோன்ற கடிதங்கள் மின்னஞ்சலிலும் வரத் தொடங்கின. கைத்தொலைபேசியும் குறுஞ்செய்தியும் வந்த பின்னர் அவற்றையும் இந்த வெங்கடேசுவரப் பெருமாள்களோ அல்லது அக்கடிதங்களில் வீற்றிருக்கின்ற கடவுள்களோ விட்டு வைக்கவில்லை.

இந்த நவீன தொழில்நுட்பங்கள் மனிதரின் வாழ்க்கையை மேன்மைப்படுத்துவதற்குப் பதிலாக தமிழ்ச் சூழலில் மூடத்தனங்களையும், அறிவியலுக்குப் புறம்பான விடயங்களையும் மக்கள் மனதில் விதைக்கவே பயன்பட்டு வருவதுதான் தமிழின் துரதிஷ்டம்.

இப்போது போரின் கோரத்தால் அவலமும் அவநம்பிக்கையும் மட்டுமே எஞ்சியிருக்கின்ற மக்களிடத்தில், இருப்பதையும் பிடுங்கிக் கொள்கின்ற மோசடிகளுக்கு இந்தத் தொழில்நுட்பம் நன்கு உதவி வருகிறது. அந்த வகையில்தான் பத்துத் தலை நாகத்தின் படமும். உண்மையான படத்தை கணனித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி காசுபார்க்கின்ற கூட்டம் ஒன்று உருவாக்கிவிட்டிருக்கிறது.

அறியாமையும், அவநம்பிக்கையும், அவலமும் நிலவுகிற இச்சூழலில் இத்தகைய மோசடிகளை




அரங்கேற்றுவது மிக இலகுவானது.


மேலே தரப்பட்டுள்ள இரண்டு படங்களையும் உன்னிப்பாகப் பார்ப்பவர்களுக்கு அதில் செய்யப்பட்டுள்ள மோசடி புரியும். இரண்டு படத்திலும் தெரியும் பாம்பின் நிழல் ஒரு தலை நாகத்தினுடையதே. கணனியில் திருகு வேலை செய்தவர்கள் கவனிக்காது விட்ட நிழல் அது. பத்து தலை நாகத்தின் நிழல் எப்படி ஒரு தலை நாகத்தினுடைய நிழலாகத் தெரியும்? என்பதே கேள்வி.

அடுத்தது இவற்றின் தலைகள் எப்போதுமே சுயமாகச் செயல்படக்கூடியவை. வெவ்வேறு பக்கம் திரும்பக் கூடியவை. ஆனால் இந்தப்படத்தில் பத்துத் தலைகளும் ஒரே திசையில் நோக்குவதானது பிரதி பண்ணி ஒட்டப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாக்குகிறது. இன்னும் அண்மிய காட்சியாக அதனை எடுத்து ஆராய்ந்தால் கணனியில் செய்யப்பட்ட நகாசுவேலை புரியும்.

இந்தக் கணனி தொழில்நுட்பத்தின் இன்னொரு பரிணாமத்தினையும் பரிமாணத்தினையும் பயன்படுத்தி ஜூலியன் அசேன்ஸ் உலக வல்லரசுகளுக்கே சவால் விடுவதோடு ஜனநாயகத்தின் அடிப்படையான மக்களுடைய தகவல் அறியும் உரிமைக்காக குரல் கொடுத்து வருகிறார். நாமோ மூட நம்பிக்கைகளையும் அறிவீனத்தையும் வளர்க்கும் வகையில் பத்துத் தலை நாகம் படம் விட்டுக் கொண்டிருக்கிறோம்.



# சென்ற தம்பியும் நின்ற தம்பியும்...



காவியக் கவிஞர்கள் தங்கள் பாத்திரங்களுக்கு வழங்கும் நீதி மிகவும் துல்லியமானது. எந்த சமரசமும் அற்றது. தலைமைப் பாத்திரமென்றாலும், துணைப்பாத்திரமென்றாலும், எதிர்நிலைத் தலைவன் என்றாலும் அவரவர்க்கு உரிய இடமும், மதிப்பும் இலக்கிய அரங்கில் கண்டிப்பாக வழங்கப்பட்டு விடும்.

## கம்பராமாயணத்தில் ஒரு காட்சி

இராவணவதம் முடிந்து அயோத்தி மீள்கிறான் இராமன். இராமனோடு உடன் சென்று அவன் அனுபவித்த அனைத்தையும் ஏழிரண்டாண்டுக் காலம் துய்த்த இலக்குவனும், அவ்வாறு உடன் செல்லாவிட்டாலும் அரண்மனையையே சிறைக்கூடமாகவும், மணிமுடியையே முள்முடியாகவும் மாற்றிக் கொண்டு விட்ட பரதனும் ஒருவரை ஒருவர் எதிர்ப்படுகிறார்கள்.

**"அரசகுமாரனைப்போல அன்றி அடியவரைப் போல ஏவல் செய்"**

**("மன்னவன் எனும்படியன்று..**
**அடியாரின் ஏவல் செய்தி")**

என்று தன் தாய் சுமித்திரையாலேயே பணிக்கப்பட்டவன் இலக்குவன். இராமனுக்குப் பர்ணசாலை அமைத்துத் தந்து விட்டுத் தன் நெடிய இரவுகளை வில்லை ஊன்றிய கையோடு மட்டுமன்றி வெம்மையான பெருமூச்சுக்களோடும், கண்ணீர் வெள்ளத்தோடும் கழித்தவன் அவன்.



மற்றொருவனாகிய பரதனோ, தாய் வரம் கேட்டுத், தந்தை வழங்கிய ஆட்சியை முறையற்ற வழியில் வந்த செல்வமென எண்ணித் தன் அண்ணனின் காலடியில் கிடத்திவிட்டு - அதன் பிறகு அவனது ஆணைக்காகக் கட்டுப்பட்டாலும் - அவன் பாதுகையைத் தலையில் ஏற்று அர்ச வாழ்வில் துறவு பூண்டு வாழ்ந்தவன்.

**"வில்லை ஊன்றிய கையோடும் வெய்துயிர்ப் போடும்..**
**கங்குல் எல்லை காண்பளவும் (இரவுப்பொழுது புலரும் வரை)**
**இமைப்பிலன் நயனம் நின்றான்"**

எனக் கண்களைக் கூட இமைக்காமல் இராமனைக் காவல் காத்து நிற்கும் இலக்குவனைக் கண்டு கரைந்து புலம்பும் வேடுவக் குகன்,

**"தாய் உரை கொண்டு தாதை உதவிய தரணிதன்னைத் தீவினை என்னநீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கி..'ப் பரதன் வரும் கோலத்தைக் கண்டதும் "ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ.." (ஆயிரம் இராமர்கள் கூட உனக்கு நிகர் ஆகமாட்டார்கள்) என்று இலக்குவனுக்குச் சமமாகப் பரதனையும் பாராட்டுகிறான்.**

உலகின் கள்ளங்கபடங்கள் தோயாத பழங்குடி வாசியான குகன் மூலம் இரு தம்பியரையுமே வியப்புக்குரியவர்களாக்கிச் சமநீதி வழங்கிய கம்பர், அதே வகையான நீதியைக் காவியத்தின் கடைசிக்காட்சியிலும் அயோத்தி மக்கள் வழி வழங்குகிறார். இராமன் தன் பரிவாரங்களுடன் ஊர் திரும்பியதும் இலக்குவன் பரதனின் கால்களில் வீழ்ந்து பணிகிறான்.

**"பரி, கரி, தேர், ஊர்தி என்று**
**இவை பிறவும் தோலின்**

வினை உறு செருப்புக்கு ஈந்தான்"

என்று பரதனைப் பற்றி அந்தக்கட்டத்தில் குறிப்பிடுகிறார்கம்பர்.

குதிரைப்படை, யானைப்படை, காலாட்படை, தேர்ப்படை என நால்வகைப்படைகள் புடைசூழ அரச போகங்களோடு செல்வாக்காக வாழ்ந்திருக்க வேண்டிய பெரு வாழ்வைத் தோலினால் செய்யப்பட்ட செருப்புக்குக் கொடுத்து விட்ட பரதனுக்கு இவ்வாறு இலக்குவன் முதல் மரியாதை செய்ய, அவனைக் கட்டித் தழுவிக் கொள்கிறான் பரதன்.

இந்தக் காட்சியைக்காணும் அயோத்தி மக்கள், காடு சென்று தன்னைக் கடுமையாக வருத்திக் கொண்ட இலக்குவனின் மேனி மெலிவு மிகுதியா, குற்ற உணர்ச்சியின் கையற்றநிலையில் உருகிக் கரைந்து நாட்டிலிருந்தபடியே தன்னை மன உளைச்சலுக்கு ஆளாக்கிக் கொண்ட பரதனின் மேனி மெலிவு மிகுதியா.. என அவர்கள் இருவரையும் எடைபோட்டுப் பார்க்கிறார்கள்.

**"......................தனிமை நீங்கி**
**காடு உறைந்து உலைந்த மெய்யோ, கையறு கவலை கூர, நாடு உறைந்து உலைந்த மெய்யோ நைந்தது? என்று உலகம் நைய.."**

என்று தீர்மானமான ஒரு முடிவை எட்ட இயலாமல் அவர்கள் தவிக்கும்போதே கம்பனின் கவிதைத் துலாக்கோல் இருவரையும் ஒரே தட்டில்தான் மதிப்பிட்டிருக்கிறது என்ற விடையும் நமக்குக் கிடைத்து விடுகிறது.

தட்டில்தான் மதிப்பிட்டிருக்கிறது என்ற விடையும் நமக்குக் கிடைத்து விடுகிறது.

குகனின் பாராட்டு - வனவாசம் தொடங்கும் கட்டம். அதே வகையான போற்றுதலுக்குத் தகுதி படைத்தவர்களாய்ப் பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகும் அவர்கள் தொடர்வதற்கான நற்சான்று அயோத்தி மக்களின் கூற்று.

கம்பனின் காப்பிய நீதி வெளிப்படும் அற்புதமான கட்டங்களில் இதுவும் ஒன்று. பாத்திரங்களுக்குத், தான் வழங்க எண்ணும் இடத்தை, மதிப்பைக் கவிக் கூற்றாகவே சொல்லி முடித்து விடாமல் தான் சற்று விலகியிருந்தபடி தனது மதிப்பீட்டையே பிற பாத்திரங்களின் வழியாக அதுவும் அறிவு, ஆராய்ச்சி இவற்றால் எந்த முன் அனுமானங்களின் பிடியிலும் ஆட்பட்டிராத சாமானியர்களின் வாயிலிருந்து வரவழைக்கும் புனைவுத் தொழில்நுட்பமே கம்பநாடன் காவியத்தை வெறும் ஒரு புராணக் கதையாக மட்டுமே புறந்தள்ளி விட முடியாமல் செய்து விடுகிறது.

காலம் பல கடந்தும் அக் காவியம் உயிர்ப்போடு அனைவரையும் கட்டிப் போடும் சூட்சுமம், இவ்வாறான புனைவுக் கூறுகளிலேதான் பொதிந்து கிடக்கிறது. ●


அறிவியல் ரவுண்டப்

## கதிகலங்க வைக்கும் கடற்கொள்ளை பறவை

கடலில் பயணிக்கும் கப்பல்களை வழிமறித்து கொள்ளையடிக்கும் கடற்கொள்ளையர்களைப் போலவே ஸ்குவாஸ் என்ற கடற்பறவை, மற்ற பறவைகளின் உணவை வழிமறித்து கொள்ளையடிக்கின்றன. ஸ்குவாஸ் என்பது, கடலில் வாழும் ஒரு வகை பறவை. இது தாக்கும் குணம் கொண்டது. வானில் பறந்து கொண்டே சண்டை போட்டு மற்ற பறவைகளை கொல்லும் இயல்புடையது இப்பறவை.



## விதைகளை சேமிக்க ஒரு யோசனை



புது மண்பானையை மாட்டு சிறுநீரால் கழுவி, ஒரு நாள் முழுக்க நிழலில் உலர வைத்து, இரண்டாவது நாள் வெயிலில் உலர வைத்து மூன்றாவது நாள் விதைகளை அதில் போட்டு மூடி வைத்தால், குறைந்தது இரண்டு வருடங்கள் வரை விதை, முளைப்பு தன்மை குறையாமல் இருக்கும்.

## முதுகுவலியால் அவதிப்படுகிறீர்களா?



முதுகுவலிக்கு பரிகாரமாக செயற்கை முதுகெலும்பு தயாரித்து நிபுணர்கள் சாதனை படைத்துள்ளனர். குறிப்பாக முதியவர்கள் பலர் இந்த நோயினால் கஷ்டப்பட்டு வருகின்றனர். முதுகெலும்பில் உள்ள இடைத் தட்டு எலும்புகள் சேதமடைவதால் வலி ஏற்படுகிறது. எனவே இந்த வலியை போக்குவதற்காக அறுவை சிகிச்சை உள்ளிட்ட பல நிவாரண வழிகளை மேற்கொண்டு வருகின்றனர். தற்போது முதுகெலும்பில் சேதமடைந்துள்ள இடைத்தட்டு எலும்புகளை ஆய்வு கூடத்தில் தயாரித்து அதைப் பயன்படுத்த முடியும் என விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். 'ஸ்டெம் செல்' சிகிச்சை மூலம் உடலில் ஏற்படும் நோய்கள், சேதமடையும் திசுக்களையும் மற்றும் எலும்புகளையும் சீரமைக்க முடியும் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதே முறையில் பழுதடைந்த நிலையில் இருக்கும் முதுகெலும்பு இடைத் தட்டு எலும்புகளை சீரமைக்க முடியும். இந்த சோதனை எலி, நாய் போன்ற விலங்குகளிடம் நடத்தப்பட்டு வெற்றி பெற்றது. அதே முறை மனித உடலிலும் வெற்றி பெறும் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

அடுத்த இதழில் எதிர்பாருங்கள்

SOORIYAN FM

இளமை புதுமை கலாட்டா

உங்கள் அபிமான
சூரியன் எப்.எம்
அறிவிப்பாளர்கள்
கலந்து கலக்கும் இளமை புதுமை கலாட்டா.

உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்!

# விழிவை நோக்கிய உறவுகளுக்குக் கை கொடுப்போம்

■ ஜீவா

## கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களின் புதிய முயற்சி

அழிப்பதற்கு காத்திருக்கும் இவ்வுலகில் ஆக்குவதற்கு என்று ஆங்காங்கே ஒருசிலர் இருப்பதால்தான் உலகம் சுற்றிக்கொண்டு இருக்கின்றது. இன்று வடக்கு கிழக்கை பொறுத்தமட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பள்ளிச் சிறார்களை கண்கொண்டு பார்ப்பதற்கு யாருமே இல்லை. வெறும் மண் தரைகளிலும் பாம்புகள், பூச்சிகள் உலாவும் பற்றைக் காட்டுக்குள்ளும் இன்னும் கல்வியை மேற்கொள்கின்றனர்.

கண்ணீர்க் கதை சொல்லிக் கொண்டிருந்த எம் பள்ளி உறவுகளைப் பார்த்து உறவாடி அவர்களின் கா.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு முன்னோடிக் கருத்தரங்குகளை நடாத்தி எம்மாலான உதவிகளை செய்துவருவோமென கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் கலைப்பீடத்து மாணவர் குழுவொன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்விவலயம் நோக்கிப் புறப்பட்டது. முல்லைத்தீவு அரச அதிபர் மற்றும் துணுக்காய் கல்வித்திணைக்களப் பணிப்பாளர் அனுமதியுடனும் தமிழ்ச் சங்கத்தினது ஏற்பாட்டிலேயே இவ் முன்னோடிக் கருத்தரங்கு நடைபெற்றது. 08.11.2010 தொடக்கம்12.08.2010 வரை துணுக்காய் வலயத்திற்கு உட்பட்ட பத்தொன்பது பாடசாலைகளை உள்ளடக்கி அவற்றை நான்கு வலயங்களாக பிரித்து ஒட்டுச்சுட்டான் மகா வித்தியாலயம், மாங்குளம் மகா வித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி, பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் எனப்பிரிக்கப்பட்டு வரலாறு, தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய ஐந்து பாடங்கள் கற்பிக்கப்பட்டது.

08.11.2010 காலை 8.30 மணியளவில் ஒவ்வொரு நிலையத்திலும் ஆரம்ப நிகழ்வுகளுடன் அவ்வப் பாடசாலை அதிபர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நான்கு பாடசாலைகளை உள்ளடக்கி அதில் 162 மாணவர்களைக் கொண்ட மல்லாவி நிலைய ஆரம்ப நிகழ்வு உதவிக் கல்விப்பணிப்பாளரினாலும் 4 பாடசாலைகளின் அதிபர்களினாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதில் உரைநிகழ்த்திய உதவிக்கல்விப்பணிப்பாளர் "கல்விச்செல்வத்தினை நாம் இழக்கவில்லை." அது பறிக்கப்படவில்லை என்றும் அதைக் காக்கவேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக் கூறினார். அமர்வுகள் காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 வரை நடைபெற்றது.

மாணவர்களின் வரவும் நாளுக்குநாள் அதிகரித்தது. சோகங்களுடன் காணப்பட்ட ஒரு மாணவி "அண்ணாவும், நானும், தங்கையும் வீட்டிலுள்ளோம். தங்கை 4ம் ஆண்டு படிக்கின்றாள். நாங்கள் 10ம் ஆண்டு படிக்கவில்லை. ஒரு வருடத்திற்கு அதிகமாக அங்கயுமிங்கயும் ஓடிக்கொண்டும் பங்கருக்குள்ளேயும் முகாமுக்குள்ளேயும் இருந்தனாங்க. இப்ப பத்தாமாண்டும் படிக்கல்ல. ஒழுங்கா சிலபசும் முடிக்கல்ல. எப்படியண்ணா O/L EXAM எழுதுறது?

எங்கட பள்ளிக்கூடத்தில விஞ்ஞான பாடம், கணித பாடத்துக்கெல்லாம் இப்பத்தான் ரீச்சர்மார் வந்தவயள். எங்களுக்கு இப்பிடியான கருத்தரங்குகள் நடைபெறுவதில்லை.



வெளியிடத்து பேப்பர்கள் செய்துபார்க்கவோ அல்லது எங்கட ரீச்சர் மாரைத் தவிர வேற அண்ணாமார், அக்காமாரிடம் கேட்டுப்படிக்க சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை. (நீங்கள் எல்லாரும் இனி வருவீங்கதானே என சிரிக்கிறாள்?) எங்கட பள்ளிக்கூடத்திலையெல்லாம் முந்தி கொம்பியூட்டருகளெல்லாம் இருந்தது. இப்ப ஒண்டுமே இல்லை'' என்று அந்த மாணவி கூறும்போது என் மனசு பதறியது.

அங்கொரு பாடசாலை அதிபரைச் சந்திக்கச் சென்றபோது ''தம்பியள் குறைநினைக்காதீங்க. என்னுடைய கதிரையைத் தவிர காரியாலயத்தில் வேறொரு கதிரையுமில்ல அப்பன் உங்களுக்குக் கொடுக்க. ஆமிக்காரர் ஏதோ ஒரு கூட்டத்திற்காக இங்கு கொண்டுவந்த கதிரைகளை ஒரு ஆறு நாளுக்குத் தாங்களெண்டு கேட்டு மறிச்சு வச்சிருக்கன்'' என்றார். எம் வாயிலிருந்து வார்த்தைகள் வர மறுத்தன.



சற்றுத் திரும்பிப் பார்த்தேன். எம் உறவுகள் சிறிய மேசைகளிலும் பாயிலும் உட்கார்ந்து பயின்றுகொண்டு இருந்தனர்.

என் நண்பர் கற்பித்தலை ஆரம்பிக்க, திடீரென்று என் கரங்களை ஒரு கை பற்றிக்கொண்டது. ''நான் ஒரு ஆசிரிய ஆலோசகர் தம்பி. இங்குள்ள எல்லோருக்குமே ஒவ்வொரு கதையுண்டு. இவர்கள் வீடு திரும்பினால் மீண்டும் சோகத்துக்குள்ளேயே திரும்பிவிடுவார்கள். எதாவது ஒன்றை இழந்து வீட்டில் யாரேனும் படுத்துக் கிடப்பினம். (இருமுறை உச்சரிக்கிறார்) பொய்யெண்டால் சும்மா ஒருக்கா இவர்களுடன் போய்ப்பாருங்கோ. நான் கூடத்தான் இப்போ சிரிக்கிறன். என்னுடைய அண்ணனைக் காணவில்லை. அப்பா இறந்திட்டார். எல்லோருமே சிறிதளவு சந்தோசத்தையேனும் அனுபவிக்கவே இங்க வருகினம். நாங்களும் அதைத்தான் கொடுக்கிறம். ஒன்றரை வருடமாக இவர்களுக்கு எதுவுமே கற்பிக்கப்படாத நிலையிலும், இவர்களின் குடும்ப சூழ்நிலையாலும், ஆசிரியர்களும் கற்பிப்பதிலும் பாட அலகுகளை வரையறைக்கேற்ப கொண்டுசெல்வதிலும் கஷ்டத்தையே எதிர்கொள்கின்றனர். அர்ப்பணிப்புள்ளவர்கள்'' என்று முடித்தார். (ஆசிரியர் இடம்பெயர்ந்து வவுனியா சென்று அனுதினமும் துணுக்காய்க்கு வந்து செல்பவர்)

இன்னொருநாள் அதிபர் ஒருவருடன் பேசினோம். ''இவர்களுக்கு மனவளர்ச்சிதான் பிரதானமாயுள்ளது. தற்போதும் ஆசிரியர்களுக்கு இதுபற்றிய செயலமர்வுகள் நடைபெறத்தான் செய்கின்றது. அத்தோடு ஆசிரியர் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவே உள்ளது. தற்போது ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்திலிருந்தும், வவுனியாவிலுமிருந்தே வந்து செல்கின்றனர். இவர்களுக்காக




பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவே உள்ளது. தற்போது ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்திலிருந்தும், வவுனியாவிலுமிருந்தே வந்து செல்கின்றனர். இவர்களுக்காக
தனியான பஸ் சேவை இருக்கிறது. அதிலும் சில குழறுபடிகள் உள்ளன. ஒருகாலம் ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தனர். பின்னர் நாங்களே எங்கள் இடங்களில் ஆசிரியர், அதிபர்களானோம். கல்வியில் முன்னேற்றத்தில் போட்டி போட்டோம். தற்போது பழைய நிலைக்கே சென்றுவிட்டோம். இவர்களுக்கு அடிப்படையிலிருந்து தொடங்குங்கோ. இப்படியான கருத்தரங்குகளை கடைசிவேளையில் மேற் கொள்ளாமல் புதியதொரு

வகுப்


பினரை பொறுப்பெடுத்து ஆண்டு முழுவதிலும் தொடர்வீர்களானால் உங்களுடன் பலரை பல்கலைக்கழகம் கூட்டிச்செல்லமுடியும்'' என்றார்.

முன்னேற்றிடவேண்டுமென்ற ஆர்வம் முகத்தில் மட்டுமன்றி குரலிலும் கலந்திருந்தது. சோகக் கதைகளையும் எதிர்பார்ப்புக்களையும் எங்கள் மனங்களில்தானே பொதித்துவைக்கமுடியும்.. எல்லாம் காலம் செய்த கோலம்.

602 மாணவர்களை உள்ளடக்கிச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னோடிக் கருத்தரங்கின் இறுதிநாள், கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்க தலைவர் உட்பட செயற்திட்டக் குழுவினர், அனைத்து நிலையத்து மாணவர்களையும் அதிபர் ஆசிரியர்களையும் சந்தித்து அவர்களின் குறை நிறைகளை அறிந்தகொண்டனர். அன்று மாலை துணுக்காய் கல்வி வலயத்தில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தினால் ஏற்பாடாகியிருந்த தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு புதிதாக வங்கிக்கணக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது அம் மாணவர்களின் கல்விக்கு ஒரு சிறிய பக்கபலமாக இருக்கும் என்று நம்புகிறோம்.


இறுதியாக பல்கலைக்கழக மாணவர்களைப் பாராட்டுவதையும், ஊக்குவிப்பதனையும் நோக்காக் கொண்டு பாராட்டு நிகழ்வும் இரவு உணவும் வலயக்கல்விப் பணிமனையால் ஏற்பாடாகி தம்முடைய நிறைவினையும் நன்றியுணர்வையும், புண்பட்ட மனங்கள் வெளிப்படுத்திவிட்டுப் பிரிய மனமின்றி பிரிந்துசென்ற வேளை, மின்விளக்குகள் இருளை எதிர்த்து ஒளிர்ந்துகொண்டிருந்தன. இருளடைந்த அம் மனங்களுக்கும் இவ்வாறு ஒளிவீசவேண்டும் என்ற பிரார்த்தனையோடு நாமும் விடைபெற்றோம்.

# அறியாத்தனத்தால் ஏமாற்றமடைந்த மலையகப் பெண்ணின் அழுகுரல்



உண்மையின் பதிவு..

நாளாந்தம் உழைக்கும் எமது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இறுதியில் மிச்சப்படுவது அவர்களின் உடல்வருந்திய கடின உழைப்பிலிருந்து சேமிக்கப்பட்டிருக்கும் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் (E.P.F, E.T.F) போன்றவையே. அப் பணத்தை தமது இறுதிக்காலத்தில் பெறுவதற்காக இம்மக்கள் எதிர்நோக்கும் இன்னல்கள் ஒருபுறமிருக்க இப்பணத்தை இலகுவில் பெற்றுத் தருவதாகக் கூறி இவர்களை ஏமாற்றி பணம் பறிக்கும் தரகர்களிடம் சிக்கி பெருந்தொகையான பணத்தை இழந்து வருவதும் மலையக பகுதிகளில் நடைபெற்றே



வருகிறது. அவ்வாறு, இறந்துபோன தனது கணவனின் மேற்படி பணத்தினை பெறுவதற்காக தரகரொருவரை நாடி அவரிடம் பெருந்தொகையான பணத்தினை இழந்து நிற்கும் ஒரு அப்பாவிப் பெண் தொடர்பான உண்மைச்சம்பவமே இது.

மத்திய மலை நாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ பிரதேச சபைக்குட்பட்ட அழகிய தோட்டப்புறமொன்றை பிறப்பிடமாக கொண்டவர் கனகா. (47) இவருக்கு ஒரு மகனும் இரு மகள்மாரும் உள்ளனர். கனகா மேற்படி தோட்டத்தில் தொழிலாளியாகக் கடைமையாற்றிவர அவரது மகனான குமாரும் அதே தோட்டத்தில் புதிதாக தொழிலாளியாக இணைந்து கடமையாற்றி வருகிறார். அவருடைய மகள்மார்கூட அதே தோட்டத்தில் மணம்முடித்து தொழிலாளியாகவே பணியாற்றி வருகின்றனர். கனகாவின் கணவர் சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்பு விபத்தொன்றில் இறந்துவிட அவரின் ஊழியர் சேமலாப நிதியத்தை (E.P.F) பெற கனகா முயன்றார். அவருக்கு அப்பணத்தை பெறும் முறைகளில் போதிய விளக்கமின்மையால் பிறிதொரு தோட்டத்தில் வசிக்கும் தரகு நபரொருவரின் உதவியை நாடினார். அந்நபரோ அப்பணத்தை பெற பல தடவைகள் கொழும்புக்கு செல்ல வேண்டியுள்ளதாகவும் அதற்கு பெரும் தொகையான பணம் தேவையாகவுள்ளது என்றும் கனகாவிடம் கூற கனகா தனது நிலைமைகளை அவரிடம் எடுத்துக்கூறியிருக்கின்றார்.

அதைக்கேட்ட அந்த தரகு நபர் கனகாவிடம் புதியதொரு யோசனையை சொல்ல அந்த யோசனைக்கு கனகாவும் உடன்பட்டார். அதாவது நகரத்திலுள்ள வர்த்தகர் ஒருவரிடம் வட்டிக்கு கடன் பெற்று அதில் செலவுகளை மேற்கொண்டு பின் பணம் பெறப்பட்டவுடன் அப் பணத்தை வட்டியுடன் செலுத்திவிடலாமென்பதே அந்த யோசனை. இதன் மூலம் அந்த தரகு நபரின் ஊடாக நகரத்திலுள்ள பிரபல வர்த்தகர் ஒருவரிடம் பணம் பெறப்பட்டு கனகாவின் கணவருடைய ஊழியர் சேமலாப நிதியத்தினை பெறுவதற்குண்டான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு ஆறு மாதங்கள் கடந்தன. அதன் பின் அவரின் பணம் முழுத்தொகையாக சுமார் நான்கு இலட்சமளவில் பெறப்பட்டது. அதுவும் அவர் உயிரோடு இல்லாததால் அவரின் மனைவி மற்றும் பிள்ளைகள் என ஆளுக்கொரு பங்காக பணம் பிரிக்கப்பட்டு வந்தது. அப் பணம் பெறப்பட்டவுடன் குறித்த அந்த தரகு நபரிடம் செலவான மொத்தத்தொகையை வினவியபோதுதான் கனகாவுக்கு அதிர்ச்சியே காத்திருந்தது. ஏனென்றால் வட்டியுடன் சேர்த்து அவர் கூறிய தொகை வெறும் ஐயாயிரம் பத்தாயிரமல்ல. எழுபத்தைந்தாயிரம் (75,000) ரூபாய் ஆகும். அதைக் கேட்டதும் கனகாவுக்கு தூக்கி வாரிப்போட்டது. ஆனாலும் ஒன்றுமே செய்ய வழியில்லாததால் அவர் கேட்ட தொகையை கொடுத்துவிட்டு இன்று கண்கலங்கி நிற்கிறார். அவருக்கோ அல்லது அவருடைய மகனுக்கோ அவ்வளவாக வெளி அனுபவங்களோ கல்வியறிவோ இல்லாததால் தரகு நபருக்கு அவளிடம் பணம் கறக்க மிக இலகுவாகப்

வாழும் காலத்தில் தன்னுடைய பணத்தினை தொட்டுக்கூட பார்க்காமல் இறந்துபோன அவரது கணவனது பணம் அவளது அறியாத் தனத்தினால் இன்று யாரோ அனுபவிக்க வாய்ப்பாகிப் போய்விட்டது. இதுபோல இந்த மலையகத்தில் இன்றும் எத்தனை அப்பாவிகள் கண்களுக்குத் தெரியாமல் ஏமாற்றப்பட்டிருப்பார்கள்? இன்னும் எத்தனைபேர் ஏமாற்றமடையப் போகிறார்களோ தெரியவில்லை. இதற்கு என்னதான் தீர்வு? இப்படியான ஏமாற்றுப் பேர்வழிகளுக்கு யார்தான் தண்டனை வழங்கப் போகிறார்கள்களோ தெரியவில்லை. மலையகத்தில் இதுவும் ஒரு மறைமுக உழைப்புச்சுரண்டல்தான்.

மலையகத்தைப் பொறுத்தளவில் அம் மக்கள் வெளியனுபவம் சற்றுக் குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். பொதுவாக அவர்களது ஊழியர் சேமலாப நிதியைப் பெறுவதில் அதிக சிரமத்தினை எதிர்நோக்குவதை நான் எத்தனையோ முறை கண்டுள்ளேன். சிலர் கொழும்பு வந்து இடமும் தெரியாமல், குறித்த நபர்களையும் தெரியாமல், மொழியும் தெரியாமல் அவதிப்பட்டதுண்டு. வாழும் காலம் முழுவதும் தோட்ட முதலாளிமார் சொகுசாக வாழ்வதற்காய் மாடாய் கிடந்து உழைக்கின்றனர் தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள். அதில் கிடைக்கும் ஊழியர் சேமலாப நிதியை எடுத்தாவது தங்கள் கடைசி காலத்தை நிம்மதியாக கழிக்க முடியாமல் இப்படிப்பட்ட பேர்வழிகளிடம் ஏமாந்து கஷ்டப்படுகின்றனர்.

இதனை குறிப்பிட்ட தோட்ட நிர்வாகங்கள் பொறுப்பில் எடுத்து அவர்களுக்கு ஆவண செய்து கொடுக்க வேண்டும். சில தோட்டங்களில் நிர்வாகத்தில் உள்ள ஒருசில அதிகாரிகள் கூட இந்த நிதியை தாங்கள் பெற்றுக்கொடுத்தால் தனக்கு இத்தனை வீதம் கொமிஷன் என்று பேரம் பேசிக் கொள்வார்களாம். வேலியே பயிரை மேய்ந்தால் என்ன செய்வது? இதற்கு தோட்ட நிர்வாகம் உரிய முறையில் நடவடிக்கை எடுக்காவிட்டால் அம்மக்களின் உழைப்பில் இப்படித்தான் பலர் குளிர்காய முற்படுவார்கள்.

## SMS JOKES

ஒரு call இல்ல
ஒரு sms இல்ல
பார்க்கலாம் என்டாலும் முடியல்ல
இப்படி எதுவுமே
நீ பண்ணலன்னாலும்
நான் எதுக்கு உனக்கு
continuous - ஆக
sms அனுப்பி
உன்ன தொல்ல பண்றன் தெரியுமா..?
ஏன்னா நீ ஏன்
நண்பேன்டா!!!
நண்பேன்டா!!!
நண்பேன்டா!!!

# யார் மன்மதன்?

## நீங்களும் செக் பண்ணிப்பாருங்கள்

ஒரு பெண்ணை அடைவதென்பது அவ்வளவு சுலபமான வேலை இல்லை. இப்படிச் சொல்பவர்களும் உண்டு. நான் ஒரு பெண்ணை விரும்பினால் அவளை அடையாமல் விடமாட்டேன் அது எனக்கு மிக எளிதான காரியமும் கூட இப்படி முரண்பட்ட கருத்துக்களைச் சொன்னவர்களும் உண்டு.

ஆம். மனதில் நினைத்த பெண்ணை அடைய முடியவில்லையே என்ற ஏக்கத்தில் தற்கொலை செய்து கொண்ட செய்திகளைக் கேள்விப்படுகிறோம். அதே சமயம் ஒரே ஆண் நினைத்த பெண்களையெல்லாம் அனுபவித்த கதைகளையும் கேள்விப்பட்டிருக்கிறோம்.

இந்த இரண்டு விதமுமே நாட்டில் உண்டு. சரி. தோல்வியடைந்து புறமுதுகிட்டுப் போகும் ஆண்களைச் சற்று ஒதுக்கி வைத்து விட்டு இதில் தான் நினைத்த படி வெற்றிபெறும் ஆண்களைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ளலாமா? தான் விரும்பிய பெண்ணை மிக எளிதாக அடைந்து விடும் ஆண்களுக்கென சில விஷேச குணங்கள் இருப்பதாக காமசூத்திரம் தொகுத்துக் கூறுகிறது. அவை எப்படிப்பட்ட குணங்கள் என்று பாரப்போமா?

பெண்களைச் சந்தோஷப்படுத்தும் செயல்களைச் செய்பவன், விருந்துகளில் மகிழ்ச்சியாக இருப்பவன், தாராளமாகப் பரிசுப் பொருட்களை வழங்குபவன், பிற ஆணுக்காகத் தூது செல்பவன், அன்பான குணத்தை இயற்கையாகவே கொண்டவன், உல்லாசமாக இருப்பதில் அதிக ஆர்வம் காட்டுகிறவன், அதிகத் துணிச்சல் உள்ளவன், ஒன்றாக வளர்ந்தவன், காம சாஸ்திரம் நன்கு கற்றவன், அடிக்கடி பெண்கள் பார்வையில் தெரியும்படி இருப்பவன், நடந்து கொள்பவன்,
இளம் பருவத்தில் தோழனாக இருந்தவன், மனதைக் கவரும் கதை சொல்வதில் வல்லவன், புதுமாப்பிள்ளை, முதலாளியாக இருப்பவன், தாராள மனப்பான்மை உள்ளவன், ரகசியத்தை அறிந்தவன், அவளது தோழனுடன் தொடர்பு உள்ளவன், பெண்ணின் கணவனை விட அழகிலும் அறிவிலும் சிறந்தவன்.........,



என்ன யோசிக்கிறீர்களா? உங்கள் நண்பர்களில் யார் யார் இப்படிப்பட்ட குணாதிசயங்களைக் கொண்டுள்ளனர் என்று நன்றாக அசைபோடுங்கள் புரியும்.





# ஒரு வகை லோ பிரஸர் நிலை சார்ந்த குறை இரத்த அழுத்தம்

(Orthostatic Hypotension)

**முழுக் குடும்பமுமே அல்லோலகல்லோலப்பட்டு ஒடி வந்திருந்தது. அவர்கள் பயந்ததற்கு காரணம் இருக்கவே செய்கிறது. திடீரென மயக்கமடைந்து விழுந்தவர் வயதான கிழமல்ல. இளந்தாரிப் பொடியன். குடும்பத்தைக் காப்பாற்றுவான் எனக் கருதப்படும் அவர்களது நம்பிக்கை நட்சத்திரம். நடந்தது இதுதான்.**

அவனுக்கு இரண்டு மூன்று நாட்களாகக் காய்ச்சல். ஆனாலும் லீவு எடுக்க முடியவில்லை. பனடோலைப் போட்டுக் கொண்டு வேலைக்குப் போய்வந்தான். ஆயினும் இன்று முடியாமல் சுருண்டு படுத்துக் கிடந்தவன் தண்ணி குடிக்க என எழுந்தபோது திடீரென மயக்கம் போட்டு விழுந்து விட்டான். பேச்சு மூச்சில்லை. தண்ணி தெளித்து எழுப்பி படுக்கையில் கிடத்தி தேத்தண்ணியும் சுடச்சுடக் கொடுத்த பின் சற்றுத் தெளிந்ததாம். அதன் பின்னரே என்னிடம் கூட்டி வந்திருந்தனர்.

"என்ன நடந்தது என்று தெரியவில்லை. வாய் காஞ்சு போச்சு. தண்ணி குடிக்க எண்டு எழும்பினதுதான் தெரியும் மயங்கிட்டன் போலை.."

மற்றொருவர் வயதானவர். காலையில் தலையில் காயத்துடன் கொண்டு வந்திருந்தார்கள். இரவு படுக்கச் சென்றவர் சலம் விடுவதற்காக அதிகாலையில் எழும்பினாராம். அந்த இடத்திலேயே விழுந்து போனார். விழும்போது கட்டில் இடிச்சு பிடரியிலை காயம்.

இன்னொருவர் இளம் பெண். கர்ப்பிணி. நல்ல காலம் விழவில்லை. படுத்திருந்துவிட்டு எழுந்தாலோ, இருக்கையிலிருந்து எழுந்தாலோ தலையைக் கிறுகிறுத்துக் கொண்டு வருகிறதாம். எனவே இருக்கையிலிருந்து நிதானமாகவே எழுகிறாராம். நின்று நிதானித்தே நடக்கிறாராம். இல்லையேல் விழுந்துவிடும்போல் இருக்கிறதாம். மிகவும் சரியான செய்கைதான். முன் கூறிய மற்றவர்களுக்கு திடீரென நிகழ்ந்ததால் அவ்வாறு நிதானமாக எழவோ நடக்கவோ வாய்ப்பு இருக்கவில்லை.

இவர்கள் அனைவருக்கும் என்ன நடந்தது?

**நிலைசார்ந்த குறை இரத்த அழுத்தம்.**

இவர்களது பிரஸர் திடீர் என அந்நேரத்தில் தளர்ந்துவிட்டது. வழமையாக அவர்களது பிரஸர் சாதாரணமாகவோ அல்லது அதிகமாகவோ இருந்திருக்கக் கூடும். ஆனால் உடல் நிலையில் திடீரென ஏற்பட்ட மாற்றம் காரணமாக அவர்கள் படுக்கையிலிருந்தோ நாற்காலியிலிருந்தோ எழும்போது அது திடீரெனக் குறைந்துவிட்டது. இதனை (Orthostatic Hypotension) என்பார்கள்.

இதனை நிலைசார்ந்த குறை இரத்த அழுத்தம் எனலாம். அதாவது படுத்திருப்பதா, உட்கார்ந்திருப்பதா, எழுந்து நிற்பதா போன்ற உடலின் நிலை சார்ந்தது. திடீரென எழுந்திருக்கும்போது அவரது உடலின் குருதிச் சுற்றோட்டமும், இரத்த அழுத்தமும் மாறும் உடல் நிலைக்கு ஏற்பத் திடீரென ஈடு செய்ய முடியாததால் பிரஸர் குறைகிறது. இது பல காரணங்களால் நிகழலாம்.

முதலாவது நபருக்கு கடும் காய்ச்சல் காரணமாகவும், அடுத்தவருக்கு வயதான காரணத்தாலும், அப்பெண்ணுக்கு கர்ப்பமாயிருந்ததாலும் அவ்வாறு நேர்ந்தது. ஆனால் அவர்கள் மருத்துவரை நாடிப் போவதற்கிடையில் பிரஸர் தானாகவே சாதாரண நிலையை அடைந்து விடும்.

உடலில் நீர் வரட்சி அதாவது போதிய நீர் அற்ற நிலையில் இத்தகைய பிரச்சினை ஏற்படுவதுண்டு. கடும் காய்ச்சல், வயிற்றோட்டம், வாந்தி போன்ற நோய்கள், கடுமையான உடற் பயிற்சிகளால் உண்டாகும் அதீத வியர்வை, போதிய நீராகாரம்





டொக்டர். எம்.கே. முருகானந்தன்



அருந்தாதிருத்தல் போன்றவற்றால் உடலில் நீரிழப்பு நிலை ஏற்படும்போது இத்தகைய லோ பிரஸர் திடீரென தோன்றலாம்.

அவ்வாறு பிரஸர் குறையும் போது கட்டாயம் மயக்கம்தான் வரும் என்றில்லை. சிலருக்கு மயக்கம் வராது. ஆனால் வருவது போல இருக்கும். அல்லது தலை உலாஞ்சலாகவோ தலைப்பாரமாகவோ வரலாம். இதற்குக் காரணம் இருக்கை நிலையிலிருந்து அல்லது கிடத்தல் நிலையிலிருந்து எழும் போது உடலானது மாறும் நிலைக்கு ஏற்ப பிரஷரை விரைவாக சரிப்படுத்த முடியாததாலேயே ஆகும். ஆயினும் இத்தகைய லோ பிரஷர் அதிக நேரம் நீடிக்காது. அவர் எழுந்து நின்ற பின்னர் ஒரு சில நொடிகளோ அல்லது நிமிடங்களோ மட்டுமே நீடிக்கும்.

நிலைசார்ந்த குறை இரத்த அழுத்தம் (Orthostatic Hypotension) என்பது எந்த வயதிலும் ஏற்படக் கூடியது என்றபோதும் வயதானவர்களிலேயே அதிகம் காணப்படுகிறது. அதிலும் முக்கியமாக நல்லாரோக்கியம் குறைந்தவர்களிடையேதான் அதிகம் ஏற்படுகிறது. பிரஸர் நீரிழிவு நோயாளிகளிடமும் ஏற்படுவது அதிகம்.

## இரத்த அழுத்தம் குறைவதற்கான சில காரணங்கள்

★ உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கும் இத்தகைய நிலைசார்ந்த குறை இரத்த அழுத்தம் அதிகம் வருவதுண்டு. அதற்கு ஒரு காரணம் அவர்கள் உபயோகிக்கும் மருந்துகளாகவும் இருக்கலாம். பொதுவாக இரத்த அழுத்தத்தைக் குறைப்பதற்கு உபயோகிக்கும் (Diuretics, Calcium channel blockers , Beta Blockers, Angiotensin-converting enzyme (ACE) inhibitors, Angiotensin II receptor blockers) போன்றவற்றை உபயோகிக்கும்போது அவதானமாக இருக்க வேண்டும்.

★ பார்க்கின்சன் நோய் உள்ளவர்களிடையேயும் இது அதிகம் இருப்பதுண்டு. வயதானவர்களில் ஏற்படும் மறதி, நடுக்கம், மூளை மங்குதல் போன்ற அறிகுறிகளுடன் தோன்றுவதே Parkinson's disease. உதாரணம் தந்தை செல்வா.

★ சில வயதானவர்களுக்கு சாப்பிட்ட பின்னரும் இந்நிலை ஏற்படுவதுண்டு. இதனை மருத்துவத்தில் Postprandial hypotension என்பர்.

★ இரத்தசோகை

★ இருதய வழுவல், மாரடைப்பு

★ தைரொயிட் நோய். முக்கியமாக குறைவாகச் சுரப்பது

★ நீரிழிவாளர்களுக்கு திடீரென இரத்த சீனி அளவு அளவுக்கதிமாகக் குறைவது

குறைவான இரத்த அழுத்தம் (லோ பிரஷர்)

சிலருக்கு இயல்பாகவே இரத்த அழுத்தம் குறைவாகவே இருக்கும். சாதாரண இரத்த அழுத்தம் என்றால் 120/80 என்று அர்த்தம். ஆனால் சிலருக்கு பிரஸர் எப்பொழுதும் 100/70 அளவிலேயே இருப்பதுண்டு. இதுவும் அவர்களுக்கு சாதாரணம்தான். ஆனால் அது 90/60 க்குக் குறைவாக இருந்தால் மட்டுமே லோ பிரஸர். இதனையே குறை இரத்த அழுத்தம் (Hypotension) என்று மருத்துவத்தில் சொல்வார்கள். ஆனால் அப்படி இருந்தால் கூட அவருக்கு எந்தவித அறிகுறியோ இடைஞ்சலோ பெரும்பாலும் இருப்பதில்லை. மருத்துவர் பார்த்துக் கூறினால்தான் பல நோயாளிகளுக்கே தெரியவரும்.

அதனைக் கவனத்தில் எடுக்க வேண்டியதில்லை. எனவே இவர்களை 'லோ பிரஸர்' நோயாளிகள் எனக் கூறவேண்டுமா? இவர்களுக்கென ஏதாவது மருந்துகள் சாப்பிட வேண்டுமா? பிரஸரை அதிகரிக்க ஏதாவது சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டுமா? நிச்சயமாக இல்லை. சிறிது காலத்திற்கு உப்பை அதிகமாக உட்கொள்வது உதவக் கூடும். சமபல வலுவுள்ள உணவுகளை ((Balanced Diet) உண்பது அவசியம்.

## நிலைசார்ந்த குறை இரத்த அழுத்தமுள்ளவர்கள் அவதானிக்க வேண்டியவை

★ படுத்திருந்து அல்லது உட்கார்ந்திருந்து எழுகையில் அவசரப்படக் கூடாது. எழுந்து நின்று தனக்கு தலைச்சுற்று, மயக்கம் போன்ற அறிகுறிகள் ஏதும் இல்லை என்பதை நிச்சயப்படுத்திய பின்னரே நடக்க முயல வேண்டும்.


★ போதிய நீராகாரம் தினசரி உட்கொள்ளுங்கள்.

★ மது வேண்டாம். அல்லது மிகக் குறைவாக.

★ மருந்துகள் காரணம் எனில் மருத்துவ ஆலோசனையுடன் அவற்றில் மாறுதல் செய்தல்.

★ கால்களுக்கு ஸ்டொகிங் அணிதல். கால்களில் இரத்தம்






தேங்காது மூளை இருதயம் ஆகியவற்றுக்கு அதிகம் பாய்வதற்கு இது உதவலாம்.

★ இரத்த அழுத்தத்தை அதிகரிக்கக் கூடிய மருந்துகள் உள்ளன. ஆயினும் இவை பெரும்பாலும் சிபார்சு செய்யப்படுவதில்லை. உதாரணங்கள் ephedrine, phenylephrine, fludrocortisone, beta blockers, and nonsteroidal anti-inflammatory medicines.

ஆயினும் ஒருவருக்கு பிரஸர் மிகவும் குறைந் திருந்தால் அல்லது திடீரெனக் குறைந்திருந்தால் அவ்வாறு பிரஸர் குறைந்ததற்கு ஏதாவது மருந்துக் காரணங்கள் உள்ளனவா என மருத்துவர் ஆராய்ந்து பார்க்கவே செய்வார். அவ்வாறு இருந்தால் அதனை நிவர்த்தி செய்வதற்கான ஆலோசனையை வழங் குவார்.

ஒரு உதாரணம். அண்மையில் என்னிடம் வந்த ஒரு நோயாளி "மிகவும் களைப்பாக இருக்கிறது. இயங்க முடியவில்லை. எழுந்து நடந்தால் தலையைச் சுற்றுகிறது" என்றார். அவரது கையைப் பற்றியபோது குளிர்ந்திருந்தது. நாடித்துடிப்பின் வேகம் குறைந்திருந்தது. பிரஸர் 80/60 மட்டுமே இருந்தது. ஈசிஜி எடுத்துப் பார்த்தபோது மாரடைப்பு என்பது உறுதியாயிற்று. ஆனால் அவர் மாரடைப்பின் முக்கிய அறிகுறிகளான நெஞ்சு வலி, அது கைகளுக்குப் பரவுவது, வியர்வை போன்ற எதையுமே கூறவில்லை என்பதைக் குறிப்பிடலாம். இவருக்கு இரத்த அழுத்தம் குறைந்ததற்குக் காரணம் மாரடைப்பே.

எனவே லோ பிரஸர் என்ற லேபிளை உங்களுக்கு நீங்களே மாட்டிக் கொண்டு துயரில் மூழ்கி மேலும் நோயை அதிகரிக்க வேண்டாம். மருத்துவ ஆலோசனையைப் பெறுங்கள். அது ஆபத்தற்றது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். மகிழ்வோடு வாழுங்கள்.

# தெரிந்து செய்த தவறு...

அறிந்து செய்த தவறுக்கு பிராயச்சித்தம் இல்லை. அந்தத் தவறை உணர்ந்து வருந்தினாலும் அதன் விளைவுகளை அனுபவிக்கவே வேண்டும். ஆனால் பிரார்த்தனையானது, அந்த வேதனைகளைத் தாங்கிக்கொள்ள நல்ல மனோதிடமும் சக்தியும் கொடுத்து, அந்த வேதனையானது பனிப்போல் மறைய உதவும்.

இதில் இறைவன் இறைவியானாலும் தப்புவதில்லை. அவர்கள் உலகத்துக்குப் புரியவைக்க நாடகமாகவும் இதை நடத்தியிருக்கலாம்.

ராமாயணத்தில் உத்தர காண்டத்தில் சீதை ஸ்ரீராமனை விட்டுத் தனியாக நாட்டை விட்டுப்போகும் சந்தர்ப்பமும் அவள் சிறுவயதில் தெரிந்து செய்த தவறால் நிகழ்ந்ததாம்.

இரண்டு கிளிகள் அமர்ந்து அழகாகப்பேசிக்கொண்டிருந்தன. அரண்மனை உப்பரிகையில் சீதை நின்று கொண்டிருந்தாள். அப்போது விஸ்வாமித்ர முனிவருடன் வாட்டசாட்டமாக அழகே உருவாக கமலக்கண்களையுடைய ஸ்ரீராமன் நடந்து வருகிறார். என்ன பேரழகு என்று தன் மனதில் நினைத்தபடி நந்தவனத்திற்கு வந்து அந்த நினைவிலேயே தன்னை மறக்கிறாள்.
கிளிகள் சும்மா இருந்ததா? அதுதான் இல்லை! தானும் ஸ்ரீராமனது அழகை வர்ணித்தபடி சீதையை மணக்கப்போகும் ஸ்ரீராமன் இவன் தான் என்று மேலும் பேசத்தொடங்கின. ஸ்ரீராமனின் அழகை அந்தப் பெண்கிளி வர்ணிப்பதைப் பார்த்த சீதை, அதைப்பிடித்து வந்து ஒரு கூட்டில் அடைத்து தான் மணக்கப்போகும் மணாளனின் அழகைத் தினம் தினம் கேட்டுக்கொண்டிருக்கலாமே.. என்று எண்ணி செயலிலும் காண்பித்தாள்.

ஆண்கிளி பறந்து வந்தது.

"என் அருமைத் தாயே... என் மனைவி கர்ப்பமாக இருக்கிறாள். இந்த நேரத்தில் கணவனாகிய நான் அவள் அருகில் இருப்பதுதான் நியாயம். அவள் முட்டை இட்டு குஞ்சுகள் பொரித்த பின் நானே அவளை தங்களிடம் சமர்ப்பிக்கிறேன். அதுவரை பொறுத்து, அவளைத் தயவுசெய்து கூட்டிலிருந்து வெளியில் விட்டுவிடுங்கள்" என்று கெஞ்சியது.


ஆனால் சீதைக்கு தன் மகிழ்ச்சியே அப்போது பெரிதாகப்பட்டது. ஸ்ரீராமனின் அழகைத் தினமும் கேட்கும் பாக்கியமல்லவா அது! அதனால் அந்த ஆண்கிளியின் வேண்டுகோளைக் கேட்காமல் விரட்டினாள். ஆண்கிளிக்குக் கோபம் வந்தது. பெண்கிளியின் பிரிவின் துயரைப் பொறுக்கமுடியாமல் மனம் வருந்தியது. பெண்கிளி தன் கணவனின் வேதனையைப் பார்த்து சகிக்க முடியாமல் சீதையை நோக்கி சாபம் இட்டது.

"தாயே நீங்களும், நான் எப்படி கணவனுடன் சேர முடியாமல் தவிக்கிறேனோ அதுவும் கர்ப்பிணியான நிலையில்... இதேபோல் நீங்களும் கர்ப்பமான நிலையில் கணவனைப் பிரிந்து தவிப்பீர்கள்"

இதைக் கேட்டும் சீதை மாறவில்லை. அவள் மனம் முழுவதும் ஸ்ரீராமனே ஆக்கிரமித்துக்கொண்டிருந்ததால் இதைப் பொருட்படுத்தவில்லை. பின் வண்ணான் வண்ணாத்தி எழுப்பிய சந்தேகத்தினால் சீதைக்கு ராமரை விட்டுப் பிரியும்நேரம் வந்து நாட்டைவிட்டு சென்ற நேரத்தில், அவள் கர்ப்பிணியாக இருந்தாள். கணவனைப் பிரிந்து வேதனை அடைந்தாள். பெண்கிளியின் சாபம் பலித்தது.

அறிவியல் ரவுண்டப்

## வெண்டிக்காயின் மருத்துவக் குணம்




பொதுவாக கொழுப்புச் சத்து குறைந்த விட்டமின் சத்துக்கள், தாதுக்கள் நிறைந்தவைதான் காய்கறிகள். இவைகளை சமைத்து உண்பதால் உடலுக்கு வலு கிடைக்கும். இவை எளிதில் ஜீரணமாகும். மலச்சிக்கலைப் போக்கி நீண்ட ஆயுளைக் கொடுக்கும். நாள் பட்ட கழிச்சல், பெருங்கழிச்சல், குருதிக் கழிச்சல் என்பவற்றை நிவர்த்தி செய்யும். நல்லசுவையைக் கொடுக்கும். மனிதனுக்கு நினைவாற்றல் அவசியத் தேவையாகும். ஞாபக சக்தியை இழப்பது மனிதனுக்கு நோய் போன்றது. ஞாபக சக்தியை தூண்ட வெண்டைக்காயை சமையல் செய்து அடிக்கடி சாப்பிட வேண்டும். இது மூளை நரம்புகளைத் தூண்டி அங்கு சுரக்கும் நாளமில்லாச் சுரப்பியை நன்கு சுரக்கச் செய்யும். இது இரத்தத்தை சுத்தமடையச் செய்து அதனைச் சீராக செயல்படச் செய்கிறது. இரத்தத்தில் கலந்துள்ள கொழுப்புப் பொருட்களைக் கரைக்கிறது. இரத்த அழுத்தத்தைப் போக்கி -இதய அடைப்புகளைத் தடுக்கிறது. சிறுநீரக கோளாறுகளைப் போக்குகிறது. வயிற்றுக் கடுப்புடன் இரத்தம் வெளியேறுவதை தடுக்கிறது.

## அஸ்பிரின் மாத்திரையால் புற்றுநோய் நிவாரணம்



மனிதர்களுக்கு 40 வயதை கடந்துவிட்டால், கொடிய நோய்கள் அழையா விருந்தாளிகளாக உடலில் புகுந்து விடுகின்றன. இதில் புற்றுநோய் மற்றும் இருதய நோய்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த நிலையில், 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் தினமும் 75 மி.கி. அஸ்பிரின் வலி நிவாரண மாத்திரை எடுத்துக் கொண்டால் புற்றுநோய், இருதய நோய் பாதிப்புகளிலிருந்து தற்காத்துக் கொள்ள முடியும் என பிரிட்டன் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## உடலை இளைக்க வைக்கும் தண்ணீர்



உடலை இளைக்க வைப்பது முதல் புற்றுநோய் பாதிப்பைக் குறைப்பது வரையான மகத்தான குணங்கள் தண்ணீருக்கு உண்டு. உணவு சாப்பிடும்போது மட்டும் தண்ணீர் குடிப்பது போதாது. தண்ணீர் குடிப்பதை பழக்கப்படுத்த வேண்டும். தண்ணீர் தொடர்பான பழங்கள், காய்கறிகளை அதிகம் உணவோடு சேர்க்க வேண்டும். என்ன தான் உடற்பயிற்சி செய்தாலும், மருந்துகள் சாப்பிட்டாலும், உடல் எடை குறையாது. ஆனால், தொடர்ந்து தண்ணீர் குடித்து வந்தால், ஒரு மாதத்திலேயே விளைவு தெரிந்து விடும். அதேவளை இது புற்றுநோய்ப் பாதிப்பைக் குறைக்கும் தன்மையையும் கொண்டுள்ளது. ஒரு நாளைக்கு எட்டு முதல் பத்து டம்ளர் வரை தண்ணீர் குடிப்பது சிறந்தது.

## சூரியனுக்கு இன்னும் 500 கோடி வயது தான்



பூமியில் உள்ள உயிர்களை வாழவைத்துக் கொண்டிருக்கும் சூரியன், இன்னும் 500 கோடி ஆண்டுகளில் தனது ஆயுளை முடித்துக் கொள்ளும் என்றும், அதேகாலகட்டத்தில், பூமியின் வாழ்நாளும் முடிவுக்கு வரும் என்று தற்போதைய புதிய ஆய்வு குறிப்பிடுகின்றது. தற்போது நமது சூரியனுக்கு 457 கோடி வயது ஆகிறது. நடுத்தர வயதுள்ள நட்சத்திரமாக சூரியன் திகழ்கின்றது. இன்னும் 500 கோடி ஆண்டுகளில் சூரியனின் ஆயுட்காலம் முடிந்து விடும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அந்த கால கட்டத்தில், சூரியனில் உள்ள வாயுகள் தீர்ந்து போய், அதன் வெளிப்புறம் சிவப்பாக, அச்சப்படுத்தும் வகையில் காட்சியளிக்கும். இறுதியாக விண்மீன் படலமாக மாறி விடும். அந்த நேரத்தில் பூமியின் விதியும் முடிந்து விடும் என்று கருதப்படுகிறது. ஆனால், சூரியன் மறைந்தாலும் பூமியில் வாழ முடியும் என்ற சூழ்நிலை அப்போது உருவாகலாம் என்றும் சில விஞ்ஞானிகள் கூறுகின்றனர்

## வானம் ஏன் நீல நிறமாக தெரிகின்றது?



நிற ஒளியானது வாயுத் துணிக்கைகளால் உறிஞ்சப்படுகிறது. உறிஞ்சிய துணிக்கைகள் அதை கதிர்க்கின்றன. அவை தெறிப்பு அடைந்து நீல நிறமாக வானம் தோன்றுகிறது. ஒளி காற்று மண்டலத்தில் இடையூறில்லாமல் பயணம் செய்தாலும் காற்றிலுள்ள அணு மூலக் கூறுகள், நீர்த்துளிகள், பனிமூட்டம் போன்றவை ஒளியைச் சிதறடிக்கின்றன. சிதறிய ஒளி மேலும் மேலும் சிதறடிக்கப்படுகிறது. இவ்வாறு நடைபெறும் போது மிக அதிகத்துடிப்புடைய நீல நிறம் மிக அதிகமாக சிதறடிக்கப்படுகிறது. நாம் பார்க்கும்போது அவ் ஒளி அலைகள் கண்ணை வந்தடைகின்றன. அதனாலேயே பகலில் வானம் நீல நிறமாக இருப்பது போல தோன்றுகிறது.

## குழந்தைகளின் ஆரோக்கியம்



விளையாடும் பழக்கம் குாந்தைகளுக்கு இன்றியமையாதது. விளையாட்டுக்கு பள்ளிகளில் முக்கியத்துவம் தரப்படுவதில்லை. எனவே பெற்றோர்கள் தான் இதற்கு ஊக்கமளிக்க வேண்டும். தினமும் ஒரு மணி நேரமாவது, ஓடி ஆடி விளையாடுவது, சைக்கிள் ஓட்டுவது ஆகியவை ஆரோக்கியத்துக்கு வழி வகுக்கும். மில்க் பிஸ்கட்டுகள், கிரீம் பிஸ்கட்டுகள், நொறுக்குத் தீனிகள், காற்றூட்டப்பட்ட குளிர்பானங்கள் ஆகியவை சத்தே இல்லாமல், வயிற்றை நிரப்புபவை. உணவைச் சாப்பிடாமல், இந்த நொறுக்குத் தீனிகளை தின்று, வயிற்றை நிரப்பி, டிவி முன் அமர்வது நல்லதல்ல. இதனால் உடல் ஊதிப் போய்விடும். எப்போதாவது நொறுக்குத் தீனி சாப்பிடுவது நல்லது தான். ஆனால், பிரதான உணவுக்கு அது ஈடாகாது.

நம்மில் பெரும்பாலோர் மற்றவர்களின் விருப்பங்களில் அடிக்கடி தலையிடுவதன் மூலமே தமக்குத் தாமே பிரச்சினைகளை உருவாக்கிக் கொள்கின்றனர். உதவி கேட்கப்படாமல் மற்றவர்களின் விஷயங்களில் தலையிடாதீர்கள். உங்கள் வேலையில் மட்டும் கவனம் செலுத்துங்கள். அதன் மூலம் உங்கள் மனதை அமைதியாக வையுங்கள்!



# சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு-2011



**இம்மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு தொடர்பாக பல்வேறு வாதப்பிரதிவாதங்களும் கருத்தாடல்களும் தொடர்ச்சியாக வெளிவந்தவண்ணமுள்ளன. இந்த மாநாடு பற்றியும் இதன் முக்கியத்துவம் பற்றியும் மாநாட்டின் ஏற்பாட்டுக்குழுச் செயலாளர் அஷ்ரப் சிஹாப்தீன் அனுப்பிவைத்த கட்டுரையை இங்கே தேவை கருதி பிரசுரிக்கின்றோம்.**

சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு திட்டமிட்டபடி 2011 ஜனவரி 6ம் திகதி முதல் 9ம் திகதி வரை நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. மாநாடு நடைபெறும் நான்கு தினங்களும் கொழும்பு உருத்திரா மாவத்தையில் உள்ள தமிழ்ச் சங்கம் பேராளர்களாலும் பார்வையாளர்களாலும் நிரம்பி வழியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் இலக்கியம் உலகளாவிய ரீதியில் மிகவும் பரந்து சென்றிருக்கிறது. இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்த பலர் இன்று தமிழ் இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்கள். கடந்த கால் நூற்றாண்டாக இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் பின்னணியில் வீரியமான தமிழ் இலக்கியம் படைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் போர்ச்சூழலின் அவலத்தில் பல படைப்பாளிகள் வெவ்வேறு திசைகளில் இடம்பெயர்ந்து சோர்ந்து வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் அனைவருடனும் ஏனைய நாடுகளின் எழுத்தாளர்களையும் ஒன்றிணைப்பதன் மூலம் ஒற்றுமைப்பட்ட தமிழ் இலக்கிய எழுச்சியை ஏற்படுத்த முடியும்.

வெவ்வேறு கொள்கைகள், போக்குகள், அரசியல் பின்னணிகளுடன் மாத்திரமன்றி நமது படைப்பாளிகள் தனித் தீவாகவும் இயங்கி வருகிறார்கள். எல்லா வேறுபாடுகளையும் மறந்து அனைவரையும் இணைக்கும் பாலமாக ஆகக் குறைந்தது ஒருவருக்கொருவர் சந்தித்து மனந் திறந்து உரையாடுவதற்கான ஒரு களமாகவும் இம்மாநாடு அமையும். தங்களது நூல்களையும் அனுபவங்களையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலமும் ஒன்றிணைந்து தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உழைப்பதற்கும் இம்மாநாடு வழிவகுக்கும்.

இந்த நன்னோக்குடன்தான் சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியிலான தமிழ் படைப்பாளிகளை ஒன்றிணைக்கும் ஓர் உறவுப் பாலமாக இயங்க ஆரம்பித்திருக்கும் இவ்வமைப்பின் முதலாவது முயற்சியே இந்த சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் மாநாடாகும். இந்த மாநாட்டின் அனுபவங்களைக் கொண்டு எதிர்வரும் காலங்களில் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தி இயங்கவும் இவ்வமைப்புத் தீர்மானித்துள்ளது.

பதினொரு ஆய்வரங்குகள் இதுவரை திட்டமிடப்பட்டுள்ளன. கணனி, வலைப்பதிவு, ஆவணப்படுத்தல், ஈழத்துத் தமிழ் இலக்கியம், சிறுவர் இலக்கியம், மொழிபெயர்ப்பு, சிற்றிதழ், மகளிர், உலகத் தமிழ் இலக்கியம், செவ்விதாக்கம், நிகழ்த்து கலைகள், பல்துறை ஆகிய தலைப்புக்களில் இவ்வரங்குகளை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு அரங்கிலும் நான்கு முதல் ஆறு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படும். இதற்கு மேலதிகமாக சில அரங்குகளில் பட விளக்கங்களும் தரப்படவுள்ளன. காலை 8.30க்கு ஆரம்பமாகும் ஆய்வரங்குகள் பி.ப. 1.30 வரை நடைபெறவுள்ளன. ஒவ்வொரு ஆய்வரங்கிலும் எழுத்தாளர்களதும் (விசேட அதிதிகளதும் சிறப்புரைகள் இடம்பெறவுள்ளன. ஆய்வுக் கட்டுரைகள் படித்து முடிக்கப்பட்டதும் பார்வையாளர்களின் வினாக்களுக்கு கட்டுரையாளர்கள் பதிலளிப்பார்கள்.) படைப்பாளிகள், படிப்பாளிகள், புத்திஜீவிகள் ஆகியோரின் கலந்துரையாடல்களும் இடம்பெறும்.

இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், நோர்வே, பிரிட்டன், கனடா, சுவீடன், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, டென்மார்க், சுவிஸ் ஆகிய நாடுகளிலிருந்து எழுத்தாளர்களும், புத்தி ஜீவிகளும், இலக்கிய ஆர்வலர்களும் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கின்றனர். இவர்களுள் நானூறு பேர் அளவில் பேராளர்களாகப் பங்கு கொள்ளவிருக்கின்றனர். வெளிநாட்டிலிருந்து வரும் பேராளர்களுக்குத் தங்குமிட வசதிகளும், தங்குமிடத்திலிருந்தும் விமான நிலையத்திலிருந்தும் மாநாடு நடைபெறும் மண்டபத்துக்கு அழைத்துவருவதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மாலை 5.00 மணியிலிருந்து இரவு 8.00 மணி வரை கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. நாடகங்கள், நாட்டுக் கூத்துகள், நாட்டியங்கள், இசைக் கச்சேரி ஆகியவற்றுடன் சிறப்புப் பேச்சாளர்களின் உரைகளும் இடம்பெறும். 9ம் திகதி மாலை இறுதிநாள் விழா வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறும்.

மாநாட்டையொட்டிக் கனதியான ஒரு சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப்படும். சிறப்புக் கட்டுரைகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்ட காத்திரமான ஒரு ஆவணமாகவும் மாநாட்டைக் காலங் காலமாக நினைவுபடுத்தும் ஒரு நினைவேடாகவும் இது இருக்கும்.

## மாநாட்டின் நோக்கங்கள்

1. தமிழ் இலக்கியம் சர்வதேச ரீதியாகக் கவனிப்புக்குள்ளாகியிருப்பதால் தமிழ் இலக்கியப் படைப்புகளில் செவ்விதாக்கம் செய்யும் கலையை வளர்த்தெடுப்பது.

2. தமிழ் இலக்கியப் படைப்புகளை பிற மொழிகளில் மொழி பெயர்க்கும் பணிகளை ஊக்குவிப்பதற்காக இத்துறைகளில் ஈடுபடுபவர்களுடன் தொடர்புகளைப் பேணி வளர்த்து மொழிபெயர்க்கப்படும் தமிழ்ப் படைப்புகளைச் சர்வதேச ரீதியாக அறிமுகப்படுத்தல்.

3. தமிழ் இலக்கியப்படைப்புகளை (நூல்கள், இதழ்கள்) ஆவணப்படுத்துவது தொடர்பாக இது குறித்த சிந்தனை கொண்டவர்களுடன் தொடர்ந்து இயங்குவது.

4. இலங்கையில் இயற்கை அனர்த்தம், யுத்தம், விபத்து ஆகியவற்றால் பாதிப்புற்ற தமிழ் எழுத்தாளர்களின் குடும்பத்தினருக்கு உதவுவதற்காக ஒரு நம்பிக்கை நிதியத்தை (Trust fund) உருவாக்குவது.

5. தொடர்ச்சியாக இலங்கையில் வெளியாகும் கலை இலக்கியச் சிற்றேடுகளுக்கு அரச மானியம் (Grant) பெற்றுக் கொடுப்பது தொடர்பாக ஆராய்ந்து மானியம் பெற்றுக்கொடுக்க முயற்சிப்பது.

6. தமிழ் மக்களிடம் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கான பணிகளை முன்னெடுப்பது தொடர்பான ஆலோசனைகளைப் பெறுதல்.

7. நடத்தப்படவிருக்கும் சர்வதேச எழுத்தாளர் விழாவில் கலை இலக்கியத்துறையில் வாழ்நாள் சாதனையாளர்களைப் பாராட்டிக் கௌரவித்தல்.

8. தமிழ் எழுத்தாளர்கள், இலக்கிய மொழி பெயர்ப்பாளர்கள், பத்திரிகை இதழாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், ஓவியர்கள் மத்தியில் கருத்துப் பரிவர்த்தனைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்காக உறவுப் பாலத்தை ஆரோக்கியமாக உருவாக்கல்.

9. நாடகம், நடனம், நாட்டுக்கூத்து, இசை, நாடகம் மற்றும் பாரம்பரியக் கிராமியக் கலைகளைப் பற்றிய கருத்தரங்குகள், பயிலரங்குகளை ஒழுங்குசெய்தல்.

10. இலங்கையிலும் சர்வதேச ரீதியாகவும் இலக்கியத்துறையில் ஈடுபடும் இளம் தலைமுறைப் படைப்பாளிகளின் பங்களிப்புகளுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களை ஊக்குவித்தல்.

11. குறும்படம் தொடர்பான பிரக்ஞையைத் தமிழ் மக்கள் மத்தியில் வளர்த்து தேர்ந்த சினிமா ரசனையை வளர்த்தல்.

12. கணனித்துறை சார்ந்த முயற்சிகள், ஒளிப்படக்கலை, Graphics முதலான துறைகளில் ஈடுபடும் இளம் தலைமுறையினருக்கும் இலக்கியப் படைப்பாளிகளுக்கும் மத்தியில் உறவுகளை ஏற்படுத்தும் விதமான காட்சிப்படுத்தும் (Demonstration) கருத்தரங்கு அமர்வுகளை நடத்துதல்.

**அஷ்ரஃப் சிஹாப்தீன்,**
**மாநாடு ஏற்பாட்டுக் குழுச் செயலாளர்**



"...பொதுவாக பெரும்பாலான தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் சமூக. அரசியல் பிரச்சினைகளில் அக்கறையற்றவர்கள். அப்படி அரசியல் ரீதியான அக்கறை கொண்ட எழுத்தாளர்களில் பெரும்பாலானோர் இலக்கிய ஈடுபாடு இல்லாதவர்கள். 'இலக்கிய ஈடுபாடு இல்லாமல் எப்படி எழுத்தாளராக...?' என்றெல்லாம் கேட்காதீர்கள். உதாரணங்கள் சொன்னால் பெரிய வருத்தம் வந்துசேரும். அபூர்வமான சில விதிவிலக்குகள் தவிர. சாதாரணமாக தமிழ் பொதுமக்களுக்கு இருக்கக்கூடிய பொது விவகாரம் சார்ந்த அக்கறைகள் எதுவும் பெரும்பாலான தமிழ் எழுத்தாளர்களுக்குக் கிடையாது என்பதே உண்மை. அவர்கள் தீவிரமாக எதிர்வினையாற்றக் கூடிய ஒரு விஷயம், அவர்களது சக எழுத்தாளர்கள் மட்டுமே. எனினும் இதை நான் ஒரு குற்றச்சாட்டாக வைக்க மாட்டேன். அது ஒரு தனிமனித தேர்வு. அவ்வளவுதான். எழுத்தாளனின் குரலுக்கு எந்த சமூக மதிப்பும் இல்லாத ஒரு சமூகத்தில் அவன் பேசுவதும் பேசாமல் இருப்பதும் ஒன்றுதான். எந்த சமூக நெருக்கடி குறித்தும் ஒரு தமிழ் எழுத்தாளரோ கவிஞரோ என்ன கருதுகிறார் என்ற கேள்வி எனக்கு ஒருபோதும் எழுந்ததில்லை. அதுபோகட்டும். இதற்கெல்லாம் மாறாக பெரும்பாலான தமிழ் எழுத்தாளர்கள் மிகவும் உணர்வுபூர்வமாக எதிர்வினையாற்றிய ஒரு அரசியல், சமூக நிகழ்வு இருக்குமெனில் அது இலங்கைத் தமிழர் 'பிரச்சினைதான்..."

நன்றி : மனுஷ்ய புத்திரன் பக்கங்களிலிருந்து...

# ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க முஸ்லிம் அரசியல் தலைமைகள் தயங்குவது ஏன்?

எம். சஹாப்தீன்

2002ஆம் ஆண்டு முதல் 2009 ஜூன் மாதம் வரையிலான காலப்பகுதியில் நடைபெற்ற சம்பவங்களை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கற்றுக் கொண்ட பாடங்களும், அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றினை நியமித்ததற்கு அமைவாக.

இவ்வாணைக்குழு நாட்டின் பல பாகங்களுக்கும் நேரடியாக சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாணைக் குழுவின் விசாரணைக்காக விதிக்கப்பட்டுள்ள கால எல்லையினை கருத்திற் கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தியை வெளியிட்டதுடன் அதன் முன் சாட்சியமளிப்பதுமில்லை எனவும் அறிவித்தமை யாவரும் அறிந்ததே.

இதேவேளை மற்றைய முஸ்லிம் கட்சிகள் இவ்வாணைக்குழு பற்றி எந்தவொரு சாதக பாதகக் கருத்துக்களையும் வெளியிடவில்லை. 2002ஆம் ஆண்டு முதல் 2009 ஜூன் என்ற கால எல்லை இலங்கையின் அரசியல் பிணக்குகளின் வரலாற்றில் மிகக் குறுகியதொன்றாகும். அதன் அடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸின் அதிருப்தியானது நியாயமானதாகும்.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் முஸ்லிம்கள் என்றுமில்லாத அளவிற்கு நெருக்கடிகளை அனுபவித்தார்கள். உயிர்களையும், உடமைகளையும் இழந்து அகதி முகாம்களில் அடைக்கலம் தேடினார்கள் என்ற போதிலும் கற்றுக் கொண்ட பாடங்களும், அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழு விடயத்தில் முஸ்லிம் அரசியற் தலைமைகளும், அரசியற் கட்சிகளும், அமைப்புக்களும் மேலதிக கவனத்தைச் செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் முஸ்லிம் சமூகத்தின் நலன்விரும்பிகளால் முன்வைக்கப்படுகின்றன.

ஆணைக்குழுவானது குறிப்பிட்ட கால எல்லைக்குள் நடைபெற்ற சம்பவங்களை மட்டும் தான் விசாரணை செய்யும் அவற்றையே ஆவணமாக வாங்கிக் கொள்ளும் என்ற எண்ணப்பாடு முஸ்லிம்களிடம் காணப்பட்ட போதிலும் இந்த ஆணைக்குழுவானது 2002ஆம் ஆண்டிற்கு முதலுள்ள விடயங்களையும் சாட்சியமளிப்பவர்களிடம் இருந்து கேட்டுக் கொண்டிருக்கின்றது.

அது மட்டுமல்லாது ஆணைக்குழுவினரும் 2002ஆம் ஆண்டிற்கு முதல் இடம்பெற்ற சம்பவங்களையும் கேட்டு அறிந்து கொள்கின்றனர். உதாரணத்துக்கு கிழக்கு மாகாண முதல் அமைச்சரிடம் 1990ஆம் ஆண்டு பொலிஸார் நிராயுதபாணியாக்கப்பட்டு விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டதற்கு மன்னிப்பு கேட்பீர்களா என்ற கருத்தில் கேள்வி கேட்டதனை கூறலாம்.

ஆதலால் முஸ்லிம் அரசியற் கட்சிகளும், அமைப்புக்களும், அரசியற் தலைமைகளும் ஆணைக்குழுவின் முன்னால் சாட்சியமளித்தல் வேண்டும். இவ்வாணைக்குழுவின் முன் முஸ்லிம்களின் பிரச்சினைகள் முறையாக முன்வைக்கப்படவில்லை. முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப், எம்.ஐ.எம். கைதீன் யாகிட் யூசுப் சவூதிக்கான இலங்கை முன்னாள் தூதுவர் கொழும்பு சாஹிரா கல்லூரியின் முன்னாள் அதிபர் சுபியான் மௌலவி கலாநிதி பர்ஸானா ஹனீபா போன்ற ஒரு சிலரே ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்துள்ளார்கள். இவர்களின் சாட்சியங்கள் முஸ்லிம்களின் முழுமையான பிரச்சினைகளை பிரதிபலிப்பதற்கு போதுமானவையல்ல.

ஆயினும் இவர்களின் சாட்சியங்கள் முஸ்லிம்களுக்கும் பிரச்சினைகளுண்டு என்பதனை ஆணைக்குழுவினருக்கு விளங்க வைத்துள்ளன. 2002ஆம் ஆண்டின் பின்னரும் முஸ்லிம்கள் நாட்டின் பல இடங்களில் ஆயுததாரிகளினாலும் சீருடையினராலும் தாக்கப்பட்டுள்ளார்கள். கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

மூதூரிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை அதன் போது உயிர் இழப்புக்கள் ஏற்பட்டமை, பொத்துவில் இறத்தல் குளத்திற்கு அருகில் 10 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டமை, வாழைச்சேனையில் ஏற்படுத்தப்பட்ட மோதல்களின் போது முஸ்லிம்களின் சொத்துக்களும், உயிர்களும் இழக்கப்பட்டமை, அக்கரைப்பற்று வட்டமடு வயற் பகுதியில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டமை, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் பூர்வீகக்காணிகள் திட்டமிட்டபடி பறிமுதல் செய்யப்பட்டமை என 2002ஆம் ஆண்டின் பின்னர் முஸ்லிம்கள் எதிர்கொண்ட நெருக்கடிகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இவ்வளவு பிரச்சினைகளை முஸ்லிம்கள் 2002ஆம் ஆண்டிலிருந்து அனுபவித்துள்ளார்கள். இவற்றையெல்லாம் பற்றிக் கற்றுக்கொண்ட பாடங்களும், அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் எடுத்துக் கூற முடியும். இதனைச் செய்வதற்கு முஸ்லிம்களிடம் காணப்படும் அரசியற் கட்சிகளும் அமைப்புக்களும் முயற்சிகளை எடுக்காது இருக்கின்றன.

பிசாசுகளின் கூட்டம் நடைபெற்றாலும் அங்கும் முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதி இருக்க வேண்டுமென்று மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் கூறி இருந்தார். இக் கூற்றை ஏற்றுக் கொண்டவர்கள் தான் இன்றுள்ள முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் முக்கியஸ்தர்கள். எனினும் இக் கட்சிகளின் சார்பாக எவரும் ஆணைக்குழுவின் முன்

சாட்சியமளிக்கவில்லை. ஏன்?

மேடைகளில் முஸ்லிம் சமூகத்தின் மீதுள்ள அக்கறையை வாய் கிழிய கத்துவதனால் முஸ்லிம் சமூகம் தலை நிமிர்ந்து விடாது. அவர்களின் பிரச்சினைகளை உரிய இடத்தில் தெரிவிக்க வேண்டும்.

அத்தகையதொரு சந்தர்ப்பம் கற்றுக் கொண்ட பாடங்களும், அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் மூலமாக கிடைக்கப் பெற்றிருக்கும் வேளையில் முஸ்லிம்களின் வாக்குகளினால் தெரிவான அரசியற் தலைமைகளும் மற்றவர்களும் அதனைப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருப்பது எதற்காக? இதுதான் அவர்களின் முஸ்லிம் சமூகத்தின் மீதுள்ள பற்றுதலாகும் என்று எண்ண வேண்டியுள்ளது.

ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கும் போது சரியான புள்ளி விவரங்களின் அடிப்படையில் கருத்துக்களை முன்வைத்தல் வேண்டும். இது மிகவும் கடினமான பணியாகும். இந்தக் கடின பணிக்கு எந்தவொரு முஸ்லிம் அரசியல் தலைமைகளும் அவர்கள் சார்ந்த கட்சிகளும் தயாரற்றவையாக உள்ளன.

முஸ்லிம்களைப் பற்றிய சரியானதொரு புள்ளிவிவரங்கள் இல்லாத நிலையில் இக் கட்சிகள் இருப்பதனால்தான் ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிப்பதற்கு தயங்குகின்றன. இதேவேளை ஆணைக்குழுவினர் முஸ்லிம் அரசியற் தலைவர் ஒருவருக்குச் சாட்சியமளிக்கும்படி அழைப்பு விடுத்ததாகவும் அதனை அவர் நிராகரித்துவிட்டதாகவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

கற்றுக் கொண்ட பாடங்களும், அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டாலும் தீர்வுகளை பெற்றுத்தராது. அதனால் சாட்சியமளிக்க வேண்டியதில்லை என்று கூறும் அரசியற் தலைமைகளும் உள்ளன. தீர்வு கிடைக்குமா? இல்லையா? என்பதற்கு முன்னதாக தீர்வைத் தரவேண்டுமென்பதற்காக கருத்துக்கள் முன்வைக்கப்பட வேண்டும். அதுவே சிறந்தது.

மேலும் எதனையும் பேசாது இருப்பதனால் முஸ்லிம்களுக்கு பிரச்சினைகள் இல்லையென்ற அர்த்தத்தைக் கொடுத்து விடும். அத்தோடு எதிர்பாராத விதமாக தீர்வு முன்வைக்கப்படும் பட்சத்தில் முஸ்லிம்களுக்கு தீர்வு கிட்டாது போகலாம். அதற்கான காரணமாக முஸ்லிம்கள் தமது பிரச்சினைகள் பற்றி ஆணைக்குழுவிடம் கூறவில்லை. ஆதலால் அவர்களுக்கு பிரச்சினைகளுமில்லை என முஸ்லிம்களை புறக்கணிக்கவும் செய்யலாம். இத்தகைய கைங்கரியத்தினை செய்த பெருமை முஸ்லிம் அரசியற் தலைமைகளையே வந்து சேரும் என்பதையும் கவனிக்க வேண்டும்.

இதேவேளை பள்ளிவாசல்களின் தலைமைகள் உலமா சபைகளின் தலைமைகள் போன்ற சமூகத்தின் மத்தியில் மிக்க மதிப்புடைய அமைப்புக்களின் தலைமைகளும் முஸ்லிம்கள் மீது கரிசனை கொள்ளும் நிலை ஏற்பட வேண்டும். இவை களும் முஸ்லிம்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கு ஆணைக்குழுவின் முன்னால் தோன்ற வேண்டும். இவ் அமைப்புக்கள் சீராக்கப்பட வேண்டும். அரசியல்வாதி களை வழிப்படுத்துபவர்களாக திகழ வேண்டும். முஸ்லிம் அரசியல் தலைமைகளும் கட்சிகளும் அமைப் புக்களும் கற்றுக் கொண்ட பாடங்களும், அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் முஸ்லிம் பிரச்சினைகளை எடுத்துக்கூற முன்வருதல் வேண்டும். இதன் விசாரணைக் காலம் இன்னும் ஆறமாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் அம்பாறை திருமலை மாவட்டங்களுக்கும் இவ்வாணைக்குழு வருகை தரவுள்ளது.

ஆதலால் நடந்தவைகள் போக நடக்க இருப்பவைகள் நல்லதாக நடக்க வேண்டும். அதற்கான திட்டங்களை முஸ்லிம்கள் வகுக்க வேண்டும்.

காத்திரமான அமைப்புக்கள் உள்ள சமூகத்தில்தான் நல்லவைகள் நடைபெறும் என்பதனை முஸ்லிம்களின் சிந்தனைகளுக்கு விடுகின்றோம்.
















# அனைத்து மொழிகளுடன் அதிக விளக்கம் தரும் புதுமையான டிக்ஷனரி

**பொ**துவாக டிக்ஸ்னரி என்று எடுத்துக்கொண்டால் ஆங்கில வார்த்தைக்கு இணையான தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம் என்று தனித்தனியாக டிக்ஷனரி கிடைக்கும். ஆனால் ஒரு ஆங்கில வார்த்தைக்கு 67 மொழிகளில் துறைவாரியாகவும் தனித்தனியாகவும் அர்த்தம் தெரிந்து கொள்ளும் டிக்ஷனரி ஒன்று உள்ளது.


இணையதள முகவரி : http://dicts.info

Dicts.info
Free dictionaries project


ஆங்கில வார்த்தைக்கு எந்த மொழியில் அர்த்தம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை மட்டும் தேர்ந்தெடுத்துக்கொண்டு Search என்ற பொத்தானை அழுத்தினால் போதும். உடனடியாக நமக்கு விளக்கம் கிடைத்துவிடும். அதுவும் விளக்கமாக அந்த வார்த்தையுடன் இணைந்த பல வார்த்தைகளையும் சேர்த்தே தேடுதல் முடிவு கிடைக்கிறது. முகப்பு பக்கத்தில் எந்த துறை சம்பந்தமாக தேட விரும்புகிறோமோ அதை தேர்ந்தெடுத்துக்கொள்ளும் வசதியும் இருக்கிறது. அனைத்து தரப்பு மக்களும் இந்த டிக்ஷனரியைப் பயன்படுத்தும் வண்ணம் எளிமையாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும்.




## SMS JOKES!



உலக sms வரலாற்றில்
முதன் முறையாக
Inbox க்கு வந்து சில
நிமிடங்களேயான
புத்தம் புதிய mega Hit
கொமடி Message
Vijay is trying for



A student:
Bike இருந்தா ஓட்டத் தோனுது..
TV இருந்தா பார்க்கத் தோனுது..
Lover இருந்தா பேசத் தோனுது..
ஆனா Book இருந்தால் மட்டும் ஏன் படிக்கத் தோனுதில்ல...!!

# உலகத்தின் தலைசிறந்த ஆவணக் குறும்படங்களை இலவசமாகப்பார்க்கலாம்

படம் எடுக்க வேண்டும் என்ற ஆசை உள்ளவர்கள் மட்டுமல்ல. தன் எண்ணத்தை பதிவு செய்ய வேண்டும் என்ற கொள்கை உள்ளவர்கள்கூட முதலில் நாடுவது இந்த ஆவணக் குறும்படங்களைத் தான். அழகான கதை அம்சம், குறுகிய நேரம், பெரும் பொருட் செலவில்லை, பிரபல நடிகர்கள் தேவையில்லை என எந்த பெரிய எதிர்பார்ப்பும் இல்லாமல் உருவாக்கப் படும் இந்த ஆவண குறும்படங்களை நாம் ஒரே இடத்தில் இருந்து பார்க்கலாம். இதற்கு உதவுவதற் காக ஒரு தளம் உள்ளது.

இணையதள முகவரி : http://topdocumentary films.com







இது ஆவண குறும்படங்களில் சிறந்தவையாக உள்ள திரைப்படங்களை பட்டியலிடுகிறது. அதுவும் துறை வாரியாக அக்சன், கொமெடி, விளையாட்டு, அரசியல், அறிவியல், டெக்னொலஜி, பொழுது போக்கு என பல துறைகளில் இவற்றைத் தேர்ந் தெடுத்துப்பார்க்கலாம்.

நமக்கு பிடித்த திரைப்படத்திற்கு பின்னோட்டத்தையும் சமர்ப்பிக்கலாம். வேலைப் பழுவுக்கு இடையில் கிடைக்கும் நேரத்தில் இது போன்ற குறும்படங்கள் நமக்கு மனதளவில் சிறிய ஓய்வு அளிக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

## குரோம் நீட்சி

நமக்குத் தேவையான சில இணைய பக்கங்களை Screen shot எடுக்க சில மென்பொருளோ அல்லது நம்முடைய கீபோர்டில் உள்ள Screenshot வசதியின் மூலமோ நாம் பயன்படுத்துகிறோம். அந்த வரிசையில் மிகவும் எளிமையான, மிகவும் பயனுள்ள குரோம் நீட்சியை கூகுள் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இந்த படத்தில் உள்ள அனைத்து வேலைகளையும் இந்த நீட்சியின் மூலம் சுலபமாக செய்யலாம்.
இந்த நீட்சியை டவுன்லோட் செய்ய இந்தத் தளத்திற்குச் செல்லவும்.

https://chrome.google.com/extensions/detail/cpngackimfmofbokmjmljamhdncknpmg



# கணிதம் கற்றுக் கொள்ள மென்பொருள்

கணித பாடம் மட்டும் சில குழந்தைகளுக்கு அவ்வளவு சீக்கிரத்தில் பிடிபடாது? இதற்கு காரணம் என்னவென்றால் மன திண்மை இல்லாததே. உதாரணத்திற்கு 2+1 = என்ன வென்று கண்டுபிடிக்க வேண்டும் என்றால் மூன்றில் இருந்து 6 வயது குழந்தைகள் விரல் விட்டு எண்ணி சொல்வார்கள். இதே 6 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் உடனே 3 என்பார்கள். இது எப்படி மனதிற்குள்ளேயே 2 + 1 என்பதை கூட்டி விடை 3 என்று கூறுவார்கள். இது பாடசாலைகளிலும் நாம் குழந்தைகளுக்கு சொல்லி தருவதாலும் வருகிறது. இதையே குழந்தைகளுக்கு விளையாட்டின் மூலம் கணிதம் சொல்லிக் கொடுத்தால் விரைவாக விளையாட்டும் விளையாடுவார்கள். கணிதமும் கற்றுக் கொள்வார்கள். இதற்கு இந்த கணித விளையாட்டு மென்பொருள் உதவுகிறது.

இந்த மென்பொருள் ஒரு சுதந்திர கட்டற்ற மென்பொருள் என்பதால் இன்னும் பலரால் மேம்படுத்தப்படும் என்று நம்பலாம். இந்த மென்பொருளை நிறுவி குழந்தைகளுக்கு விளையாட்டாக கணிதமும் கணனியும் சொல்லிக் கொடுங்கள். இந்த மென்பொருள் விண்டோஸ் 2000க்கு மேற்பட்ட அனைத்து வெர்சன்களையும் ஆதரிக்கும். அத்துடன் லினக்ஸ், மக் இயங்குதளங்களிலும் இயங்கும்.





மென்பொருள் தரவிறக்க சுட்டி: http://tux4kids.alioth.debian.org/tuxmath/download.php






**திருகோணமலையில்...**

உங்கள் அழகை ஆரோக்கியமான, பாதுகாப்பான முறையில் மெருகூட்ட
அனுபவம்மிக்க அழகியல்கலை நிபுணர்களால் வழங்கப்படும்
இருபாலாருக்குமான சேவை

முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம்.

Ramaz Hair & Beauty

**எங்கள் சேவைகள்**

- முகப் பராமரிப்பு
- கேசப் பராமரிப்பு
- சிகை அலங்காரம்
- நகப் பராமரிப்பு
- சருமப் பராமரிப்பு
- தேவையற்ற முடி நீக்கம்
- இத்துடன் கேசம் சருமம் சம்பந்தமான சிகிச்சைகளும் வழங்கப்படும்.

மணப்பெண் அலங்காரம், அழகுக் கலை வகுப்புகள் நடைபெறும்

" Posh" Beauty Parlour. 506,Power House Road, Trincomale.

தொடர்புகளுக்கு : 077 3053242 / 026 2224524 / 071 8615065

# கட்டுப்பாட்டு விலை அரிசிக்கு மட்டுமா?

அரிசிக்கு கட்டுப்பாட்டு விலையைக் கொண்டுவந்ததுபோல் ஏனைய அத்தியாவசியப் பொருட்களுக்கும் கட்டுப்பாட்டு விலையை அரசு நிர்ணயிக்க வேண்டுமென மக்கள் தெரிவிக்கின்றனர். கடந்தவாரம் அரிசியின் கட்டுப்பட்டு விலையை ரூபா 70 ஆக நிர்ணயித்ததுபோல் ஏனைய முக்கிய பொருட்களுக்கும் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்கும் பட்சத்தில் அது மக்களுக்கு நன்மை பயக்கும்.

தற்போது பல பொருட்களுக்கு வியாபாரிகள் தாம் நினைத்த விதத்தில் விலையை அதிகரித்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதால் நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கடைக்குக் கடை பொருட்களின் விலைகள் மாறுபட்ட விதத்தில் விற்பனை செய்யப் படுவதை அரசு கண்டு கொள்ளா திருப்பதிலும், இது தொடர்பாக விலைக் கட்டுப்பாட்ட திகாரிகள் நடவடிக்கைகள் எடுக்காதிருப்பதிலும் தமக்கு சந்தேகம் நிலவுவதாக பாதிக்கப்பட்ட நுகர்வோர் தெரிவிக்கின்றனர். சில பொருட்களின் விலையதிகரிப்பை காரணமாக வைத்து ஏனைய பொருட்களின் விலைகளை வர்த்தகர்கள் அதிகரித்து வியாபாரம் செய்வதானது வியாபாரிகளின் இலாபமீட்டும் திட்டமாகும். எனவே இது விடயத்தில் அரசும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் குறிப்பாக நுகர்வோர் மற்றும் வர்த்தக அமைச்சர் இதில் கூடிய கவனம் எடுப்பார்களா ?

என். ராஜா

## வவுனியாவில் அப்பாவி கிராம மக்கள் மீது தாக்குதல்

வவுனியாவில் அப்பாவிக் கிராம மக்கள் மீது புலனாய்வுத் தரப்பினர் அடாவடித்தனம் புரிந்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வவுனியாவின் இரட்டைப் பெரிய குளம் பிரதேசத்தில் உள்ள கிராமம் ஒன்றிலேயே இந்தச் சம்பவம் கடந்த டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. சம்பவத்தின் போது புலனாய்வுப் பிரிவினர் குடிபோதையில் இருந்ததாக தெரியவந்துள்ளது. பொதுமக்கள் நடமாடும் இடத்தில் கெட்ட வார்த்தைகளைப் பிரயோகித்த வண்ணம் அநாகரீமாக நடந்து கொண்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்த காரணத்தாலேயே கிராமவாசிகள் தாக்குதலுக்குள்ளானதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

தற்போது குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டாலும் தாக்கியவர்கள் இதுவரை இனம் காணப்படவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

## சுனாமி நினைவு நிகழ்வு



சுனாமிப் பேரலையின் ஆறு வருட நினைவை முன்னிட்டு கல்முனை சாலூரம், கல்முனை கிராம அபிவிருத்திச் சங்கம் 1ம், 2ம் மற்றும் சயினிங் விளையாட்டுக் கழகம் ஆகியவை இணைந்து ஒழுங்கு செய்திருந்த பிரார்த்தனை வைபவமும் அன்னதானம் வழங்கும் நிகழ்வும் கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி காலை கல்முனை கடற்கரையோரம் அமைந்துள்ள சாலூரம் சுனாமி நினைவுத் தூபியின் முன் இடம்பெற்றது. இன்நிகழ்வில் கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயளாலர் க. லவநாதன், கல்முனை மாநகர சபை எதிர்க்கட்சித் தலைவர் ஹென்றி மஹேந்திரன் உட்பட அனைத்து சமயத்தலைவர்களும் கலந்துகொண்டனர்.

எஸ்.எம்.எம். றம்ஸான்

## மன்னாரில் காணாமல் போனவர்களை நினைவு கூர்ந்து சர்வமதப் பிரார்த்தனை

கடந்த டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி அனைத்துலக மனித உரிமைகள் தினத்தினை முன்னிட்டு மன்னார் புனித செபஸ்தியார் ஆலய வளாகத்தில் மன்னார் மாவட்டத்தில் காணாமல் போனவர்களின் குடும்ப உறவினர்களின் எற்பாட்டில், காணாமல் போனவர்கள் மற்றும் இறந்த உறவுகளை நினைவுகூறும் முகமாக சர்வமத பிரார்த்தனை இடம்பெற்றது. இதில் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை, மன்னார் சர்வமதத் தலைவர்கள், கொழும்பில் இருந்து வந்துள்ள காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எகலியகொடவின் மனைவி திருமதி சந்தியா எகலியகொட ஆகியோர் கலந்துகொண்டனர். இவர்களோடு காணாமல் போனவர்களின் உறவினர்கள் சுமார் நூறு பேர் வரை கலந்துகொண்டனர்.


இதன்போது காணாமல் போனவர்களின் உறவினர்கள், காணாமல் போனவர்களின் புகைப்படங்களை ஏந்தியவாறு உருக்கமான பிரார்த்தனையில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எகலியகொட வரைந்த ஓவியங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

லம்பேர்ட்

## சுகாதார சீர்கேடு

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு முன்னால் செல்லும் வீதியில் அமைந்துள்ள வடிகால்களில் பாவிக்கப்பட்ட விவசாய இரசாயன கொள்கலன்கள் மற்றும் போத்தல்கள் போடப்படுவதால் அக் கானின் நீர் மாசடைந்துள்ளது. அவ்விடத்தில் நீர் தேங்கி சீர்கெடலாம் என மக்கள் அச்சப் படுகின்றனர். இது சம்மந்தமாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

எஸ்.எம்.எம். றம்ஸான்



# ஹஸன் அலி தலையீட்டால் இஸ்லாமாபாத் மக்களின் நீர்ப் பிரச்சினை தீர்ந்தது

கல்முனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட இஸ்லாமாபாத் வீட்டுத்திட்ட மக்களது நீர்ப்பிரச்சினை தொடர்பாக அண்மைக்காலமாக ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பிரதேச செயலக முற்றுகை போன்றன நடைபெற்று பின் அது நீதிமன்றம் வரை சென்றதைத் தொடர்ந்து கடந்த வாரம் முற்றாக நீரை துண்டிப்பதற்கு நீர் வளங்கள் மற்றும் வடிகால் அமைப்புச் சபையினர் வந்த வேளையில் மக்கள் ஒன்று கூடி நீரை வெட்டுவதற்குப் பதிலாக எம் தலையை வெட்டுங்கள் என கூறி அவ்விடத்தில் திரண்டதால் செய்வதறியாத அதிகாரிகள் பொலிஸில் முறைப்பாடு செய்தனர். மீண்டும் அவ்வதிகாரிகள் வரக்கூடும் என எதிர்பார்த்து மக்கள் குடியேற்ற வாசல் கதவுகளை மூடிக் கொண்டு அவதானமாக வீதிகளில் காணப்பட்டனர். பிற்பகல், பொலிஸாருடன் நீர் வளங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரிகளும் வந்து நீரை துண்டிக்க முற்பட்டபோது தொலைபேசியில் நீர்வளங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் ஹைதர் அலியுடன் பாராளுமன்ற உறுப்பினர் ஹஸன் அலி பேசியதன் பின் அவ்வதிகாரிகளும் பொலிஸாரும் அவ்விடத்திலிருந்து அகன்று சென்றனர். இது தொடர்பாக நீர் வளங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் ஹைதர் அலியுடன் தொடர்பு கொண்டபோது "பிரச்சினை எமக்கும் மக்களுக்கும் அல்ல. அவர்களுக்கு இவ் வீட்டுத்திட்டம் அமைத்த காலம் தொடக்கம் சட்டப்படி முடிந்த உதவிகளை எமது சபை செய்துள்ளது. அதே போல் இருக்கும் நிலுவையை கட்ட வேண்டியதும் அவர்களுடைய கடமை. இதற்குள் வேறு பிரச்சினை இருப்பதை எமது அதிகார சபைக்குச் சொல்லுவது பொருத்த மற்றது. இருந்தும் மனிதாபிமான அடிப்படையிலும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் வேண்டிக் கொண்டதற்கும் அமைய ஒரு வாரம் தவணை கொடுத்துள்ளோம். அதற்குள் இப்பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் படுவது தவிர்க்க முடியாது" எனக் கூறினார்.

இதே வேளையில் பாராளுமன்ற உறுப்பினர் ஹஸன் அலியை தொடர்பு கொண்டபோது "சட்டப்படி ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டு அவ்வமைப்பிடம் மக்கள் இதற்கான பணத்தையும் வழங்கியுள்ளனர். அவர்களும் அப்பணத்தைக் கட்டியுள்ளனர். அதற்குள் நிலுவையும் ஏற்பட்டுள்ளது. இதற்காக மக்களை தண்டிக்கக்கூடாது. அது முறையுமல்ல. சம்மந்தப்பட்ட நிர்வாகத்தைத்தான் கேள்வி கேட்க வேண்டும். மக்களை பாதிக்கும் எந்த நடவடிக்கைகளையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அனுமதிக்க மாட்டாது" எனக் கூறியதோடு "விரைவில் சம்மந்தப்பட்ட இரு சாராரையும் நான் சந்தித்துப் பேசுவேன்" எனவும் கூறினார்.

எஸ்.எம்.எம். றம்ஸான்

## தொற்றுநோய்த் தடுப்பூசித் திட்டம்

'இன்புளுவென்சா' (H1N1) தொற்று நோய் பரவாது தடுப்பதற்கான தடுப்பூசி போடும் வேலைத்திட்டம் காரைதீவுப் பிரதேசத்தில் கடந்த வாரம் முதல் நடைபெற்று வருகின்றது. நாடளாவிய ரீதியில் சுகாதார அமைச்சினால் பறவைகள் மற்றும் மிருகங்கள் மூலம் பரவி வரும் தொற்றுக் காய்ச்சலைத் தடுப்பதற்காகவே இத் தடுப்பூசி போடும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் தொற்று நோய்த்தடுப்புப் பிரிவின் பணிப்பிற்கு அமைய காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்லிமா பஷீரின் ஏற்பாட்டில் மாளிகைக்காடு சுகாதார நிலையத்தில் இன்புளுவென்சா 'H1N1' தடுப்பூசி கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டதை படத்தில் காணலாம்.

எஸ்.எம்.எம். றம்ஸான்

# கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளான நிலையில் தனியார் பஸ் சாரதி வைத்தியசாலையில் அனுமதி

மடுவில் இருந்து மன்னாருக்கு கடந்த டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை பயணிகளை ஏற்றிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்றின் சாரதியான ஆரோக்கியம் தவப்பிரகாசம் (வயது-41) என்பவர் முருங்கன் இசை மாளத்தாழ்வு பகுதியில் வைத்து கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டு கண்மூடித்தனமாக தாக்கப் பட்டார். குற்றுயிரான நிலையில் பயணிகளால் காப்பாற்றப்பட்ட இவர் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தாக்குதலுக்குள்ளான சாரதியான ஆ. தவப்பிரகாசம் தெரிவிக்கையில் "மடுத் திருத்தல பகுதியில் இருந்து கடந்த 5 ஆம் திகதி மாலை 2.15 மணியளவில் சுமார் 30 பயணிகளை ஏற்றிக்கொண்டு மன்னார் நோக்கி வந்து கொண்டிருந்தோம். முருங்கன் இசைமாளத்தாழ்வு பகுதியூடாக வந்து கொண்டிருந்த போது பஸ்ஸிற்கு பின்புறமாக கடற்படையினரின் 9215 இலக்கம் கொண்ட ட்ரக் வண்டி வந்துகொண்டிருந்தது. ட்ரக் வண்டி பஸ்ஸினை முந்திக்கொண்டு செல்ல முயன்றது.

வீதி சரியில்லாமையினாலும் வீதியில் அதிகளவான மாடுகள் நின்றமையினாலும் கடற்படையினரின் வாகனத்திற்கு இடம் கொடுக்க முடியவில்லை. இதனால் கோபமடைந்த கடற்படையினர் முந்தியடித்துக் கொண்டு முன்னால் வந்து பின் பஸ்ஸினை நிறுத்தி என்னை இழுத்து கீழே போட்டு தாக்கத் தொடங்கினர். சுமார் 5 பேர் வரை சுற்றி நின்று என்னைத் தாக்கினர். பயணிகள் அடிக்க வேண்டாம் அடிக்கவேண்டாம் என்று கத்தியபோதும் அவர்கள் என்னை விடவில்லை. இறுதியில் பஸ்ஸினுள் இருந்து பயணித்த 2 பொலிஸ் அதிகாரிகள் எழும்பி வெளியில் வரவே என்னைத் தாக்குவதில் இருந்து விட்டுச் சென்றார்கள். தற்போது கடுமையான உள்காயங்களுக்குள்ளான நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றேன்" மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் 3 உறுப்பினர்கள் இதுவரை கடற்படையினரின் தாக்குதல்களுக்குள்ளாகியிருப்பதாக தெரிவிக்கப் படுகின்றது.

லம்பேர்ட்

■ நேர்கண்டவர்: சாகித்யா

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நம் உறவுகளை சென்று ஒருமுறை பார்த்து வாஸ்த்து மூலம் தன்னாலான உதவிகளை செய்துவரவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இந்தியாவின் பிரபல வாஸ்த்து நிபுணரான ரெங்கநாத் அவர்கள் அண்மையில் இலங்கை வந்திருந்தபோது தனது துணைவியாருடன் எமது அலுவலகத்திற்கு வந்திருந்தார். "இலங்கைக்கு வந்த உடனே என்னோட கையில கிடைத்த முதல் புத்தகம் 'இருக்கிறம்'. குமுதம், விகடன் எல்லாம் படிச்ச எனக்கு 'இருக்கிறம்' படிச்ச பிறகு இதுதான் தமிழ் என்ற ஒரு நல்ல எண்ணம் உருவாச்சி. கூடவே ஏதோ ஒரு இனம்புரியாத எழுச்சியான உணர்வு ஏற்பட்டிச்சு. ரொம்ப நல்லா இருக்கு. உங்கள எல்லாம் பார்க்கும்போது எமது உறவுகளைப் பார்த்த திருப்தி எங்களுக்கு ஏற்படுகின்றது" என அன்போடு உரையாடினார்கள்.





# வாஸ்த்துப்படி வைக்கவேண்டிய இடத்தில் எல்லாம் வைத்தால் எல்லாம் சரியாக நடக்கும்!

## பிரபல வாஸ்த்து நிபுணர் ரெங்கநாத்

Mechanical Engineer ஆன ரெங்கநாத், முன்னர் சொந்தமாக ஒரு தொழிற்சாலை நடாத்தி இருக்கின்றார். அதில் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளது. தான் புதிதாக கட்டிய வீட்டின் வாஸ்த்து சரியாக இல்லாமையே இவரது நட்டத்திற்கு காரணமாக இருந்துள்ளதை அறிந்து வாஸ்து கலையை ஓரளவு அறிந்து வைத்திருந்த இவரது துணைவியாருடைய தூண்டுதலின் பேரில் வாஸ்த்து கலையை பயில ஆரம்பித்திருக்கிறார். அந்த முயற்சியின் பயனே இன்று இவரை ஒரு வாஸ்த்து நிபுணராக்கியுள்ளது.

இவரிடம் வாஸ்த்து சாஸ்திரம் பற்றியும் அதன் சிறப்புப் பற்றியும் கேட்டோம்.

"நானே வாஸ்த்து என்றது உண்மையா பொய்யா என்று தெரிஞ்சிகொள்ளத்தான் ஆரம்பத்துல படிச்சன். வாஸ்த்து எண்டுறது ஒரு காந்த சக்தி. நம்ம பூமிக்கு கீழ இருக்கிற எத்தனையோ பொருள்களால நம்ம பூமிக்கு ஒரு காந்த சக்தி கிடைக்கிறது. அதாவது வடதுருவம், தென்துருவம் அப்படியான காந்த சக்திகள். அதேமாதிரி நம்ம வீட்டுக்குள் இருக்கிற பொருள்களான கல், செங்கல், இரும்புக்கம்பிகள்கூட பூமிக்குள்ள இருந்து எடுக்கிறதுதான். பூமியிலிருந்து உருவான இந்தப் பொருள்களுக்கும் ஒருவிதமான காந்தசக்தி உள்ளது. இந்த காந்த சக்தியும் வீட்டுக்குள் இருக்கிற காந்தசக்தியும் ஒருசில எதிர்மறையான விஷயங்களை அணுகுது. அப்போது எமக்குள் ஒரு உணர்வு ஏற்படும். அதுதான் வாஸ்த்து.

எல்லா திசைகளும் நல்ல திசைகள்தான். அதுல வடக்கு, கிழக்கு திசைகள் ரொம்ப நல்ல வளர்ச்சியைக் கொடுக்கும். வடக்கு பார்த்த வீடும் கிழக்கு பார்த்த வீடும் கட்டும்போதே நமக்கு ரொம்ப எளிதா இருக்கும். நமது உடம்புக்கு காந்த சக்தி இருக்கு. சுவரில் விரிசல் ஏற்படக் கூடாது. வடதுருவமா நம்ம தலையும் தென் துருவமா நம்ம காலும் இருக்குனு விஞ்ஞானிகளே கண்டுபிடிச்சிருக்காங்க. தெற்கில தலை வைச்சி படுக்கலாம். கிழக்கு எண்டது நமது முன் பக்கம். அதை நோக்கித்தான் நாங்க ஓடிக்கிட்டு இருக்கம். அதான் தினமும் சூரியன் நமக்கு தென்படுது. கிழக்கை நோக்கி செய்ற காரியங்கள் எல்லாமே வெற்றிபெறும். புதிதாக வாசற்படி கட்டும்போது மரக்காலுக்கு கீழே நவரத்தினங்கள் போடணும். பஞ்ச உலோகம் வைக்கணும். இவைகள் எல்லாம் நல்ல பயனை தரும். வாஸ்த்துப்படி கட்டுங்க. மாற்றங்கள நீங்களே பார்ப்பீங்க" என்று திடமான நம்பிக்கையுடன் சொன்னார்.

காந்த சக்தி பற்றி அவர் குறிப்பிட்டதால் வாஸ்த்துவுக்கும், விஞ்ஞானத்துக்கும் அத்தோடு ஜாதி மதத்துக்கும் ஏதேனும் தொடர்பு இருக்கின்றதா என்று கேட்டேன்.

"கண்டிப்பா இருக்கு. இந்துமத சாத்திரங்கள் எல்லாமே மக்களுக்கு எளிதாக சொல்லமுடியாத விஷயங்களை சில படிமுறைகளாக கொடுக்கப்பட்டிருக்கு. அதே போலத்தான் வாஸ்த்து என்பதையும் நமது முன்னோர்கள் படிமுறைகளாக கொடுத்திருக்கிறாங்க. வாஸ்த்து எண்டுறது ஒரு அறிவியல் சார்ந்த பிரச்சினையாகும். நம்ம சாஸ்த்திரங்கள் எல்லாமே நிறைய விசயங்கள சொன்னால்தான் மனிதன் ஏற்றுக்கொள்வான் என்று, உள்ளர்த்தங்கள மறைச்சிட்டு வெளிப்படையா சொல்லி இருக்கு. வாஸ்த்துவில் உள்ள விடயங்கள்தான் விஞ்ஞானத்திலும் இருக்கு. வாஸ்த்துவுக்குப் பின்னாடி விஞ்ஞானம்தான் இருக்கு. இதுக்கும் ஜாதி மதத்துக்கும் எவ்விதமான தொடர்பும் கிடையாது. வாஸ்த்துப்படி கட்டிய வீட்டில் நான் இருந்தாலும்,



வேறு எந்த மதத்தவர் இருந்தாலும் அதே மகிழ்ச்சிதான் ஏற்படும். ஒரு இயற்கை காட்சியை நான் பார்த்து மகிழ்ந்தால் கிடைக்கும் சந்தோஷம்தான் பெரியோர், சிறியோர் என எல்லோருக்கும் ஏற்படும். ஏனென்றால் அது ஓர் இயற்கை சக்தி"

இலங்கையைப் பொறுத்தளவில் பெரும்பாலானோர் வாஸ்த்து பார்ப்பது அரிதாகவே காணப்படுகின்றது. இதற்கு என்ன காரணம்?

"இந்தியாவில்கூட 20 வருஷத்துக்கு முன்னாடி ஒருவரும் வாஸ்த்து பார்த்தது கிடையாது. இப்பதான் அங்கயும் படிப்படியா வாஸ்த்து பார்க்குறாங்க. இப்ப நான் இங்க வந்துட்டேன்ல. இன்னும் ஒரு வருஷத்தால பாருங்களே.. இங்கயும் எல்லோரும் வாஸ்த்து 'பார்ப்பாங்க" என்று கூறினார்.

"இங்க இருக்கிறவங்க புதுசா வீடு கட்ட ஆரம்பிச்சிருக்காங்க. வாஸ்த்து பற்றி அவங்களுக்கு சொல்லிக் கொடுத்தால் அவங்க அதுமாதிரி கட்டுவாங்க. இப்ப ஒரு வீடு கட்ட 20 இலட்சம் தேவை எண்டு வைச்சிக்குவோம். வாஸ்த்துப்படி

**வாஸ்த்துவுக்குப் பின்னாடி விஞ்ஞானம்தான் இருக்கு இதுக்கும் ஜாதி மதத்துக்கும் எவ்விதமான தொடர்பும் கிடையாது. வாஸ்த்துப்படி கட்டிய வீட்டில் நான் இருந்தாலும், வேறு எந்த மதத்தவர் இருந்தாலும் அதே மகிழ்ச்சிதான் ஏற்படும்.**

கட்டினாலும் அதே 20 இலட்சம்தான் செலவாகும். ஆகவே இந்த நேரம்தான் இலங்கைக்கு வாஸ்த்து பற்றி தெரிந்துகொள்ள அவசியமான நேரம்"

அதிகரித்துவரும் சனத்தொகைக்கு ஏற்ப இன்று மாடிக்குடியிருப்புகள் மற்றும் தொகை வீடுகள் கட்டப்பட்டு மக்கள் அதில் வசிக்கும் ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது. இவ்வாறான





வேளைகளில் வாஸ்த்து பார்க்க முடியாதே என்றேன்.


“கண்டிப்பாக முடியும். வாஸ்த்து எண்டுறது நீங்க நினைக்கிற மாதிரி பெரிய பூதம் கிடையாது. வடக்கு, கிழக்கு போன்ற திசைகளில எடையைக் குறைவாகவும் தெற்கு, மேற்கு போன்ற திசைகளில எடை அதிக மாகவும் இருக்கும். இதை மாற்றி வைக்கத்தான் சொல்றம். வேறொண்டுமில்ல. நமக்கு தெரியாம இந்த பூமி நம்மள சுத்திக் கிட்டே இருக்கு. வடகிழக்கு நோக்கி நாம ஓடிக்கிட்டே இருக்கம். ஓடும்போது அந்தத் திசையில எதுவும் இருந்தா அதுக்கு சிரமமா இருக்கும். அதுதான் வாஸ்த்து சொல்லுது. வடகிழக்கு என்பது சுத்தமான திசை. அங்க எதையும் வைக்காதீங்க. அங்க டொய்லட் போகாதீங்க. படுக்காதீங்க.

**வடகிழக்கு மூலை தண்ணிக்கு சொந்தமான இடம். அங்க தண்ணிய வைங்க. அங்க நெருப்பு வைக்காதீங்க. நெருப்பு வைத்தால் ஆவி ஆகிடும்.**

கிச்சின் வைக்காதீங்க எண்டு சாஸ்த்திரமா சொல்லி இருக்காங்க” என்று அவர் கூறியபோது நமக்கு தெரிந்து நாம் எவ்வளவு தவறை செய்துகொண்டிருக்கிறோம் என்று நினைத்தேன்.


“ஒரு நிறுவனம் நட்டமடைய பல காரணங்கள் இருக்கலாம். ஒரு தெருவுல ஒரே மாதிரி 10 கடைகள் இருக்கின்றது. 10 கடைகளும் அரிசிக் கடைகள்தான். ஒரே விலை. ஒரே வகை. ஆனால் ஒரு சில கடைகள் மட்டும் நல்ல வருமானம் பெறும். வியாபாரம் அமோகமாக இருக்கும். ஒருசில கடைகளின் வியாபாரம் கீழ் நோக்கியே போய்க்கொண்டிருக்கும். இதற்கு காரணம் வாஸ்த்துதான் என்று என்னால் நிரூபிக்க முடியும். அங்கே காலணா பெட்டி வைக்கும் இடம் என்பவற்றில் இந்த வாஸ்த்து ஆதிக்கம் செலுத்தும். வாஸ்த்துப்படி வைக்க வேண்டிய இடத்துல எல்லாத்தையும் வைத்தால் எல்லாம் சரியாக நடக்கும்” என்று அவர் கூறியபோது எம்மால் மறுப்பு தெரிவிக்க முடியவில்லை.

“நமது வாழ்க்கைக்கு பஞ்சபூதங்களும் மிகவும் முக்கியமானவை. அதாவது இந்த பஞ்ச பூதங்களையும் எப்படி சமாளித்து வாழ்வது என்றுதான் வாஸ்த்து கூறுகின்றது. வடகிழக்கு மூலை தண்ணிக்கு சொந்தமான இடம். அங்க தண்ணிய வைங்க. அங்க நெருப்பு வைக்காதீங்க. நெருப்பு வைத்தால் ஆவி ஆகிடும். தென் கிழக்கு மூலை அக்கினி பகவானுக்கு உரியது. இங்க சமையலறைய வைங்க. வடமேற்கு மூலை வாயு பகவானுக்கு




உரியது. அதனால அங்க டொய்லட், பாத்ரூம் வைச்சுக் கோங்கோ. அப்படினு வாஸ்த்து சொல்லுது. இவைகள் மாறி இருக்கும்போதுதான் அங்க பிரச்சினைகள் வருது. வன்னியில புதிய வாழ்க்கையை ஆரம்பிச்சிருக்கிற மக்களுக்கு உறுதியா சொல்றன். ஒரு புதிய வாழ்க்கையைத்தான் நீங்க ஆரம்பிக்கப் போறீங்க. இதுல எந்த தவறையும் திரும்ப பண்ணிடாதீங்க. வாஸ்த்து சாத்திரம் என்பது கூட ஒரு தெரிந்த தவறு. அதுபோல எத்தனையோ தவறுகள் இருக்கு. புதிய வாழ்க்கைய புதியதா நல்லதா தொடங்குங்க. உங்கள் வாழ்வு சிறக்கும்” என்று உருக்கமாக கூறினார்.

வாஸ்த்து சாத்திரம் என்பது மிகவும் பழமையானது. வேத நூல்கள் மற்றும் சாத்திரங்களில் சொல்லப்பட்ட வாழ்க்கைக்கு தேவையான எத்தனையோ விடயங்களை நாம் வாழ்வில் புறக்கணித்து வருகின்றோம். மனித வாழ்வில் எதிர்நோக்கும் பல்வேறு இன்னல்களுக்கு உகந்த பரிகாரம் மற்றும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க விதிகள் என்பவற்றை தெளிவுபடுத்தவே வேதங்களும் சாத்திரங்களும் எழுதப்பட்டன. ஆகவே வாஸ்த்து சாத்திரத்தில் சொல்லப்பட்ட வாறு அந்த நியதிகளை கடைப்பிடித்து நிம்மதியான வாழ்க்கைக்கு வழிதேடுவோம் ●



இன்பன்

# பொழுது போக்கு + அடிதடி + ஆபாசம் = தமிழ்ச்சினிமா



"மச்சான் இந்தப் படத்தில அமெரிக்காவில இருக்கிற முஸ்லிம்களின்ர நிலையை அப்படியே காட்டி இருக்காங்கடா" இது கொழும்பில் புதிய திரைப்படம் ஒன்று திரையிடப்படும் திரையரங்கு ஒன்றின் முன்னால் இரு இளைஞர்கள் உரையாடியது. இதிலிருந்து சினிமா ஓர் விடயத்தை வெளிப்படுத்துவதில் வெற்றி பெற்றமை புரிகிறது. அத்துடன் சினிமா மீது மக்கள் கொண்டுள்ள ஆர்வமும் இங்கு புலப்படுகிறது.

இலத்திரனியல் ஊடகத்தில் ஒன்றாக சினிமாவும் உள்ளது. ஓர் தகவலை நாம் செய்தியாக கொடுப்பதிலும் பார்க்க அதை ஓர் கதையாக கொடுக்கும்போது மக்கள் மனதில் அது இலகுவில் பதிந்து விடுகிறது. பொதுவாக செய்தியை செய்திக்கதை என்று இதனால்தான் கூறப்படுகிறது. ஓர் சம்பவத்தை உடனே செய்தியாய் கொடுப்பதில் பயன் ஏதும் இல்லை. அதன் பின்னணியை ஆராய்ந்து முழு விடயங்களையும் கொடுப்பதன் மூலம் மக்கள் மத்தியில் அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். "ஆடுகின்ற மாட்டை ஆடித்தான் கறக்க வேண்டும் பாடுகின்ற மாட்டை பாடித்தான் கறக்க வேண்டும்" சினிமா ஊடகம் என்பது தனது பணியை அந்த வகையில்தான் செய்து வருகின்றது. இதனால் அது மக்கள் மத்தியில் வரவேற்பையும் பெற்றுள்ளது.



அண்மைக்கால தமிழ்ச் சினிமாவைப் பொறுத்த வரையில் அது ஓர் பொழுது போக்கு அம்சம் என்ற வகையில் மாத்திரம் வளர்ந்து வருகிறது. இங்கு மக்களிடம் எந்தக் கருத்தும் கூறப்படுவதில்லை. வெறுமனே பொழுதுபோக்கு, கற்பனை, அடிதடி, அதிக ஆபாசம் என்னும் பொருளடக்கங்கள்தான் இன்றைய சினிமாவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனால் அனேகருக்கு சினிமா ஓர் ஊடகம் என்பதே மறந்து போய்விட்டது. இதனால் சினிமா ஓர் ஊடகம் என அவர்களுக்கு புரிய வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து பிரபல தயாரிப்பாளர் ஒருவர் "கடனை உடன வேண்டி தயாரிக்கிற படம் வெற்றி அடைய வேண்டும். அப்படி வெற்றியடையாவிட்டால் வேலையில்ல. அதுக்கேற்றபடிதான் படம் எடுக்கிறன். எங்கட நிறுவனம் எப்பவும் நல்ல படங்களைத்தான் தயாரிக்குது" என்கிறார்.

நவீன ஊடகங்களில் உச்சகட்ட தொழில்நுட்பம் சினிமாவில்தான் பயன்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் தொழில்நுட்ப வளர்ச்சி, அதிகமானவர்களுக்கு வேலைவாய்ப்பு என நன்மைகள் பலவும் இருக்கின்றன. இந்தியாவைப் பொறுத்தவரையில் நாட்டின் ஒரு தொகுதி மக்களுக்கு சினிமா மூலமே வேலைவாய்ப்புக் கிடைக்கின்றது. என்ன இருந்தாலும் சினிமா என்பது வெறுமனே பணம் தயாரிக்கும் இயந்திரமாக இருக்கக் கூடாது. வன்முறை, கலாச்சாரச் சீரழிவு, விபரீதமான எண்ணங்கள், விபரீதமான செயல்கள் என்பன ஏற்படாத வகையில் சினிமாத் தயாரிப்புக்கள் அமைய வேண்டும்.



அண்மைக்காலத்தில் வெளிவரும் தமிழ்த் திரைப்படங்கள் என்ன கருத்தைச் சொல்ல வருகின்றன என்பதே புரிவதில்லை. ஐந்து பாட்டு, நான்கு சண்டை எனும் வழக்கத்தில் தமிழ்த் திரையுலகம் சென்றுகொண்டு இருக்கிறது. ஓர் நல்ல சினிமாவிற்கு நாட்டின் எதிர்காலத்தையே தீர்மானிக்கும் சக்தியுண்டு. அந்த அளவிற்கு அது மக்களிடம் தாக்கம் புரியும். அதிக பொருட் செலவில் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் நேரத்தை அநியாயப்படுத்துவதாக அமையக்கூடாது. அது ஓர் உயரிய கருத்தைக் கொண்டிருக்க வேண்டும். "மக்கள் எதை எதிர் பார்க்கின்றார்களோ அதைத்தான் திரையில் வழங்க முடியும். அதுக்காக கருத்தாழமற்ற படங்களை நான் எடுப்பதில்லை" இது ஒரு வெற்றிப்பட இயக்குனரின் கருத்து.



அண்மைக்கால திரைப்பட விதிமுறைகளை மீறினால் அத் திரைப்படம் ஓடாது என்று கூற முடியாது. ஏனென்றால் அங்காடித்தெரு, நாடோடிகள், நான் கடவுள், சுப்ரமணிய புரம் போன்று அத்தி பூத்தாற்போல் சில படங்கள் மக்களுக்குரிய தகவலை சுமந்து வெளிவருகின்றன. அவை அதிக வெற்றியையும் பெறுகின்றன. எனவே சினிமா என்பது பொழுதுபோக்கு எனும் வட்டத்தை விட்டு வெளியேறி, ஊடகம் எனும் சுயத்தைப் பெறவேண்டும். அதன் வெளியீடுகள் ஊடகப் பாங்குடன் இருத்தல் வேண்டும்.



வகுப்பறை...

# ஒரு நாட்டின் உயர்வுக்கு ஆசிரியரின் பங்கு


சூரியனிலிருந்து எறியப்பட்ட நெருப்புப் பந்து தணிந்தது. பூமி என்னும் அழகான வடிவாய் உருமாறியது. உயிரினங்களும் மரங்களும் தோன்றி அற்புதமான உலகாய் உருவெடுத்தது. இந்த இயற்கையானது மனிதனுக்குக் கிடைத்த அழகான கொடை ஆகும். இத்தனையும் இயற்கையிலிருந்து பெற்றுக் கொண்ட மனிதன் தன் முயற்சியைப் பயன்படுத்தி அழகான நவீன பூமியாக மாற்றியமைக்கின்றான். இப்பூமியைச் சிலர் ஆக்க நினைக்காது கொடிய ஆயுதங்கள் கொண்டு அழிக்க நினைக்கின்றார்கள். புதுமைகள், புதிய கண்டுபிடிப்புக்கள் உருவாக வேண்டுமானால்

சிறப்பான கல்வியை இளைய தலைமுறையினர் காணவேண்டும். உலகம் அழிவை நோக்கிப் போகாமல் இருக்கவேண்டுமானால் ஒழுங்கான முறையில் பிள்ளைகள் வளர்க்கப்படல் வேண்டும். இதற்கு அடிப்படைக் கல்வி சிறப்பாக இருக்கவேண்டும். இன்றைய சிறுவர்கள் நாளைய பெரியவர்கள். மாதா, பிதா, குரு, தெய்வம் இவை நான்கும் ஒரு பிள்ளைக்கு அவசியம். பிள்ளை பிறந்தவுடன் அம்மாவைக் காண்கிறது. அம்மா சொல்லி அப்பாவைக் காண்கிறது. அப்பா, அம்மா பிள்ளைக்கு குருவைக் காட்டுகின்றார்கள். ஆசிரியர் கடவுளை வழிபட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றார்.

எனவே ஒரு பிள்ளையை உருவாக்கும் பொறுப்பு முதலில் பெற்றோருக்கு இருக்கின்றது. அதன்பின் ஆசிரியர் கையிலேதான் தங்கியிருக்கிறது. தெய்வத்தைவிட முன்னிலையில் வைத்துப் பாராட்ட வேண்டியவர்கள் ஆசிரியர்களே. தாரமும் குருவும் தலைவிதிப்படி என்பார்கள். ஒரு பிள்ளைக்குக் கிடைக்கும் ஆசிரியரைப் பொறுத்துத்தான் கல்வியில் அப்பிள்ளை காட்டும் ஆர்வமும், முன்னேற்றமும், வளர்ச்சியும் தங்கியிருக்கும். ஆசிரியர் கற்பித்தவை மாணவர்கள் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்திருத்தல் வேண்டும். குரு நிந்தை செய்வோர் குரு நிறைவாய்க் கிடைக்காதவர்களாகத்தான் இருக்க வேண்டும்.

தன்மேலே இருக்கும் சுமையால் கலங்காது, தோண்டினாலும் துன்புறாது நிலம். அதேபோல் விவாதங்கள் செய்து வருத்துபவர்களைக் கண்டு கலங்காது பொறுமை காப்பவர் ஆசிரியர். பொருட்களின் அளவை சந்தேகம் இல்லாமல் காட்டும் தராசு போல சந்தேகம் தீருவதற்காக கேட்கப்பட்ட வினாவின் பொருளை விளக்குவதாலும், நடுநிலைமை மாறாது நிற்பதனாலும் தராசு ஆசிரியர்களுக்கு உவமையாக்கப்பட்டது. எல்லோராலும் விரும்பப்படுகின்ற மலர் போல் எல்லோராலும் விரும்பப்படுபவராகவும், சரியான நேரத்திலே பூ மலர்வது போலே கற்பிக்கும் நேரத்திலே முக மலர்ச்சியுடன் கற்பிப்பவரே ஆசிரியர். ஆனால் கழற்குடம், மடற்பனை, பருத்திக்குண்டிகை, முடத்தெங்கு போன்ற ஆசிரியர்களும் இருக்கவே செய்கின்றனர். ஆயினும் ஒரு மாணவன் வளர்ச்சிக்கு பெற்றோரை ஊக்கப்படுத்தி அதற்கான அறிவுரை வழங்கி அம்மாணவனை நல்நிலைக்குக் கொண்டு வருவதற்கு ஆசிரியர் ஒத்துழைப்பு அவசியமாகின்றது.

வீட்டுச்சூழல் தவிர்ந்து மற்றைய பொழுதுகளில் தமது பள்ளிப்பருவத்தில் கூடுதலான நேரத்தை பாடசாலையிலேயே ஒரு பிள்ளை கழிக்கின்றது. அந்நேரத்தில் அப்பிள்ளையைக் கண்காணிக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடமே ஒப்படைக்கப்படுகின்றது. குழந்தைகள் உலகத்திற்கு அவசியம். இவர்களே எதிர்கால உலகத்தை ஆளப் போகின்றவர்கள். எதிர்கால உலகை ஆளப் போகின்றவர்களை ஒழுங்கான முறையில் வழிநடத்த வேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.



தவறு செய்யாத மனிதன் உலகத்தில் இல்லை. அந்தத் தவறை அறிந்து அவன் திருந்தி நடக்கும்போது அவன் வாழ்க்கை சிறப்புப் பெறுகின்றது. அனைத்தும் அறிந்த பெரிய மனிதர்களே தவறுகள் செய்கின்றபோது சிறிய பிள்ளைகள் எப்படித் தவறு செய்யாமல் இருப்பார்கள்? பிள்ளைகள் களிமண் போன்றவர்கள். அவர்களை எப்படியும் நாம் வடிவமைக்கலாம். முறையானவர்கள் கைகளில்

சந்திரகௌரி சிவபாலன்

பிள்ளைகள் முறையாக வளர்வார்கள். தவறானவர்கள் கைகளில் வளர்க்கப்படும் பிள்ளைகள் முறைகேடாக வளர்வார்கள். பிள்ளைகளில் மட்டும் தவறை நாம் காணமுடியாது. ஏனெனில் அவர்கள் பூமியில் பிறப்பெடுக்கும் போது வெற்றுப் பத்திரிகைகளாகவே வந்து பிறந்தார்கள். பெற்றோரும் சூழலுமே அவர்களில் பதிவுகளை ஏற்படுத்தக் காரணங்களாகின்றன.

ஆசிரியர் தொழில் மற்றைய தொழில்களைவிடப் பொறுப்பான தொழில். ஒரு சமூகத்தை உருவாக்கும் தொழில். பிள்ளைகளில் அவதானமும் அவர்களுக்குப் பாதுகாப்பும் கொடுக்க வேண்டிய பொறுப்பிலுள்ள தொழில். இத்தொழிலுள்ள ஆசிரியர்கள் தமது தொழிலை ஒரு சேவை மனப்பாங்குடன் செய்தல் வேண்டும். பொறுப்பில்லாது பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்தலே எமது கடமை. அவர்கள் ஒழுக்க நடத்தைகளுக்கு நாம் காரணம் இல்லை என்று ஒரு ஆசிரியர் சொல்ல முடியாது. ஒரு கடமையில் ஒருவர் ஈடுபடும்போது அக்கடமையில் முழுக்கவனமும் எடுத்தல் வேண்டும். அக்கடமையில் வருகின்ற நன்மை தீமைகளுக்கு அவர்களே காரணமாகும். ஒரு மாணவனுக்குக் கல்வி கற்பிக்கும்போது அம்மாணவனைப் பற்றிய பூரண அறிவு அவனைக் கற்பிக்கும் ஆசிரியருக்கு இருக்க வேண்டும். அரசாங்கப் பணத்தில் வாழ்ந்து கொண்டு தாமும் சோம்பேறிகளாக இருந்துகொண்டு தமது பிள்ளைகளையும் சோம்பேறிகளாக வளர்க்கும் பெற்றோர்களால், சீரற்ற பழக்கவழக்கங்களுள்ள



பிள்ளைகள் உருவாகுவதாக ஆசிரியர்கள் குற்றம் சாட்டுகின்றனர். தாமும் தொழிலுக்குப் போகாமல் மதுபானங்களுக்கு அடிமையாகி வீட்டிலே அடைந்து கிடக்கும் பெற்றோர்களின் பிள்ளைகள் போதைப்பொருளுக்கு அடிமைகளாவதாகவும், அப்பிள்ளைகளின் பழக்கவழக்கங்கள் மோசமான நிலையில் இருப்பதாகவும், இவையெல்லாம் எம்மால் அவதானித்துக் கொண்டிருக்க முடியாது

என்றும், சலிப்படைகின்ற எத்தனையோ ஆசிரியர்கள் நம் மத்தியில் வாழ்கின்றார்கள்.

பொறுப்பான பதவி வகித்துக்கொண்டு பொறுப்பில்லாத வார்த்தைகளை நாக்கூசாது சொல்பவர்களாக இவர்கள் காணப்படுகின்றார்கள். மருத்துவர் ஒரு உயிருக்கு எப்படி உத்தரவாதமோ அதேபோல் ஒரு ஆசிரியர் ஒரு உயிரின் வாழ்வியலுக்கு அவசியமானவர். பணம் ஒன்றே குறிக்கோளாகப் பதவி வகிப்பவர்கள் இந்த நாட்டிற்குப் பாவம் செய்பவர்களாகக் கருதப்படுவார்கள். ஏனென்றால் ஒழுக்கம் மீறிய ஒரு பிள்ளை வளர்ந்து பெரியவனாக வரும்போது அப்பிள்ளை அந்நாட்டைச் சீரழிக்கும் ஒரு குடிமகனாக உருவெடுப்பான். இப்படி ஒவ்வொரு பிள்ளைகளும் வளர்கின்றபோது அந்நாட்டில் குற்றம் செய்பவர்களும், சட்டத்தை மதிக்காதவர்களும், ஒழுக்க நடவடிக்கைகளை மீறுபவர்களும், போதைவஸ்துகளுக்கு அடிமைகளாகுபவர்களும் அதிகரித்துக் காணப்படுவார்கள். அதன்பின் அந்நாட்டின் வீழ்ச்சி நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்குப் பாரதூரமானதாக இருக்கும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்றெல்லாம் பழமொழிகள் உண்டு. பள்ளிப்பருவத்தில் கண்ணும் கருத்துமாக வளர்க்கப்படும் பிள்ளை எதிர்காலத்தில் சிறந்த ஒரு பிரஜையாக உருவெடுக்கும் என்பது திண்ணம்.

எனவே ஒரு நாட்டின் உயர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் ஒரு ஆசிரியரின் பங்கு ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அதனால் ஆசிரியர்கள் பல்வேறு கலாசாரத்தின் மத்தியில் தமது பணியை மேற்கொள்ளும் போது பொறுப்புள்ளவர்களாக நடந்து, தாம் வாழும் நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்ற வேண்டியது அவர்கள் கடமையாகின்றது ●

# சரியா? தவறா?

■ எஸ். ரகுதீஸ

"பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல். 12 பொலிஸாரும் 8 மாணவர்களும் தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்" இது அண்மையில் பல பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி. இலங்கையைப் பொறுத்தவரை இதுபோன்ற சம்பவங்கள் நடப்பது புதிதல்ல. ஆனால் இம்முறை இச்சம்பவம் நடப்பதற்கு ஓர் வலுவான காரணம் உள்ளது.

அண்மையில் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி வழங்கப்போவதாக அறிவித்திருந்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதன் விளைவே இந்த மோதல் சம்பவம். இலங்கையில் இலவசக் கல்வி நடைமுறையே இருந்து வருகிறது. இருந்தும் இது பெயரளவில் மாத்திரம்தான் என்பது வேறுகதை. இவ்வாறிருக்கையில் நினைத்ததை முடிக்கும் இலங்கை அரசு புதிதாக ஓர் முடிவை எடுத்துள்ளது. இதை அரசு நிறைவேற்றியே தீரும் என்பது அனைவரும் அறிந்தது. அரசின் இம் முடிவு தொடர்பில் பலரும் பல கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். இது தொடர்பில் யாம் பல்கலைக்கழக மாணவன் சத்யசீலன் "இலங்கையில இருக்கிற பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் மாணவர்களுக்கே வேலையில்ல. இப்படி இருக்க தனியார் பல்கலைக்கழகங்கள் வந்தால் நாட்டில வேலையில்லாத பட்டதாரிகள்தான் அதிகரிக்கும்" என்று கூறுகிறார்.

இது தொடர்பில் பேராதெனிய பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப் படிப்பை மேற்கொள்ளும் சர்வேஸ்வரன் இவ்வாறு கூறுகிறார். "இது மிகவும் வரவேற்கத்தக்க விடயம். அரச பல்கலைக்கழகங்களில் குறிப்பிட்ட சிலர் மாத்திரமே உள்வாங்கப்படுகின்றனர். இதனால் இதுபோன்ற தனியார் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் ஏனைய மாணவர்களும் கல்வி நடவடிக்கையினைத் தொடரமுடியும்"

இவர் இவ்வாறு கூறும் அதேநேரம் இலங்கையின் தனியார் உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் விரிவுரையாளர் மணிவாணன் "இலங்கையில்






இப்போதுள்ள கல்விமுறையானது ஒரு போட்டியை உள்ளடக்கியது. இதன்மூலம் மிகவும் திறமை வாய்ந்த மாணவர்களே பல்கலைக் கழகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். இதன்மூலம் இலங்கையில் பெறப்படும் பட்டத்திற்கு உலகளாவிய ரீதியில் மதிப்பு அதிகம். தனியார் பல்கலைக்கழகங்கள் வந்தால் இந்தியாவைப் போன்ற ஒரு நிலமை இலங்கையிலும் வந்துவிடும். அதாவது இந்தியாவின் கல்வித்தரம் இலங்கையுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவு. இவ்வாறு தனியார் பல்கலைக்கழகங்கள் வந்தால், ஏற்கனவே இருக்கும் தனியார் பல்கலைக்கழகங்களது மதிப்பும் குறைந்துவிடும். அரச பல்கலைக்கழகங்களின் வீழ்ச்சிக்கு தனியார் பல்கலைக்கழகங்கள் காரணமாய் அமைந்துவிடும். நல்ல விரிவுரையாளர்கள்கூட அதிக பணத்திற்காக தனியார் பல்கலைக்கழகங்களை நாட ஆரம்பித்து விடுவார்கள்" எனக்கூறினார்.

இவரின் கருத்து இவ்வாறு இருக்கும்போது ஓய்வுபெற்ற பேராசிரியர் சந்திரசேகரம் "இலங்கையில் இப்போது இருக்கின்ற 15 பல்கலைக்கழகங்களையே கொண்டுநடத்துவது அரசிற்கு மிகவும் கடினமாக இருக்கின்றது. அங்கு வேலை செய்பவர்களுக்கே சரியாக சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. இதற்கு மேலும் பல்கலைக்கழகங்களை அரசால் நிறுவமுடியாது. இப்போது அரசால் 1600 கோடி ரூபாய் பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. இதுதான் உலகில் பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கப்படும் மிகக்குறைந்த தொகை. இவ்வாறு இருக்கும்போது இன்னும் அதிகமானோருக்கு உயர்கல்வி வழங்குவதென்பது அரசாங்கத்தால் முடியாத ஒன்று. ஏனென்றால் இலங்கைப் பொருளாதாரத்தின் வளர்ச்சிப்போக்கு அவ்வாறு உள்ளது. எனவே தனியாரின் பங்களிப்புடனே இதை முன்னெடுக்க முடியும்" என்று கூறுகிறார்.

ஒரு நாட்டின் ஆணிவேராய் அமையும் கல்வியை விருத்தி செய்வது அவசியமாகும். இலங்கையின் கல்வித் தரத்தை விருத்தி செய்வதாகக்கூறி அரசால் கொண்டு வரப்படவுள்ள தனியார் பல்கலைக்கழகங்கள் தொடர்பாக பலரும் பலவாறாக கூறுகின்றனர். எது எவ்வாறாக இருப்பினும் பல்கலைக்கழகங்கள் நிறுவுவது நல்ல விடயம். ஆனால் தனியார் பல்கலைக்கழகங்கள், ஏற்கனவே இருக்கும் பல்கலைக்கழகங்கங்களின் மதிப்பைக் குறைக்காத வன்கயில் இருப்பதுடன் விதிமுறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருந்தால் இவற்றின் பணிகள் நல்ல முறையில் அமையும்.

## அபூர்வ நாய்

இவ்வுலகில் ஆங்காங்கே அதிசயங்கள் நடந்த வண்ணம்தான் இருக்கின்றன. பிரித்தானியாவில் ஸ்ரபோர்ட்ஷியில் வசிக்கும் ஜோன் கொன்சி (46 வயது) என்பவருக்கு சொந்தமான சய்ரா என்ற நாய், ஆண் மற்றும் பெண் பாலுறுப்புகளைக் கொண்டுள்ளது. இந்த அதிசய நாயை மிருக வைத்தியரிடம் காட்டுவதற்காக அழைத்துச் செல்லும் வரை அதற்கு இரு பாலின உறுப்புகளும் இருப்பதை ஜோன் கொன்சி அறியாது இருந்துள்ளார். ஆண் நாய்களுடன் பழகுவதில் ஆர்வம் காட்டி வரும் சய்ராவை பெண் நாயாக கருதும் ஜோன் கொன்சி, அந்நாயின் ஆண் பாலுறுப்பை சத்திரசிகிச்சை மூலம் நீக்கி அதனை முழுமையான பெண் நாயாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.






## ஒன்றுக்கொன்று போட்டி

இந்த ஊடக மயக்கத்தின் ஊடாக நான் சொல்லவேண்டிய சில உண்மைகளை சொல்லியே ஆகவேண்டும். முதற்தர வானொலிகள் என்றால் மக்களுக்கான தேவை அறிந்து நிகழ்ச்சிகளை திறன்படத் தரும் வானொலிகளைத்தான் சொல்ல வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் எதற்கு முதலிடம் கொடுப்பதென்பதே என் மனதில் எழும் கேள்வி. அனைத்து வானொலிகளும் ஒன்றையொன்று மிஞ்சி நிற்கின்றன. சக்தி என்றால் 'நிலாச்சோறு', சூரியன் என்றால் 'நேற்றைய காற்று', வசந்தம் என்றால் 'வசந்த நிலா', 'ராகம் சுகமானது', வெற்றி என்றால் 'விடியல்', பிறை என்றால் 'இடைவேளை', தென்றல் என்றால் 'ராகதீபம்', ஊவா என்றால் 'பத்ம தடாகம்' என அனைத்துமே சிறப்பாகவுள்ளது. இந்த நிகழ்ச்சிகளில் போட்டியும், வேகமும், விவேகமும் தெரிகின்றது. இந்நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கும் அறிவிப்பாளர்களுக்கு ஒரு சபாஷ் போடத்தான் வேண்டும். வாழ்த்துக்கள்.

பலப்பிட்டிய ஆ. ரம்ஷின்

## WikiLeaks

செய்திகளை அதன் தரம் குறையாமலும், செம்மை விலகாமலும் மக்களுக்குக் கொடுக்க வேண்டியது ஊடகங்களின் பொறுப்பு. அவ்வகையில் சம்பவ சிதறல்களை தருவதில் முன் நிற்கும் 'ரொய்டர்' இற்கு நிகராக அல்லது அதையும் விட முன்சென்று விடுமோ என்று எண்ணிக்கொள்ளக்கூடிய அளவிற்கு 'விக்கிலீக்ஸ்' எனும் தளம், இன்று மழுங்கடிக்கப்பட்ட பல விஷயங்களை மக்கள் கண்முன் காட்டி புரட்சிபடைத்துக் கொண்டிருக்கின்றது என்பது கலவையற்ற தாய்ப்பால் போன்றதே.

தி. ஸ்ரீகாந்த், கொட்டாஞ்சேனை

'ஊடக மயக்கம்' என்ற இப்பகுதிக்கு இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் நீங்கள் கேட்ட, பார்த்த மற்றும் வாசித்தவற்றின் மீதான காத்திரமான விமர்சனங்களை எழுதி அனுப்பலாம். கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்போம்.

'ஊடக மயக்கம்', 'இருக்கிறம்',
3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
மின்னஞ்சல்: irukiram@gmail.com

## கலக்கும் 'வசந்தக் கலாட்டா'

24 மணித்தியாலமும் ஒலித்துக் கொண்டிருக்கும் வசந்தம் FM இன் அனைத்து நிகழ்ச்சிகளும் புதிய மாற்றத்துடன் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக சனிக்கிழமை 3 மணி தொடக்கம் 5 மணி வரை இடம்பெறும் 'வசந்தக் கலாட்டா', நகைச்சுவை, கடிஜோக்ஸ், நேயர்களிடம் தாங்கள் யார் என்பதை சொல்லாமல் குழப்பி ஒலிபரப்புவது என்பன ரசனையாக இருக்கின்றது. ஒரு புன்னகை போதும் சோகத்தை மறக்க. ஆகவே இந்நிகழ்ச்சியைக் கேட்டால் சோகமும் மறந்து போகும்.

சுஜானா, கற்பிட்டிய

## மனதுக்கு ஆறுதல் தரும் 'நண்பனிடம் சொல்லுங்கள்'

வார நாட்களில் வெற்றியில் இரவு 8 மணி தொடக்கம் 11 மணி வரை இடம்பெறும் 'நண்பனிடம் சொல்லுங்கள்' நிகழ்ச்சி உண்மையிலேயே வானொலி வரலாற்றில் ஒரு சாதனை என்றுகூட சொல்லலாம். தங்கள் மனச்சுமையை இறக்கிவைக்க எல்லோருக்கும் ஒரு இடம் கிடைப்பதில்லை. அந்தவகையில் அந்த 3 மணி நேரமும் மனதின் சுமைகளை இறக்கிவைத்து ஆறுதல்பட நல்லதோர் சந்தர்ப்பம். நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் இஷாம் உண்மையிலேயே ஒரு நண்பனாக மாறி அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதோடு, இனி வாழ்க்கையை வாழ நம்பிக்கையூட்டும் அறிவுரைகளைக்கூட கூறுகிறார். அத்தோடு அந்நிகழ்ச்சியில் சிலர் தங்கள் முழுக்கதையையும் மனம் விட்டு நீண்ட நேரம் சொல்கின்றார்கள். வரும் நேயர்களை இரு நிமிடத்திலேயே கழற்றி விடும் இன்றைய வானொலிகளில் மத்தியில் வெற்றி பொறுமையுடன் கேட்டு ஆறுதல் அளிக்கின்றது. பாராட்ட வார்த்தையில்லை.

அருணாகரன், பேராதெனிய

## தரத்தினைப் பாருங்கள்

இன்று தனியார் தொலைக்காட்சிகளில், பாடுவதற்கு திறமையுள்ளோருக்கான பல்வேறு நிகழ்ச்சிகள் படைக்கப்பட்டு வருகின்றன. வரவேற்கத்தக்க ஒன்று. ஆனால் இந்நிகழ்ச்சிக்கு நடுவர்களாக கலந்துகொள்வோர் அனைவரும் இசையை முழுமையாக கற்றவர்களா? நான் எல்லோரையும் குறிப்பிடவில்லை. இசையை நன்கு கற்று பாண்டித்தியம் பெற்றவர்கள் போட்டியாளர்களை பெரிதாக குறை கூறுவது கிடையாது. இசைத்துறையில் நீண்டகாலம் இருப்பவர்கள் இசையை முழுமையாகக் கற்றுள்ளார்கள் என்று கூறமுடியாது. எல்லோரையும் பார்த்து 'சுருதி சரியில்லை', 'சுருதியை கொஞ்சம் கூட்ட வேண்டும்', 'குறைக்க வேண்டும்' என்றால் அவர்களுக்கு வேறு ஒன்றும் தெரியாதா? என்ற கேள்வி எழுகின்றது. திறமைக்கு முக்கியத்துவம் கொடுங்கள். புகழுக்கு முக்கியத்துவம் கொடுக்காதீர்கள்.

குமரேசன், ஹட்டன்





இலங்கையிலிருந்து மாதமிருமுறை வெளிவந்து கொண்டிருக்கும் ஜனரஞ்சக பொழுதுபோக்கு சஞ்சிகையான 'இருக்கிறம்' தற்பொழுது நாடுமுழுவதும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கென வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதி களை உள்ளிட்ட பிரதேசங்களிலிருந்து 'இருக்கிறம்' சஞ்சிகைக்கான விநியோகஸ்தர்கள் தேவைப் படுகின்றனர். இதற்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. நாடு முழுவதும் சஞ்சிகையை மொத்த மாகவோ சில்லறையாகவோ விற்பனை செய்ய முடியும். விநியோகஸ்தர்கள் தங்களது சுயவிபரங் களை கீழுள்ள எமது முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மின் னஞ்சல் மூலமாகவும் உங்களது சுயவிபரங்களை அனுப்பி வைக்கலாம்

# விநியோகஸ்தர்கள் தேவை

முகாமையாளர்,
விளம்பர சந்தைப்படுத்தல் பிரிவு, இருக்கிறம்,
03, டொரிங்டன் அவனியூ, கொழும்பு - 07
தொலைபேசி - 011 - 3150836, 011 - 2555529மின்னஞ்சல் - irukiram@gmail.co m



Jeya Offset Printers, No. 29 St`Sebastian

